விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 05 திங்கட்கிழமை (21.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 245


## காலில் விழவும் தயார் - டிலான்

(பதுளை)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பாக பேசுவதை நிறுத்துவதற்காக அமைச்சர் மகிந்த அமரவீரவின் காலில் விழவும் தான் தயாராக இருப்பதாக இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார்.

பதுளை சுதந்திரக்கட்சி செயற்பாட்டாளர்களின் ஒன்றுகூடல் நேற்று பதுளை நகரின் தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. 23

## அலங்காரக் கந்தன் இரதோற்சவம்
## வரலாறு காணாத மக்கள் பெருவெள்ளம்



23

## இராணுவ வீரர்கள் அதிகளவில் கைது

(கொழும்பு)

மீண்டும் பணிக்கு திரும்பாதிருந்த 4 ஆயிரத்து 300 இற்கும் அதிகமான இராணுவ வீரர்கள் தற்போது வரை கைது செய்யப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 18ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விஷேட நடவடிக்கையின் போது இராணுவ அதிகாரி 23

## வீட்டில் தந்தையின் இறுதிச்சடங்கு; பரீட்சைக்கு சென்ற தரம் 5 மாணவி

(கொழும்பு)

தரம் ஐந்தில் படிக்கும் மாணவி ஒருவரின் தந்தை உயிரிழந்த நிலையில் அவரது சடலம் வீட்டில் வைக்கப்பட்டிருக்கத்தக்கதாக நேற்றையதினம் இடம்பெற்ற புலமை பரிசில் பரீட்சைக்கு மகள் சென்றுள்ளார்.

இந்த மனங்களை கலங்க வைக்கும் சம்பவம் சூரிய 23

## அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து
# அமைச்சர் டெனீஸ்வரன் 6 மாதம் இடைநிறுத்தம்



## ரெலோ ஒன்றுகூடி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து ஆறுமாத காலப் பகுதிக்கு இடைநிறுத்தி வைப்பதாக தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அறிவித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## மாணவனுக்கு நேர்ந்த அவலம்

(கொழும்பு)

காட்டு யானைகளை விரட்டுவதற்காக பயன்படுத்தப்படும் வெடி பொருள் வெடித்ததில், நேற்று நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற இருந்த மாணவர் ஒருவர் காயமடைந்து 23

## மத்திய வங்கி ஊழல் மோசடி
## குற்றஞ்சாட்டப்பட்டோர் விசாரிக்கப்படவேண்டும்
## ஜே.வி.பி. வலியுறுத்து

(கொழும்பு)

மத்திய வங்கி ஊழலுடன் தொடர்புபட்ட அர்ஜுன அலோசியஸ் யாருக்கெல்லாம் பணம் கொடுத்தார்? யாருக்கெல்லாம் வீடுகள் வாங்கிக் கொடுத்தார்? யாருக்கெல்லாம் காணிகள் வாங்கிக் கொடுத்தார்? என்ற விபரங்களை முன் 23

## 27 இந்தியர்கள் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

குடிவரவு, குடியகல்வு சட்டங்களை மீறி நாட்டில் தங்கியிருந்த 27 இந்திய பிரஜைகள் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் புலனாய்வு விசாரணைப் பிரிவு மற்றும் விசாரணைப் பிரிவு மேற்கொண்ட தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 19 பேர் சாஸ்திரம் கூறும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளதுடன் 6 பேர் வர்த்தகம் செய்து வந்துள்ளனர்.

மேலும் இரண்டு பேர் வர்த்தக நிலையங்களில் தொழில் புரிந்து வந்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்தியர்களில் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி இருப்பதாகவும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் புலனாய்வு விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது. (செ-9)

## மண்சரிவு அபாய எச்சரிக்கை அமுலில்

(கொழும்பு)

மூன்று மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு 23

## ஜெனிவாவில் மீள இலங்கை விவகாரம்



### பென் எமர்சனின் அறிக்கையில் எதிர்பார்ப்பு

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 35ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 11ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை விவகாரமும் மீண்டும் கவனத்தில் எடுக்கப்படவுள்ளது.

ஜூலை மாதத்தில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த ஐ.நாவின் மனித உரிமை 23

## யாழ். பல்கலை மாணவன் மர்மக் காய்ச்சலால் மரணம்



(யாழ்ப்பாணம்)

இரண்டு நாட்களாக தொடர்ந்த மர்ம காய்ச்சலின் காரணமாக யாழ்.பல்கலைக் கழக மாணவன் ஒருவர் நேற்றைய தினம் திடீரென உயிரிழந்துள்ளார். வவுனியா, மதகு வைத்த குளம் பகுதியை சேர்ந்தவரும், யாழ். பல்கலைக்கழக 23

முதலீட்டாளர்கள் கருத்துக்களம்

யாழ்ப்பாணம்

அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்

துறைசார் நிபுணர்களின் சிறப்புக் கருத்துப் பகிர்வுகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சிறப்புப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்.

அனுமதி இலவசம் - மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள்

எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 முதல் 11.30 வரை
Tilko Jaffna City Hotel - Jaffna
முன்பதிவுகளுக்கு :- 021 222 455, 077 782 2014 &
Type Stock and SMS

CSE
COLOMBO STOCK EXCHANGE
(K-9389)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## திருமதி குணராஜா பரமேஸ்வரி

தாளையடி திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட குணராஜா பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் (19.08.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சுந்தரம் குணராஜாவின் அன்பு மனைவியும் அமரர்களான செல்லையா பாக்கியம் தம்பதியரின் மகளும் அமரர்களான சுந்தரம்-சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும் மகாலக்சுமியின் சகோதரியும், அமரர்களான நவரத்தினம், நீலாய தாட்சி, றாஜேஸ்வரி மற்றும் சோதிமலர், சரோஜினிதேவி, சத்தியதேவி ஆகியோரின் மைத்துனியும் ரவீந்திரராசன், சீதாராணி (ஜேர்மன்), வசுந்திராதேவி (யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம்), வள்ளுவன் (நோர்வே), வாசுகி (யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி), செங்குட்டுவன் (கிறீன் விஷ்வா லங்கா பாம்), நக்கீரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), ஆனந்த செந்தூரன் (யாழ்.வைத்தியசாலை-திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மநாகபூசனி, பரமானந்தன் (ஜேர்மனி), அம்பிகைபாலன் (பாலசாயி), சாயீஸ்வரி (நோர்வே), சுதாகரன், றேமளா, நிரஞ்ஜினி, நளாயினி (யாழ்.இந்துக் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் குந்தவி, மயூரன், மதுமதி, ராம், அபிராமி, சங்கீர்த்தனன், பிரகதீசன், நந்திதா, ஆதித்தியன், சாருகேசன், கவிசாயினி, ஜனனி, சுருதி, கேதாரநாத், லக்ஸ்மிநாத், சாம்பவி, சாயிப்பிரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2017) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாளையடி லேன், திருநெல்வேலி
தொடர்புகளுக்கு:021 222 9621, 077 703 3039

தகவல்:
குடும்பத்தினர்
(C-9386)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்
1936 – 04 – 25



ஆண்டவன் அடியில்
2017 – 07 – 23

எமது அன்புத் தெய்வம்

## திருமதி துரைராசா சிவபாக்கியம்

சித்தரிப்பு தோற்றத்துடனும்
சிரித்த முகத்துடனும்
சிட்டுப் போன்ற குடும்பத்திலே
சிகர விளக்காய் தோன்றினீரே
பண்பான பழக்க வழக்கங்களுடன்–நாம்
பாரினிலே வாழ வழிப்படுத்தினீரே–நீர்
போன திசை தேடுகின்றோம்
பாவெடுத்து பாடுகின்றோம்
நாம் ஒன்று நினைக்க விதி ஒன்று தானெழுத
வதிவிடமே கலகலக்கும் நீர் இருந்தால்
வதிவிடமே வெறிச்சோடிக்கிடக்குதம்மா–நீ
வதிவிடம் தேடி வருவாயா?
நாதமணி ஓய்ந்ததென்ன
நிலவதுவும் சாய்ந்ததென்ன
எழில் முகத்தை காணவில்லையே
இனி எங்கு உம்மைக் காண்போமோ?
ஓம் சாந்தி...! சாந்தி...!! சாந்தி...!!!

எங்கள் வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டி எம்மை ஆழாத்துயரில் விட்டுவிட்டு சென்ற எங்கள் குடும்ப குலவிளக்கு திருமதி துரைராசா சிவபாக்கியம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உதவி புரிந்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர்க்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை 22.08.2017 அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.185, விவேகானந்த நகர்,
கிளிநொச்சி

குடும்பத்தினர்
0774054597

அம்பாள் துணை



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

## மஹோற்சவ விஞ்ஞாபனம்–2017

ஏவிளம்பி வருடம்
**23.08.2017 முதல் 03.09.2017 வரை**

| | |
|---|---|
| கொடியேற்றம்:- | 23.08.2017 புதன்கிழமை முற்பகல் 10.00 மணி |
| திருமுறைத் திருவிழா:- | 25.08.2017 வெள்ளிக்கிழமை மாலை 06.00 மணி |
| திருமஞ்சத் திருவிழா:- | 28.08.2017 திங்கட்கிழமை மாலை 06.00 மணி |
| வேட்டைத்திருவிழா:- | 31.08.2017 வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணி |
| கைலாச வாகன வீதிவலம்:- | 31.08.2017 வியாழக்கிழமை மாலை 06.00 மணி |
| சப்பறத்திருவிழா:- | 01.09.2017 வெள்ளிக்கிழமை மாலை 06.00 மணி |
| தேர்த்திருவிழா:- | 02.09.2017 சனிக்கிழமை காலை 09.00 மணி |
| தீர்த்தத்திருவிழா:- | 03.09.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி |
| கொடியிறக்கம்:- | 03.09.2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 06.00 மணி |
| பிராயசித்த அபிஷேகம்:- | 04.09.2017 திங்கட்கிழமை காலை 06.00 மணி |
| வைரவர் பொங்கல்:- | 04.09.2017 திங்கட்கிழமை மாலை 04.00 மணி |

*நிர்வாக சபை*
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

(சி-9385)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

2017.08.21

## செல்லையா பானுதேவன்

(வடக்கு சங்க முகாமையாளர்
பனை தென்னை கூட்டுறவுச் சங்கம்
வலைஞர்மடம், முல்லைத்தீவு)



பிறப்பு
*06.06.1969*

இறப்பு
*21.08.2012*

காத்திருப்போம் உறவே
காலம் உள்ளவரை
காலத்தின் சுற்றுகையால்
எமைப் பிரிந்து சென்ற உறவே
மீண்டும் நீங்கள் எம்முடன்
இணையும் பொழுதிற்காய்
என்றும் காத்திருப்போம்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

மனைவி,
பிள்ளைகள்

செல்வபுரம்,
முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தலைமைகள் கூட்டரசை அமைத்தவுடன் இன ஒற்றுமை வந்துவிடாது

(ஏறாவூர்)

அரசியல் தலைமைகள் கூட்டரசாங்கத்தை அமைத்தவுடன் இன ஒற்றுமை வந்துவிட மாட்டாது என நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நகர சபைக் கட்டடத்தை நேற்றுக்காலை பிரதமருடன் இணைந்து திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தத்திற்குப் பின்னர் அபிவிருத்தி என்ற விடயத்தில் இனங்கள் மத்தியிலே புரிந்துணர்வு இல்லை. அபிவிருத்திகளைப் பகிர்ந்து கொள்வதிலே இனங்களுக்கிடையில் இன்னமும் சந்தேகம் நிலவுகின்றது.

அரசியல் தலைமைகள் கூட்டரசாங்கத்தை அமைத்தவுடன் இன ஒற்றுமை வந்து விடமாட்டாது. அது அடிமட்ட சமூக மக்களின் புரிந்துணர்விலிருந்து வர வேண்டும்.

அரச ஊழியர் நியமனங்களில், பதவி நிலைகளில், நிறைவேற்று அதிகாரங்களில் சமத்துவம் பேணப்பட வேண்டும்.

இப்படிப் பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியில்தான் ஒரு நெருக்கடியான ஆட்சியை எங்களுடைய கிழக்கு மாகாண முதலமைச்சர் சகல கட்சிகளும் சேர்ந்த ஒரு தேசிய அரசாங்கத்தை கிழக்கு மாகாணத்திலே நடத்திக் கொண்டு வருகின்றார்.

தமிழ் மக்களுக்கு உரிய பங்கு அபிவிருத்திக்குப் போக வேண்டும் என்பதற்காக எனது அமைச்சினூடாக 200 மில்லியன் ரூபாவை மட்டக்களப்பு நகரிலே உட்கட்டமைப்பு வசதிகளுக்காக செலவு செய்திருக்கின்றோம்.

மேலும் வேண்டுகோள்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அவற்றையும் பரிசீலனை செய்து நிறைவேற்றித் தர தயாராக இருக்கின்றோம்.

அதேபோல, கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களின் குடிநீர் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பல்லாயிரம் மில்லியன் ரூபாய் செலவிலே திட்டங்கள் அமுலாகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிட்டிய காலத்தில் அரசியலிலே ஏராளமான சவால்களை எதிர் கொண்டது.

முன்னாள் ஆட்சியாளர்களின் எடுபிடியாக இருந்த இந்த ஏறாவூரைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவர் பொதுத் தேர்தலுக்கு முன் தான் பதவியை இராஜினாமாச் செய்வதாக ஒரு நாடகமாடினார்.

முஸ்லிம் காங்கிரஸை மக்கள் மத்தியிலே செல்வாக்கற்றதாக ஆக்க வேண்டும் என்பதுதான் அவரது உள்நோக்கம் தொடர்ந்து 3, 4 முறை தேசியப்பட்டியல் ஆசனம் கொடுத்தும் மீண்டும் தனக்கு தேசியப்பட்டியல் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் அது கிடைக்காமல் போகும் என்ற ஆதங்கத்தினால் மீண்டும் கட்சிக்குள் குழிபறிக்கிற கைங்கரியத்தை அவர் செய்து பார்த்தார்.

அந்த நேரத்திலே எங்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்க்கு கை கொடுத்தவர் இந்த ஊரைச் சேர்ந்த தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா. அதனை பொறுப்புணர்ச்சியோடு சொல்லி வைப்பதில் நான் பெருமைப் படுகின்றேன்.

மக்கள் சில கேள்விகளை எழுப்புவதால் நாங்கள் இதனைக் குறிப்பிட வேண்டும். முதலமைச்சரின் வெற்றியில் அலிஸாஹிர் மௌலானாவின் பங்கும் உண்டு.

கட்சித் தலைவர் என்கின்ற வகையில் நான் கட்சிக்குள் சலசலப்புக்கள் ஏற்படாமல் இருக்கின்ற விடயத்திலே வெளிப்படையாக சில மனஸ்தாபங்களைக் கையாள வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காத்தான்குடி நகர சபையின் புதிய கட்டடத்தை பிரதமர் திறந்து வைப்பு





கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் அழைப்பின் பேரில் வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, காத்தான்குடி நகர சபையின் புதிய கட்டடத்தை, நேற்று திறந்து வைத்தார்.

மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா, முன்னாள் பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சராக இருந்தபோது, பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ஒதுக்கப்பட்ட சுமார் 50 மில்லியன் ரூபாய் செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வின், சிறப்பு அதிதிகளாக அமைச்சர் ரவூப் ஹக்கீம், அமைச்சர் ஜோன் அமரதுங்க, கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் கலபதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புதிய கட்டடத்தின் நினைவுக்கல்லை திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வை, மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாரூக் ஆகியோர் புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வாக்குறுதிகளை பரிபூரணமாக நிறைவேற்றிய பின்னரே தேர்தல்

## அமைச்சர் கயந்த தெரிவிப்பு



அரசாங்கத்தின் இருவருட இணைந்த ஆட்சியில் மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில் அதிகமானவற்றை நிறைவேற்றி மக்களின் நம்பிக்கையையும், சர்வதேசத்தின் அபிமானத்தையும் வென்றெடுத்துள்ளோம்.

நாம் கடந்த காலத்தில் மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில் எஞ்சியவைகளையும் பரிபூரணமாக நிறைவேற்றிய பின்னரே அடுத்த தேர்தலில் களமிறங்குவோம் என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நல்லூர்க்கந்தன் திருவிழாவைக்கண்டு பிரமித்துப்போன அமெரிக்கத் தூதுவர்




நல்லூர் கந்தன் தேர்த் திருவிழாவையும், அங்கு திரண்ட மக்களின் பக்தியையும் கண்டு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் பிரமித்துப் போயுள்ளார். நல்லூர் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்களின் நம்பிக்கை, கலா சாரம் மற்றும் பக்தி என்பவை மிகவும் சிறப்பான ஒன்று" என தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று சிறப்பாக இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஜனாதிபதியை சந்திக்கும் பல கட்சித் தலைவர்கள்

அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் இன்று சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களை பிற்போட முயற்சிக்கப்படுகின்றமை குறித்து முறையிட்ட கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர்.

வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் ஆயுட்காலம் விரைவில் நிறைவடையவுள்ளது.

இந்த நிலையில், தேர்தலை பிற்போடுவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை குறித்து பல கட்சிகள் அதிருப்தி வெளியிட்டு வருகின்றன.

எனவே, இது தொடர்பில் இன்று திங்கட்கிழமை கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியை சந்தித்து பேசவுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியதாக அவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

# தாஜுடீன் கொலை தொடர்பான பல தகவல்கள் வெளியாகின

பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் கொலை சம்பந்தமாக விசாரணைகளை நடத்தி வரும் குற்றப் புலனாய்வு திணைக்களம், இதுவரை நடத்திய விசாரணைகளுக்கு அமைய கொலைக்கான திட்டம், அந்த திட்டத்தை செய்து முடித்த நபர்கள், கொலையின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பதை கண்டறிந்துள்ளனர்.

இந்த குற்றச் செயலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களுக்கு தகுதி தராதரம் பாராது கைது செய்யப்படுவார்கள் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்களம் கண்டறிந்த தகவல்கள் குறித்து தற்போது விரிவான விசாரணைகளை நடத்தி வருகிறது.

குற்றப் புலனாய்வு திணைக்களம் கண்டறிந்த இரகசிய தகவல்கள் குறித்து நீதிமன்றத்திற்கு அறிவித்து, நீதிமன்றத்தின் அனுமதியுடன் சந்தேக நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

கொலை தொடர்பாக தாஜுடீனின் உறவினர்கள் சந்தேகிக்கும் நபர்கள், கொலைக்கு உறுதுணையாக இருந்தனர் என்று சந்தேகிக்கும் நபர்கள், குற்றம் தொடர்பான தகவல்களை அறிந்தவர்கள் என சந்தேகிக்கும் நபர்கள், தாஜுடீனுக்கு நெருக்கமானவர்கள், அவருடன் நெருங்கி பழகியவர்கள் உட்பட பலரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் கொலையுடன் தொடர்புடைய நபர்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களம் தெளிவான முடிவுக்கு வந்துள்ளது.

இதற்கமைய விரைவில் சந்தேக நபர்கள் கைது செய்யப்படுவார்கள். பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் நாராஹென்பிட்டி சாலிகா மைதானத்திற்கு அருகில் அவரது காருக்குள் கொடூரமாக கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டிருந்தார்.

விபத்தில் அவர் உயிரிழந்ததாக அப்போது பொலிஸ் விசாரணைகளில் கூறப்பட்டது.

இதனையடுத்து புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் நடத்திய விசாரணைகளில் தாஜுடீன் கொலை செய்யப்பட்டமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

கொலையின் பின்னணியில், ஹெவ்லொக் ரக்பி விளையாட்டு மைதானத்தை 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கும் திட்டம் உட்பட சில காரணமாக இருந்தமைக்கான சந்தேகத்தை ஏற்படுத்தும் தகவல்களும் கிடைத்துள்ளன. குற்றப் புலனாய்வு திணைக்களம் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இங்கிலாந்து இன்னிங்ஸ் வெற்றி

அணி வீரர்களின் அசத்தலான செயற்பாட்டால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி, இன்னிங்ஸ் மற்றும் 209 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் (பகலிரவு) போட்டி கடந்த 17ஆம் திகதி பர்மிங்காமில் உள்ள எட்ஜ்பஸ்டனில் நடந்தது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 514/8 (டிக்ளேர்), மேற்கிந்தியத் தீவுகள் 168 ஓட்டங்கள் எடுத்தன.

பொலோ-ஒன் அடிப்படையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, மீண்டும் இங்கிலாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது.

பவெல் (10), கைல் ஹோப் (12), ஷாய் ஹோப் (4) ஏமாற்றினர். கிரெய்க் பிராத்வைட் (40) மட்டும் ஆறுதல் தந்தார். ஸ்ரூவேர்ட் பிரோட் 'வேகத்தில்' ரொஸ்டன் சேஸ் (24), ஷேன் டவ்ரிச் (5), அணித் தலைவர் ஹோல்டர் (0) ஆட்டமிழந்தனர்.

இதனால் இரண்டாவது இன்னிங்சில், மேற்கிந்தியத் தீவுகள் அணி 137 ஓட்டங்களுக்கு சுருண்டு, இன்னிங்ஸ் தோல்வியடைந்தது. இங்கிலாந்து சார்பில் பிரோட் 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

இவ்வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் அலைஸ்டர் குக் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் எதிர்வரும் 25ஆம் திகதி லீட்சில் ஆரம்பமாகிறது.

**3ஆவது சிறந்த வெற்றி**

பர்மிங்காம் டெஸ்டில், இன்னிங்ஸ் மற்றும் 209 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற இங்கிலாந்து அணி, டெஸ்ட் அரங்கில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக தனது 3ஆவது சிறந்த இன்னிங்ஸ் வெற்றியை பதிவு செய்தது.

ஏற்கெனவே, லீட்ஸ் (2007, இன்னிங்ஸ் மற்றும் 283 ஓட்டங்கள்), ஓவல் (1957, இன்னிங்ஸ் மற்றும் 237 ஓட்டங்கள்) டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக இங்கிலாந்து அணி சிறந்த வெற்றியை பதிவு செய்திருந்தது.

**19 விக்கெட்டுக்கள்**

மூன்றாம் நாள் ஆட்டத்தில், முதல் இன்னிங்ஸை 41/1 ஓட்டங்கள் என்ற நிலையில் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதல் இன்னிங்ஸில் 9, இரண்டாவது இன்னிங்சில் 10 என ஒரே நாளில் மொத்தம் 19 விக்கெட்டுகளை இழந்தது.

# தவான் ஜோர்; இந்தியா வெற்றி



சுழற்பந்துவீச்சாளர்களின் அசத்தலான செயற்பாடும் ஷிகர் தவான், அணித் தலைவர் ஹோலியின் துடுப்பாட்டமும் கைகொடுக்க இந்திய அணி 127 பந்துகள் மீதமிருக்கையில் 9 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் ஒரு நாள் போட்டி நேற்று தம்புள்ளையில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி தலைவர் விராட் ஹோலி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**அக்சர் அசத்தல்**

இலங்கை அணிக்கு நிரோஷன் டிக்வெல, குணதிலக ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்கு 74 ஓட்டங்கள் சேர்த்த போது குணதிலக (35) ஆட்டமிழந்தார். பொறுப்பாக ஆடிய டிக்வெல அரைசதமடித்தார்.

இவர், 64 ஓட்டங்கள் எடுத்த போது கேதர் ஜாதவ் பந்தில் ஆட்டமிழந்தார். அக்சர் படேல் பந்தில் குசல் மெண்டிஸ் (36) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த உபுல் தரங்க (13), கபுகேதர (1), ஹசரங்க (2), திசர பெரேரா (0), மலிங்க (8), பெர்ணான்டா (0) ஏமாற்றினர்.

இதனால் இலங்கை அணி, 43.2 ஓவர்களில் 216 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மத்யூஸ் (36) ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் இந்தியா சார்பில் அக்சர் படேல் 3, பும்ரா, சாகல், கேதர் ஜாதவ் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**தவான் அபாரம்**

சுலப இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ரோகித் சர்மா (4) ஏமாற்றினார். அபாரமாக ஆடிய ஷிகர் தவான், சதமடித்தார். மறுமுனையில் அசத்திய அணித் தலைவர் ஹோலி அரைசதமடித்தார்.

இந்திய அணி 28.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை (220) 9 விக்கெட்டுக்களால் அடைந்தது.

தவான் (132), ஹோலி (82) ஆட்டமிழக்காமல் இருந்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் தவான் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி பல்லேகலேயில் நடக்கிறது.

# அரசியல் கைதிகள் மூவர்
## 2ஆவது நாளாக உணவு தவிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளை பழிவாங்கும் செயலை கண்டித்து அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் மூன்று பேர் இன்றைய தினம் இரண்டாவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009ஆம் ஆண்டு கைது செயயப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த இராசதுரை திருவருள் (வயது 40), கரணவாயை சேர்ந்த மதியரசன் சுலக்ஸன் (வயது 30), நாவலப்பிட்டியை சேர்ந்த கணேசன் தர்சன் (வயது 26) ஆகியோருக்கு கடந்த 2013ஆம் ஆண்டில் இருந்து வவுனியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்த வருடம் குறித்த வழக்கு நிறைவடையும் நிலையில் இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தினர் தெற்கில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

எனவே மீண்டும் வேறு நீதிமன்றங்களுக்கு குறித்த வழக்கை மாற்றினால் தொடர்ச்சியாக இந்த வழக்கு இடம்பெறும் என்றும் இது தண்டனை இல்லாமல் தண்டனை கொடுக்கும் நடவடிக்கையாகும்.

இது அரசியல் கைதிகளை பழிவாங்கும் நடவடிக்கை என தெரிவித்து, தமது வழக்கு வவுனியாவிலேயே நடைபெற வேண்டும் என்றும், வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றக் கூடாது என்றும், கோரி உரிய பதில் கிடைக்கும் வரையில் மேற்குறித்த அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (செ-9)

# மாணவர்களுக்கான சீருடை வவுச்சர் அடுத்த மாதம்

அடுத்த வருடம் வழங்கப்படவுள்ள பாடசாலை மாணவர் சீருடைக்கான வவுச்சர் உதவித்தொகை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் பாடசாலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் இம்முறை தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சப்பாத்துகளை கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்களும் வழங்கப்படும் என்றும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சலுகையை பெற்றுக் கொள்வதற்கு நாடளாவிய ரீதியில் பத்து இலட்சம் மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் கல்வி கற்று வரும் சுமார் 42 இலட்சம் மாணவர்களுக்கு இலவச சீருடைக்கான வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளமை இங்கு [illegible]. (செ)

# முல்லை.வன்னிவிளாங்குளம்
## மாவீரர் துயிலும் இல்லத்தில் மக்கள் நேற்று சிரமதானம்



(குருமன்காடு)

வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்று மக்களால் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் பகுதியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லம் கடந்த காலத்தில் படையினரின் முகாமாக காணப்பட்டது. மக்களின் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் அங்கிருந்து படையினர் வெளியேறினர்.

இந்நிலையில் ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் பிரதேச மக்களும் இணைந்து நேற்று காலை மாவீரர் துயிலும் இல்லத்தை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

அங்கு நிறுவப்பட்டிருந்த மாவீரர்களின் நினைவுக் கற்கள் அனைத்தும் படையினரால் அகற்றப்பட்ட நிலையில் அங்கு உள்ள வேப்பமரம் ஒன்றின் கீழ் காணப்பட்ட மாவீரரின் நினைவு கல் ஒன்றினை வைத்து சுடர் ஏற்றி மலர் தூவி மக்கள் வணக்கம் செலுத்தியுள்ளார்கள்.

இதில் சுடரினை மாவீரர் கனிச்சுடரின் தாயார் ஏற்றிவைக்க துப்புரவு பணிக்காக வருகைதந்த [illegible] செலுத்தியிருந்தனர். (செ-[illegible])

# கண்ணீர் அஞ்சலி



வேலணை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி பொ.சர்மிளா அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு.மு.பொன்னையா**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

*சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்*
*பிரதேச செயலகம், வேலணை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் வெளியான சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை இரசாயனவியல் வினாப்பத்திரம் வெளியான சம்பவம் தொடர்பில் விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்கள மட்டத்திலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் கம்பஹா பிரதேசத்தில் பரீட்சை முடிந்து வெளியேறும் போது மாணவர்களுக்கு வழங்கப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றில் வினாப்பத்திரத்தில் வந்த 3 வினாக்கள் அவ்வாறே காணப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் குறித்த வினாப்பத்திரம் பரீட்சைக்கு முன்னர் வெளியிடப்பட்டிருக்கலாம் என மாணவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# என்னை கைது செய்ய முயற்சிக்கின்றனர்: நாமல் கவலை

தம்மை கைது செய்ய அரசாங்கம் முயற்சிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறை கம்புறுபிட்டி பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தம்மை கைது செய்வதற்கு அரசாங்கம் சில முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வரும் அரசியல்வாதிகளை கைது செய்ய அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# நெவில் பெர்னாந்தோ வைத்தியசாலை சம்பந்தமான ஒப்பந்தம் பாராளுமன்றத்திற்கு

## அமைச்சர் ராஜித தகவல்

நெவில் பெர்னாந்தோ வைத்தியசாலையை அரசாங்கம் பொறுப்பேற்பது சம்பந்தமாக விரிவான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அதனை சட்டமூலமாக பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்வதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை நிர்மாணிக்கப்படும் போது பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட சட்டமூலம் போன்றே நெவில் பெர்னாந்தோ வைத்தியசாலை தொடர்பிலும் சட்டமூலம் தாக்கல் செய்யப்பட உள்ளதாக அமைச்சர் கூறினார்.

அமைச்சரவை எடுத்த தீர்மானத்திற்கு அமைய ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நெவில் பெர்னாந்தோ வைத்தியசாலையின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டதுடன், அத்றகாக முத்தரப்பு நோக்கங்களை வெளிப்படுத்தும் பத்திரத்தில், சுகாதார அமைச்சு, தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனம் மற்றும் இலங்கை வங்கி ஆகியன ஒப்பமிட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

அந்த நோக்கங்களை உள்ளடக்கிய பத்திரத்திற்கு மேலதிகமாக விரிவான பத்திரம் ஒன்று சட்டமா அதிபரினால் தற்போது நகல் வடிவில் வரையப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

நகல் வடிவில் உள்ள பத்திரம் உடன்படிக்கை வடிவத்திற்கு மாற்றப்பட்டதன் பின்னர் அந்த விரிவான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதுடன், அதன்பின்னர் அதனை சட்டமூலமாக பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்வதாக அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# பாடசாலைகளில் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை

(கரணவாய்)

கரவெட்டியில் நான்கு பாடசாலைகளில் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பியந்த தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் ரணசிங்க விமலவீரவும் மற்றும் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து புகையூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



நேற்று நடைபெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையை முன்னிட்டு இந்த புகையூட்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது. (இ-60)

# சாரதிக்கு 14,500 ரூபா தண்டம்

மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 14,500 ரூபாய் தண்டப் பணம் விதித்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ. யூட்சன் உத்தரவிட்டார். கடந்த 9 ஆம் திகதி இளவாலைச்சந்தியில்வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10-104)


## முதலாம் ஆண்டு நினைவு அழைப்பு



கடந்த 01.09.2016 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்.

**ஸ்ரீஸ்கந்தராசா சந்திரபாரதி (றதி)**

அவர்களின் ஓராண்டு நினைவுநாள் 21.08.2017 இன்று திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி, சில்வா வீதி, வட்டக்கச்சி.
0772616798
(184)
இங்ஙனம் குடும்பத்தினர்.


# அதிகாரங்களை கோரும் இராஜாங்க அமைச்சர்கள்

இராஜாங்க அமைச்சர்களுக்கு அதிகாரங்களை பகிர அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்காதுள்ளதாக இராஜாங்க அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, தேசிய அரசாங்கம் சம்பந்தமான உடன்படிக்கை திருத்தப்படவில்லை என்றால், அரசாங்கத்தில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படுவது என அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக கூறப்படுகிறது.

துமிந்த திஸாநாயக்க மற்றும் மகிந்த அமரவீர ஆகிய அமைச்சர்களை தவிர ஏனைய அமைச்சர்கள் சொற்ப அளவிலேயே தமது அதிகாரங்களை இராஜாங்க அமைச்சர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

பிரதியமைச்சர்களுக்கு இந்த பிரச்சினை இருந்த போதிலும் அவர்கள் இது வரை கடுமையான தீர்மானங்கள் எதனையும் எடுக்கவில்லை.

இன்றுடன் தேசிய அரசாங்கம் தொடர்பாக இரண்டு பிரதான கட்சிகள் செய்து கொண்ட உடன்படிக்கை காலாவதி ஆகின்றது.

இதன் பின்னர் உடன்படிக்கையை நீடிக்க வேண்டுமாயின் தமது அதிகாரங்கள் கிடைக்கும் வகையில் அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர்கள் கூறியுள்ளனர். (இ-7)

# இராசி பலன்

21.08.2017

(ஆவணி 05, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.05மணிக்கு
அமாவாசை பின்னிரவு 12.59 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 5.19 மணிவரை
சுபநேரம் 12.55-01.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
நல்லைக் கந்தன் தீர்த்தம்,
அமாவாசை விரதம்.

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூராடம், உத்தராடம்<br>மாலை 5.11 மணிக்கு<br>சிங்-சந் | | ராகு, செவ்.சுக், புத.சந் |
| கேது | | | சூரி |
| | சனி | | குரு |

**மேடம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களின் வருகையுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெரியோர்களின் ஆதரவுண்டு.

**இடபம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் புதிய வர்க்கத்தினரின் சந்திப்பு இடம் பெறலாம், தேக நலனில் கொஞ்சம் அக்கறை தேவை.

**மிதுனம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாடு காரிய வெற்றி தரும், ரோகபயமுண்டு.

**கடகம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறும், சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், திடீர் பயணமொன்று ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெறுவீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**துலாம்:** குடும்பத்தவர்களின் ஒத்துழைப்பால் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**தனுசு:** அதிகாரிகள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம்,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம்.



**மகரம்:** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்,புதிய பொருட் சேர்க்கையுண்டு,நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்,போசன நன்மையுண்டு.


**கும்பம்:** கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக பேசி சமாளிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும்,தேகாரோக்கியம் சீராகும், செய்தொழில் மேன்மை யுண்டு.

**மீனம்:** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள் தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம்,பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தனைத் தேரில் காண
# அலைகடலென ஆர்ப்பரித்த அடியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


95

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



புங்குடுதீவைச் சேர்ந்த ஆசிரியை நகுலா என்பவரைக் காணவில்லை என உறவினர்கள் தேடுகின்றனர்.

காணவில்லை என்று அவரின் புகைப்படம் பொறிக்கப்பட்டு யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படுகிறது. கூடவே மனிதவுரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் என முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. எந்தப் பயனும் கிடைக்கவில்லை. சில வாரங்கள் கடந்து புங்குடுதீவில் சங்கத்தாகேணி என்ற குறிச்சியில் உள்ள கிணற்றொன்றில் இருந்து நகுலாவின் உடல் மீட்கப்படுகிறது.





இளம் ஆசிரியை நகுலாவின் மரணம், அதற்கான காரணம் என்ன என்ற கேள்விக்கு இன்றுவரை விடைகிடைக்கவில்லை.

சாரதாம்பாள், தர்சினி, நகுலா என்ற இளம் பெண்களின் கொலைப் பட்டியலில் வித்தியாவும் சேர்ந்து கொண்டபோதுதான் மக்கள் விழிப்படைந்து கொண்டனர்.

## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

13.05.2015 காலை 7.30 மணிக்கு வித்தியா தனது பாடசாலையான புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்குச் செல்லத் தயாரானார்.

அண்ணன் நிசாந்தனின் உதவியோடு பாடசாலைக்குச் செல்வது வழமையாயினும் அண்ணனுக்கு அவசர வேலையாயின் வித்தியா துவிச்சக்கரவண்டியில் தனியாகச் சென்று விடுவார். துணிச்சலான அந்த மாணவி வித்தியா அன்றைய தினமும் தனியாக துவிச்சக்கரவண்டியில் செல்லவேண்டியதாயிற்று.

காலை 7.30 மணி தனது பெற்றோரிடம் விடைபெற்றுக் கொண்டு வித்தியா துவிச்சக்கர வண்டியில் செல்கிறார். வித்தியாவின் இறுதிவிடை அதுதான் என்பதை அந்தப் பெற்றோர்கள் அறிந்திருக்கவில்லை.

என்ன செய்வது 3 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கு வித்தியா செல்ல வேண்டும். பற்றைகளும் பாழடைந்த வீடுகளும் வெட்டவெளிகளுமே வித்தியா செல்லும் பாதைகளின் அலங்கரிப்புகள்.

காலை 8 மணிக்கெல்லாம் பாடசாலை மாணவர்கள் காலைப் பிரார்த்தனைக்காகக் கூடிவிடுகின்றனர். உயர்தரத்தில் கலைத்துறையில் கல்வி கற்கும் வித்தியா அன்று வந்திருக்கவில்லை. வித்தியா ஏன் வரவில்லை என்ற கேள்விகள் எழுவதற்கு நியாயமில்லை. காலைப் பிரார்த்தனை, உடற்பயிற்சி என்ற கடமைப்பட்டியல்களில் பாடசாலை சுறுசுறுப்படைந்திருந்தது. வரவு இடாப்பில் பதிவு செய்யும் போதுதான் வித்தியா அப்சன்ட் (Absent) என்ற பதில் ஏனைய மாணவர்களிடம் இருந்து வருகிறது.

இன்று வராத வித்தியா, நாளையல்ல இனி எந்தக் காலத்திலும் வரமாட்டார் என்பதை அந்த வகுப்பாசிரியரும் மாணவர்களும் அறிந்திருக்க நியாயமில்லை.

அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை நிறைவடைகிறது. பாடசாலைக்கீதம் இசைத்து முடிய மாணவர்கள் வீடு செல்லும் ஆர்வத்தோடு கலைகின்றனர். நாளைய விடியல் வித்தியாவின் இழப்புப் பற்றிய செய்தியாக இருக்கும் என்று எவரும் நினைத்திலர்.

பாடசாலை நிறைவடைந்ததும் வீட்டிற்கு நேராக வந்துவிடுகின்ற வித்தியாவைக் காணவில்லை. வித்தியாவின் வீட்டில் மெதுவாகப் பதற்றம் தொடர்கிறது. பிற்பகல் 3.30 மணி. இன்னமும் வித்தியா வீடு வரவில்லை. தேடுதல் தொடர்கிறது. வித்தியா சென்ற வீதியில் தேடுதல் தொடர்கிறது.

பாடசாலை சென்று விசாரிப்பதற்கு அங்கு எவரும் இல்லை. மாலை 6 மணி தாண்டி விட்டது. இனிப் பொலிஸில் முறையிடுவதே ஒரே வழி என்ற முடிவோடு வித்தியாவின் பெற்றோர் குறிகட்டுவானில் உள்ள பொலிஸ் நிலையத்திற்குச் செல்கின்றனர்.

இந்தச் சம்பவங்கள் எதையும் நாங்கள் எடுப்பதில்லை. நீங்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸில் சென்று முறையிடுங்கள் என்று குறிகட்டுவானில் உள்ள பொலிஸ் கூறிவிட, வித்தியாவின் உறவுகள் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்குச் செல்கின்றனர்.

தீவகத்தின் பெரும் பிரதேசத்தை அந்தப் பொலிஸ் நிலையம் மட்டுமே பொறுப்பெடுத்துக் கொண்டுள்ளது.

பாடசாலைக்குச் சென்ற மாணவி வித்தியாவைக் காணவில்லை என்று பெற்றோர் கூறியபோதும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் கூறிய பதில் அந்தப் பெற்றோரின் ஏக்கத்தில் விளையாடுவது போல இருந்தது. வித்தியா தனக்குப் பிடித்த பெடியனோடு போயிருப்பார். விடிய வந்து விடுவார். இதுவே அந்தப் பொலிஸாரின் பதில்.

பிள்ளையைக் காணாமல் ஏங்கித் தவித்து நிற்கும் அந்தத் தாய்க்கு இந்த வார்த்தைகள் எப்படி இருந்திருக்கும்.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதயாத்திரையாக சென்று ஜனாதிபதியை சந்திக்க முடிவு

## வடக்கு–கிழக்கு புகையிரத கடவை காப்பாளர் சங்கத் தலைவர் அறிவிப்பு

நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வவுனியாவிலிருந்து பாதயாத்திரையாக சென்று ஜனாதிபதியை சந்திக்கவுள்ளதாக வடக்கு கிழக்கு புகையிரத கடவை காப்பாளர் சங்கத் தலைவர் றொகான் ராஜ்குமார் அறிவித்துள்ளார்.

வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நாளொன்றுக்கு 250 ரூபா கொடுப்பனவில் கடந்த நான்கு வருடங்களாக பொது மக்களின் பாதுகாப்புக்காக கடமையாற்றி வருகிறோம். எதிர்வரும் 25 ஆம் திகதி வவுனியாவிலிருந்து கொழும்புக்கு பாதயாத்திரையாக சென்று ஜனாதிபதியை சந்திக்கவுள்ளோம், வடக்கு-கிழக்கில் இருக்கக்கூடிய சிவில் அமைப்புக்கள், இளைஞர் கழகங்கள், சமூக ஆர்வலர்கள் எங்களுடன் இணைந்து ஆதரவு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

எங்களுடன் இணைய விரும்புகின்றவர்கள் 077-574 0100 மற்றும் 077-570 1702 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பாதயாத்திரையில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

எங்களது நியாயமான கோரிக்கை நிறைவேற வடக்கு- கிழக்கிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி வேறுபாடின்றி எங்கள் கோரிக்கையை கவனத்திலெடுப்பதோடு நாங்கள் ஜனாதிபதியை சந்தித்து எங்கள் கோரிக்கையை முன் வைப்பதற்கு உதவிசெய்யவேண்டும் என தெரிவித்தார்.(8-250)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணத்திலிருந்து நீர் கொழும்பு நோக்கி கொண்டு செல்லமுற்பட்ட நபரிடம் இருந்தே 2 கிலோகிராம் கேரளக்கஞ்சா பொதி மீட்கப்பட்டது.

வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.எ.மகிந்த தலைமையிலான உதவி பொலிஸ் பரிசோதகர் சம்பத் மற்றும் போதைப் பொருள் தடுப்பு பிரிவு சார்ஜன் அனுர. பொலிஸ் கொன்ஸ்தாபிலான ஹேரத், பிரதீப், கொத்தலாவ ஆகியோர் அடங்கிய குழுவினர் இந் நடவடிக்கையை மேற் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் 2 கிலோ கிராம் கஞ்சாவினை ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவிற்கு கொள்வனவு செய்து நீர்கொழும்பிற்கு கொண்டு சென்று மூன்று இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்வதாகவும் சந்தேகநபர் ஒப்புக்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (8-250)

# மன்னித்தலை அந்தோனியார் ஆலய இரண்டாவது மீளாய்வுக் கூட்டம்



மன்னித்தலைஅந்தோனியார் ஆலய திருப்பலித் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இத்திரு விழா ஏற்பாடுகள் தொடர்பான இரண்டாவது மீளாய்வுக் கூட்டம் நேற்று முன் தினம் 18 ஆம் திகதி முற்பகல் பூநகரி பிரதேச செயலகத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பா. முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மக்கள் போக்குவரத்து, மின்சாரம் , உணவு , குடிநீர் வசதி போன்ற ஏற்பாடுகள் சரியான முறையில் ஒழுங்கமைக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-84)

# 7 பாலங்கள் மக்களின் பாவனைக்கு

ஐக்கிய இராச்சியம் மற்றும் நெதர்லாந்து நாடுகளின் நன்கொடையில் இலங்கை முழுவதும் கிராமிய பாலங்கள் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. மொத்தமாக ஆயிரம் பாலங்களை கொண்ட குறித்த திட்டத்தில் வடமாகாணத்தில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் கணிசமான அளவு பாலங்கள் ஐந்து மாவட்டங்களிலும் நிர்மாணிக்கப்படுகின்றன. அதில் மன்னார் மாவட்டத்தில் 13 பாலங்களுக்கான கட்டுமானப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் 2 பாலங்களுக்கான வேலை கள் நடைபெற்று வருகின் றன.



அந்த வகையில் மாந்தை மேற்கு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட 07 பாலங்களை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது.

அதன்போது கறுக்காகுளம் பகுதியில் மணற்காடு பாலம், அடம்பன் பகுதியில் மினுக்கன் பாலம், கண்டல் பகுதியில் விளான்குளி பாலம், கள்ளியடி கூராய் வீதி பாலம், இலுப்பைக்கடவை படகுத்துறை வீதி பாலம் மற்றும் பெரியமடு பகுதியில் காயாநகரில் இரண்டு பாலங்கள் ஆகியவற்றை கையளித்ததுடன் குறித்த பாலங்களுக்கான அணுகு வீதிகள் அமைப்பதற்கான மதிப்பீடுகளை ஐந்து மாவட்டங்களிலும் மேற்கொள்மாறும் வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர்களுக்கு பணிப் புரையும் வழங்கினார்.

மேலும் குறித்த பாலங்கள் அமைக்கப்பட்டுள்ள வீதிகள் ஊடாக மழைகாலங்களில் மழைநீர் பாதையினை ஊடறுத்து பாய்வதனால் கடந்த காலங்களில் அவற்றினூடாக பயணம் செய்ய மக்கள் மிகவும் இன்னல்களை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

வன்னி வலம்

# கடன்களை அறவிடும் போது மக்களுடன் அநாகரிகமாக செயற்படும் நிதி நிறுவனங்களின் ஊழியர்கள்

நுண் கடன் வழங்கும் நிதி நிறுவனங்களின் ஊழியர்கள் தாங்கள் வழங்கும் கடன்களை அறவிடும் போது மக்களிடம் அநாகரிகமாக நடந்துகொள்வதாக பொது மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வருகின்றனர்.

அண்மையில் ஊற்றுப் புலம் கிராமத்திற்கு சென்ற கிளிநொச்சியில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றின் கடன் அறவிடும் ஊழியர் ஒருவர் அன்றைய மாதாந்த கடன் தவணைப் பணத்தை மீளச் செலுத்த தவறிய ஒருவரை பணத்தை கட்ட தகுதியில்லை என்றால் பிச்சை எடுத்து கட்டுமாறு உரத்த குரலில் தெரிவித்துள்ளார்.

இது மாத்திரமன்றி பல கிராமங்களில் அலுவலக நேரங்கள் தவிர்ந்த நேரங்களில் செல்லும் நிதி நிறுவன ஊழியர்கள் மக்களிடம் சண்டியர்கள் போல் நடந்து கொள்வதாகவும், வீட்டுப் பாவனைப் பொருட்களை தூக்கிச் செல்லப் போவதாவும் எச்சரிக்கின்றார்கள் எனப் பொது மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

அதிக வட்டி கடும் நிபந்தனைகள் கொண்ட இந் நுண் கடன் வழங்கும் திட்டத்தில் கடன் வழங்கும் போது மக்களிடம் அவற்றைப் பற்றி விளக்கமாக தெரிவிப் பது கிடையாது. அத் தோடு மக்களின் வறுமை அவர்களின் பணத் தேவையை பயன்படுத்தி இலகுவாக கிராமங்களுக்குச் சென்று நிதி நிறுவனங்கள் கடனை வழங்கி வருகின்றார்கள்.

25 ஆயிரம் முதல் கடன் வழங்கப்படுகிறது.30 ஆயிரம் கடனுக்கு விண்ணப்பித்த ஒருவருக்கு சேவை கட்டணம் இரண்டாயிரம் கழித்த பின்னர் 28 ஆயிரம் வழங்கப்படுகிறது. இதனை 2300 வீதம் 18 மாதங் களுக்கு செலுத்த வேண்டும். நிறைவில் 28 ஆயிரம் பெற்றவர் 41400 ரூபா செலுத்தியிருப்பார். இதனை தவிர ஒவ்வொரு மாதமும் குறித்த திகதியில் கடனை மீளச் செலுத்த வேண்டும்.தவறும் போதும் குற்றப் பணமாக 500 ரூபா மேலும் குழு முறையிலேயே கடன் வழங்கப்படுகிறது.

மூன்று பேர் அல்லது ஐந்து பேர் கொண்ட குழு என்றால் கடனை மீளச் செலுத்தும் போது குழுவில் உள்ள அனைவரும் சென்றே கடன் தவணைப் பணத்தை மீளச் செலுத்த வேண்டும்.ஒருவர் தவறினாலும் கடன் தவணைப் பணம் நிதி நிறுவன ஊழியரால் பெற்றுக் கொள்ளப்படாது. இதன் போதே ஊழியர்கள் மக்களுடன் மிக மோசமாக நடந்துகொள்கின்றார்கள்.

அத்தோடு குழு முறையில் கடன் பெற்றவர்கள் அனைவரும் ஒன்றாக சென்றால் மாத்திரமே கடன் தவணைப் பணம் வசூலிக்கபடும்.ஒருவர் தாமதித்தால் ஏனையவர்கள் குழுவில் உள்ள அவர் வரும்வரை காத்திருக்க வேண்டும்.

இதனால் ஊருக்குள் மக்கள் மத்தியில் வாய்த்தர்க்கம், அடிதடி என பிரச் சினைகள் ஏற்பட்டு பொலிஸ், மத்தியஸ்தர் சபை என பிரச்சினைகள் கொண்டு செல்லப்படுகிறது. இவ்வாறு நிதி நிறுவனங்களின் நுண் கடன் திட்டத்தினால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படும் விடயம் பல இடங்களிலும் சுட்டிக்காட்டப்பட்டும் மாவட்டத்தில் அவர்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எதுவும் இது வரை எடுக்கப்படவில்லை. (8-312)



வவுனியா மாவட்டத்தினை பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான, பொதுக்கொள்கைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும், அரசியல் ஆய்வாளருமாகிய கலாநிதி முஹமட் சரீப் அனிஸ் ஈரானிய இஸ்லாமிய குடியரசுக்கான இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தூதுவராக அமைச்சர் அல்ஹாஜ் றிஸாட் பதியுதீனின் பரிந்துரைக்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டதனை கௌரவிக்கும் முகமாக வவுனியா மக்கள், வர்த்தகர்கள், சமூக சேவையாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து அண்மையில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் கௌரவிப்பு நிகழ்வு ஒன்று இடம் பெற்றிருந்தது.

(படங்கள் :ஓமந்தை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியரை துரத்திய வைத்தியர்

தனக்கு பணி ஒதுக்கப்படாததால் எய்ட்ஸ் இரத்தம் நிரப்பிய ஊசியை, உடலில் செலுத்த வைத்திய கண்காணிப்பாளரை விரட்டிய வைத்தியர் கைது செய்யப்பட்டார்.

ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டத்தில் புரோட்டுடூர் என்னும் இடத்தில் உள்ள ஒரு அரச வைத்தியசாலையில் வைத்தியராக பணிபுரிந்து வருபவர் ராஜ். அதே வைத்தியசாலையில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருபவர் வைத்தியர் லட்சுமி பிரசாத். ராஜ்க்கு பணி ஒதுக்குவதில் உள்ள பிரச்சினை காரணமாக அவர்கள் இருவருக்கும் இடையே ஏற்கனவே மோதல் இருந்துள்ளதாக தெரிகிறது.

இந்நிலையில், கையில் ஒரு ஊசியுடன் வைத்தியர் லட்சுமியின் அறைக்கு சென்ற ராஜ், அந்த ஊசியை அவரின் உடலில் ஏற்ற முயன்றுள்ளார். அதை கவனித்துவிட்ட வைத்திய ஊழியர்கள் அவரை தடுத்துள்ளனர். ஆனாலும், எப்படியாவது அந்த ஊசியை லட்சுமியின் உடலில் ஏற்றிவிட துடித்த ராஜ் அவரை விரட்டி சென்றுள்ளார்.

ஆனால், அங்கிருந்து வைத்திய ஊழியர்கள் அவரை பிடித்து ஊசியிலிருந்த இரத்தத்தை வெளியேற்றினர். அதன் பின் பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. விசாரணையில், எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவரிடம் இருந்து எடுத்த இரத்தத்தை ஊசியில் ஏற்றி, வைத்தியர் லட்சுமியின் உடலில் செலுத்த ராஜ் முயன்றுள்ளார் என்பதும், தனக்கு பணி ஒதுக்காமல் வைத்தியர் லட்சுமி ஓரங்கட்டியதால் கோபமடைந்த ராஜ் அவரை பழிவாங்கவே இந்த செயலில் இறங்கியுள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.

இதையடுத்து வைத்தியர் ராஜ்வை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். (8)

# அவுஸ்திரேலிய தேர்தலில் ஈழத்து தமிழ் இளைஞர்



அவுஸ்திரேலியாவில், பசுமைக்கட்சியின் வேட்பாளராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞரொருவர் களமிறங்கவுள்ளார்.

யாழ். சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 31 வயதான சுஜன் செல்வன் எனும் குறித்த இளைஞன் 2000ஆம் ஆண்டு அகதியாக அவுஸ்திரேலியா சென்றுள்ளார்.

இறுதி யுத்த காலப்பகுதியான 2009இல் விடுதலைப் போராட்டம் தொடர்பாக அவுஸ்திரேலிய மக்களுக்கு கல்வி சார் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை அடிப்படையாக கொண்டு "வாய்ஸ் ஒப் தமிழ்" என்னும் அமைப்பினை நிறுவியுள்ளார்.

அத்துடன் அவுஸ்திரேலியாவில் மனித உரிமை ஆர்வலராகவும், அவுஸ்திரேலியாவிற்கு தஞ்சம் கோரி செல்பவர்களின் நலன் சார் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் ஒரு முன்னணி செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வந்துள்ளார். (7-8)

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

வவுனியா சாம்பல் தோட்டத்தில் ஐந்து பிள்ளைகளின் தாய் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று 11.30 மணியளவில் குறித்த சடலம் மீட்கப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

வவுனியா நெளுக்குளம் சாம்பல்தோட்டம் பகுதியில் வசித்து வரும் ஐந்து பிள்ளைகளின் தாயான தியாகராசா நகுலேஸ்வரி (வயது - 46) என்பவர் கிணற்றிக்கு அருகே நின்றுள்ளார். பின்னர் அவரை காணவில்லை.

தாயை காணவில்லை என அவரின் பிள்ளைகள் தேடிய சமயத்தில் கிணற்றிலிருந்து சடலமாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அயலவர்களின் உதவியுடன் சடலம் மீட்டு பிரேத பரிசோதனை க்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம்தொடர்பாக குறித்த நபரின் மகளிடம் வினவிய போது, தாயார் சற்று மனநலம் பாதிப்படைந்தவர் என தெரிவித்தார். (8-250)

# அழிக்கப்பட்ட நிலையில் புலிகளின் படகுகள்



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள இரட்டை வாய்க்கால் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் படகு ஒன்று எரித்து அழிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இந்த படகு இறுதி யுத் தத்தின் போது அழிக்கப்பட் டிருக்கலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பின் கடற்புலிகள் அணியினர் இது போன்ற படகுகளில் சென்று இலங்கை கடற்படையினரின் போர்க் கப்பல்கள் மீது தாக்குதல் தொடுத்து தமது காட்டுப்பாட்டு பகுதியை பலப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமகாலத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் படகுகளை இராணுவத்தினர் காட்சிப்படுத்திவருகின்றனர்.

இந்த நிலையில், மனித நடமாட்டம் அற்ற பகுதியான இப்பகுதியில் குறித்த படகு எரிந்த நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

## அருள் நெறி விழா

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறி விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் மாலை 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்க கணக்காளர் எம். ஜி.காண்டீபன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய ஆசிரியர் ச.ராஜராஜேஸ்வர சர்மா கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பன்னாலை ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, பண்ணிசை, நடனம், மிருதங்கம், கதாப்பிரசங்கம், தவளக்கிரி முத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனம், பேச்சு, பாலர் ஞானோதய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பேச்சு, பண்ணிசை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அந்திக்குளி ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பேச்சு, மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப்பாடசாலை, கெங்கா தேவி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பேச்சு, நவாலி முருகானந்தா அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பேச்சு, பண்ணிசை, நடனம் என்பன இடம்பெறும். (இ-3)

## விசேட உரை

யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மீன்வளமும் பயன்பாடும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் எனும் தொனிப்பொருளிலான உரை எதிர் வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொதுசன நூலக குவிமாடச் சிறிய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் சூசை ஆனந்தன் உரையாற்றவுள்ளார். (3)

நாடாளாவிய ரீதியில் நடைபெற்ற தரம் 5 மணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் வவுனியா தெற்கு வலயத்தில் 34 பரீட்சை நிலையங்களில் நடைபெற்ற பரீட்சையில் மூவாயிரத்து 14 மாணவர்கள் தோற்றியுள்ளனர். (8-250)

# வாழ்வாதார உதவி வழங்கல்



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் புதுக்குடியிருப்பு உடையார்கட்டை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தேராவில் கிழக்கு உடையார்கட்டு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த குடும்பத்திற்கு வாழ்வாதார உதவியாக ரூபா 150 000 செலவில் புதிய கோழிக்கூடு அமைத்து 75 கோழிகளும் அதற்கான தீவனங்களும் புலம்பெயர் உறவுகளான கனடாவைச் சேர்ந்த நலன் விரும்பிகளின் நிதி அனுசரணையின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட குடும்பத் தலைவி இந்து வாலிபர் சங்கத்திடம் விடுத்திருந்த விண்ணப்பத்தில் கடந்த யுத்த காலத்தில் தனது கணவன் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதுடன் மூன்று பிள்ளைகளுடன் அடிப்படை வசதிகளான கிணறு மலசலகூடம் இல்லாத நிலையில் தற்காலிக வீட்டில் அன்றாடம் கூலி வேலை செய்து கிடைக்கும் சிறு வருமானத்துடன் பொருளதார ரீதியாக நலிவுற்று மிக்வும் வறுமையுடன் வாழ்ந்து வருவதாகவும் தனது வாழ்வாதாரத்தினை மேம்படுத்த சுயதொழில் முயற்சியாக கோழிக்கூடு அமைத்து அதற்கான கோழிகளையும் தரும் பட்சத்தில் எனது குடும்பத்தின் வாழ்வாதாரத்துடன் பிள்ளைகளின் கல்வி செலவினையும் ஓரளவு பூர்த்தி செய்து கொள்ளமுடியுமென குறிப்பிட்டிருந்தார்

இதனை கருத்தில் கொண்ட வட்டு இந்து வாலிபர் சங்கம் புலம்பெயர் உறவுகளான கனடாவைச் சேர்ந்த நலன் விரும்பிகளின் நிதி அனுசரணையின் மூலம் இவ் வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளதுடன். இக் குடும்பத்தின் நிலையினை கருத்தில் கொண்டு இக் கனடா வாழ்நலன்விரும்பிகள் கிணறு அமைத்து கொடுக்க தாமாக முன் வந்துள்ளனர். (7-8)

# வாழ்வில் அளப்பரிய பணிகளைச் செய்து வாழ்கிறார் தி.இராசநாயகம்- சி.சிறீதரன்

ஒன்றாக இருப்பவர்களை தள்ளிவிட்டு அவர்களின் பதவிகளைப் பிடிக்கலாமா? என நினைத்துக் கொண்டிருக்கின்ற சமுதா யத்தில் இராசநாயகம் தனது வாழ்வில் அளப்பரிய பணிக ளைச்செய்து வாழ்கின்றார் என நாடாளுமன்ற உறுப்பி னர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

"இமயம்" யாழ். விருது பெற்ற கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர் தி.இராசநாயகத்தை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார். இதன்போது தொடர்ந்தும் தெரிவிக்கை யில்,

சில மனிதர்களை நாங்கள் பார்க்கின்றோம். கூட இருப்பவர்களைத்தள்ளி விட்டு அவர்களுடைய கதிரைகளைப் பிடிக்கலாமா? என்று உற்ற நண்பர்க ளையே தள்ளி விடுகின்ற ஒரு சமுதாயம். இவ்வாறான சமுதாயம் உள்ள படித்தவர்கள் மத்தியில் இருக்கின்ற உலகத்தில், இந்த உத்தமமான, உன்னத மான மனிதனாக படைக்கப் பட்ட இராசநாயகத்தை காண் கின்றோம் என தெரிவித்துள்ளார். (8)




வொய்ஸ் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நடைபயணம் ஒன்று நேற்றுக்காலை 9.30 மணிளயளவில் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. பாதிக்கப்படும் சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டி நல்லதொரு சமூகத்தை கட்டியெழுப்புவதே குறித்த திட்டத்தின் நோக்கம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுவைமடித் தடைச்சட்டம்

# பாக்கு நீரிணையில் அண்ணன்-தம்பி மோதலை முடிவுக்கு கொண்டு வருமா?

நீண்டகால இழுபறியின் பின்னர் அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் எம்.ஏ.சுமந்திரனால் இழுவை மடித்தொழிலைத் தடை செய்வதற்கான சட்டமுலம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அதுவும் இந்தியாவின் ஒப்புதல் பெறப்பட்டே(?) இது கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன.

ஆகவே இச்சட்டத்தை இவ்வளவு காலமும் கொண்டு வரமுடியாமைக்கு இந்தியாவே முட்டுக்கட்டை போட்டிருப்பதுபோல்தெரிகிறது. பல தடவைகள் வடபகுதி மீனவர்கள் தமிழ்நாட்டு மீனவர் களுடன் பேசியபோதிலும் அவர்களது அத்துமீறல்களைத் தடுக்க முடியவில்லை. வள பாதுகாப்புக் கருதி வருட தொடக்கத்திலேயே 45 தினங்கள் தமது மீனவர்களுக்கு மீன்பிடித் தடைவிதித்து அதனை அமுல்படுத்தி வரும் தமிழக அரசு அக்காலப்பகுதி முடிவடைந்ததும் வடபகுதியில் மீனவர்களின் எல்லை தாண்டிய செயற்பாடுகளை தடுத்து நிறுத்த எத்தகைய நடவடிக்கைகளையும் அவ் அரசு மேற்கொள்வதில்லை. எல்லோரையும் மோதவிட்டு வேடிக்கை பார்த்திருக்கும் இந்தியதரப்பு எப்பவோ இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்திருக்க வேண்டும்.

இன்று அதனிடம் ஒப்புதல் பெற்றே இத்தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது விந்தையாகவே உள்ளது. இச்சட்டமூலம் பெரும்பாலான வடக்கு மீனவர்களுக்கு பெரு நிம்மதியினை ஏற்படுத்தியுள்ளமை குறிப் பிடத்தக்கது. அதேவேளை தமிழ்நாட்டு மீனவர்களுக்கு பெரும் கவலையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருப்பது அங்கு நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இச்சட்டமூலத்தை எதிர்த்து தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் கட்சிபேதமின்றி இலங்கை அரசின்மீது சீறிப் பாய்ந்துள்ளனர். ஐ.நா. வரையிலும் இந்தப் பிரச்சினையைக் கொண்டுசெல்லப் போவதாகவும் அவர்கள் மிரட்டியிருக்கின்றனர்.

வடபகுதியின் பாரம்பரிய நீர்ப்பரப்பில் யுத்தத்தின் முன்னர் வடபகுதி மற்றும் தமிழ்நாட்டு மீனவர்களுக்கிடையே மீன்பிடி தொடர்பாக ஏற்பட்டிருந்த மோதலானது யுத்தத்தின் பின்னர் தீவிரமடைந்து அது இலங்கை கடற்படை மற்றும் தமிழக மீனவர் மோதலாக மாறி பெரும் கடல்வள அழிவையும், மானிட நலவாழ்வு பாதிப்பினையும் (உயிரிழப்புக்கள் உட்பட) ஏற்படுத்தியிருந்தது.

பல வருடங்கள் நீடித்திருந்த இந்த விவகாரமானது பாராளுமன்றில் கொண்டு வரப்பட்ட இழுவைமடித் தொழில் தடைச்சட்டம் மூலம் ஓரளவுக்கு முடிவுக்கு கொண்டு வரக்கூடியதான ஓர் சூழலை ஏற்படுத்தியுள்ளது. வரவேற்கக்கூடிய இச்சட்டம் முழுமையாக அமுல்படுத்துவதிலேயே இதன் வெற்றி தங்கியுள்ளது.

மட்டுமல்ல மன்னார் குடாக் கடலிலும் இந்திய பெரும் படகுகள் தங்கூசி வலைகளை (monofilament)ப் பயன்படுத்துவதையும் நிறுத்தி கடல்சட்டங்களுக்கும், மீன்பிடித் தடைச் சட்டங்களுக்கும் மதிப்பளிக்கவேண்டிய காலமும் கனிந்துள்ளது.

ஆயினும் கடந்தவாரம் நெடுந்தீவுக்கடலில் நடைபெற்ற இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுகின்ற சம்பவங்கள் மற்றும் மன்னார் குடாக் கடலில் அதிகரித்துவரும் இந்திய மீனவர்களின் இழுவை மடிச்செயற்பாடுகள் இப்பகுதி மீனவர்களுக்கு பலத்த ஏமாற்றத்தை அளித்திருக்கிறது.

பாதிப்படையும் உள்ளூர் இழுவைமடி மீனவர்கள்

இச்சட்டத்தினால் உள்ளூரில் இழுவைமடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களும் பாதிப்புக்குள்ளாவதும் கவனிக்கத்தக்கது. வடக்கில் ஆக நான்கு (மன்னார்-2,யாழ்ப்பாணம்-2) இடங்களிலுள்ளவர்களே இதில் ஈடுபட்டு வருகின்றனர். சுமார் 300க்கும் அதிகமான இழுவைப்படகுகள் இன்று பயன்பாட்டிலுள்ளன.

இத்தடை கொண்டு வரும் போது அவர்களுக்கு பொருளாதார ரீதியாக பெரும்பாதிப்பு ஏற்படும என்பது வெளிப்படை. அத்துடன் அத்தொழிலை நம்பியிருந்தவர்கள் தமது தொழில்வாய்ப்பை இழக்கவும் நேரிடும். பெறுமதிமிக்க இறால் மற்றும் கடலுணவு வகைகளை எவ்வாறு பிடிப்பது.? அதற்கான பொறிமுறை என்ன? அதற்குரிய புதிய தொழில்நுட்பம் யாது? ஏன் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது நியாயமானதுதான். அதேவேளை இழுவை மடி மூலம் பெறப்படும் வருமானத்தை விட அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் ஒன்றிற்கு பதினெட்டு (1:18) என்ற விகிதத்தில் மிகமோசமானவை என்பதும் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது ஒரு கிலோ அலகு மீனுக்கு பதினெட்டு கிலோகிராம் இலக்கற்ற-ஃ உப (Bycatch) மீன்வளம் விரயமாவதாகச் சொல்லப்படுகிறது.

இதனாலேயே சர்வதேச ரீதியில் பல நாடுகள் இந்த மீன்பிடிமுறையினைத் தடை செய்துள்ளன. இறால் வளத்தை எவ்வாறு பிடிக்க முடியும் என நியாயமான கேள்வி எழுப்பும் மீனவர்கள் அதே வேளை அதனால் அழிவடையும் மீன்களைப் பாதுகாப்பது எவ்வாறு? என்பதையும் சிந்திப்பது நல்லது என்பது எமது கருத்து.

இச்சந்தர்ப்பத்தில் பெருந்தொகையான அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற இறால் வளத்தை உற்பத்திசெய்யக்கூடிய தொழில்நுட்பம் கண்டறியப்படுவதும் பாதிப்படையும் மீனவர்களுக்கு மாற்றுத்தொழில் வாய்ப்பு செய்துகொடுப்பதுவும் மிக அவசியம் என்பதுவும் இங்கு உணரப்பட்டுள்ளது. கடற்றொழில் அமைச்சு , "நாரா" நிறுவனம் மற்றும் வடமாணசபை போன்றன இதில் கவனம் எடுப்பது அவசியம்.

இதனிடையே 'பாதிப்புக்குள்ளாகும் உள்ளூர் இழுவைப்படகு மீனவர்களுக்கு பொருத்தமான இடத்தில் சிற்றளவிலான படகுகளைப் பயன்படுத்தி ஏனையோருக்குப் பாதிப்பு அற்றவகையில் மீன்பிடிப்பதற்கான ஒழுங்குகள் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் சட்டமூலத்தை முன்மொழிந்தவர் கேட்டிருக்கின்றார்.

ஆயினும் இதற்கான நடைமுறைச் சாத்தியங்கள் மிகக் குறைவானதாகவேயுள்ளது. எங்கு பயன்படுத்தினாலும், by catch என்பது தவிர்க்க முடியாதது. ஆயினும் இங்கே முக்கிய பிரச்சினையாக இருப்பது படகுகள் (trawlers) அல்ல, அடித்தள இழுவை மடி வலைகளே trawlnet ஆகும். ஆகவே இவர்களுக்கு வேறு சாத்தியமான மாற்றுவழிகளைக் கண்டறிவதும் அவசியம்.

மாற்றுவழிகளில் ஒன்றாக குறித்த வடபகுதிக் கடற்பரப்புக்களில் குறித்த இழுவைப்படகுகளான 3.5 தொன் நிறையுடைய உள் இணை இயந்திரப்படகுகளைக்கொண்டு (trawlers) [illegible] கூடிய [illegible] (drift nets) மிதப்புத் தூண்டில் வரிசைகள் (Bottom and floating long lines) மற்றும் அனுமதிக்கப்பட்டுள்ள சுருக்கு மடிகள் (பெரிய கண் கொண்டது) (Purse seine) போன்ற மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படலாம்.

குறித்த உள்ளூர் மீனவர்களில் பெரும்பாலானோருக்கு இத்தொழிலில் போதிய தேர்ச்சியும், நிறைந்த அனுபவமும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு (படுப்புவலை) ஒரு அலகிற்கு (Unit) 5இலட்சம் ரூபாய் வரையில் தேவைப்படலாம். அவற்றைப் பாதிப்புறும் மீனவர்களுக்கு வழங்க ஆவன செய்யப்பட வேண்டும். வட மாகாண சபை இதுகுறித்து ஏற்கனவே ஆராய்ந்துள்ளது.

இன்று உள்ளூர் மீனவர்கள் இழுவைமடித் தொழிலில் ஈடுபடுவதற்கு தமிழ்நாட்டுமீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகளே முக்கிய காரணமாக அமைந்தன. இழுவைமடி மூலம் கூடுதலான வருமானம் பெற்றவர்கள் இதனைக் கைவிடுவதென்பது இலகுவானதல்ல. ஆயினும் கடல்வள இருப்பின் எதிர்காலம் பற்றி கவலைப்படுவதும் சிந்திப்பதும் அவசியம்.

இந்திய தரப்பில் பாதிக்கப்படவுள்ள மீனவர்களுக்கான மாற்றுவழிகளைச் செய்வதற்காக பலமில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. முதற்கட்டமாக 200 கோடிரூபா பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

நட்டஈட்டினைப் பெற்றுக் கொண்டு இழுவை மீன் பிடியிலிருந்து வாபஸ் பெற்றுக் கொள்ளல்.(Buyback system), ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கான படுப்புவலைகள் (Drift net) மற்றும் தூண்டில் வரிசை (Long line) மீன் வளர்ப்பு போன்றவற்றில் ஈடுபடுவதற்கான சகல வசதிகளை [illegible] போன்ற [illegible] முன்மொழியப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

ஆயினும் அதிக சிரமம் இன்றி குறுகிய நேரத்தினுள் பெருந்தொகையான மீன்களையும் கடலுணவுகளையும் பிடித்து பெரும்பணம் சம்பாதித்த இந்திய மீனவர்கள் இதனைக் கைவிட்டு மாற்றுத் தொழிலில் ஈடுபடுவார்கள் என்பது அவ்வளவு இலகுவில் நடைபெறப்போவதில்லை.

### விளைவுகள்

இத்தடை உத்தரவானது உடனடியாக இழுவைமடி மீனவர்ளுக்கு பொருளாதார ரீதியில் பாதிப்பினை ஏற்படத்துகின்றபோதிலும் சாதகமான பல நன்மைகள் கிடைக்க வழியேற்படும்.

இழுவைமடித் தொழிலைத் தடைசெய்வதனூடாக இறால் மூலம் பெறப்படும் வருமான இழப்புக்கள் மற்றும் உடனடியான தொழில் வாய்ப்பு இழப்புக்கள் அதில் நம்பியிருக்கும் குடும்பங்களின் வாழ்வாதாரமும் பாதிப்புக்குள்ளாகும். இவர்களுக்கு மேலே குறிப்பிட்ட மாற்று வழிகள் காண்பது அவசியம்.

### நன்மைகளைப் பொறுத்தவரையில்

1.இந்திய இழுவைப் படகுகள் தடுத்து நிறுத்தப்படும் போது போரின் முன்னர் வடபகுதி பெற்றிருந்த (48 முதல் 50 ஆயிரம் மெ.தொன் வருடம்) உற்பத்தி அளவினை மீண்டும் எய்த முடியும்.

2.சுமார் இரண்டு இலட்சம் வடபகுதி மீனவமக்கள் நன்மையடைவர்.

3.இப்போதுள்ள மூன்று நாட்கள் மீன்பிடி வாரத்தில் ஆறு நாட்களாக அதிகரிக்கும். இது உற்பத்தி அதிகரிப்புக்கு வழிவகுக்கும்

4. பெருமளவு சிற்றளவு படுப்புவலை மீன்பிடியாளர்களின் வலைகளின் சேதாரம் இல்லாமற் போகும்.

5.மீன்வர் மோதல்கள் தணிந்து மீனவர்களுக்கிடையிலான உறவை வலுப்படுத்த உதவும்.

6.பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகள் தணியும்.?

7.இலங்கை மற்றும் தமிழ்நாடுகளுக்கிடையிலான அரசியல் ரீதியிலான உறவில ஏற்பட்டுள்ள விரிசல் தணியும்.

8. கடற்சூழல் பாதுகாக்கப்படுவதுடன் உயிரியல் பல்வகைமைத்தன்மையும் பேணப்படும்.

9.சிறகுவலை மற்றும் கரைவலை மீன் உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்படும்.

இலங்கை அரசு ஏற்கனவே சில மீன்பிடிமுறைகளுக்குத் தடைவிதித்துள்ளது.

ஆயினும் அதனை அமுல்படுத்துவதில் இது வரையில் தோல்வியே கண்டுள்ளது.

இழுவைமடித்தடைக்கும் அதேபோன்று பூச்சாண்டி காட்டுவதை மீன்பிடி அமைச்சு நிறுத்துதல்வேண்டும். தடை கொண்டுவரப்பட்டு பல நாட்கள் கழிந்துவிட்டன. ஆயினும் இது இன்னும் நடைமுறைக்கு கொண்டுவரப் பட்டதாக தகவல் இல்லை. மேலும் வட மாகாண மீன்பிடி அமைச்சு பதவி விலக முடியாது என அடம்பிடிப்பதிலேயே குறியாகவுள்ளார் இது சரியல்ல. விலகி ஒதுங்கி புதியவர்களுக்கு வழி விடுவது நல்லது.


அதேவேளை இந்திய மீனவர்களின் வருகையைத் தடுத்து நிறுத்த மத்திய மாநில அரசுகளும் தவறியுள் ளன. இத்தடைச்சட்டத்தை அலட்சியப்படுத்துவது சரியல்ல. இன்று அத்துமீறிப் பிரவேசித்து இலங்கை கடற் படையினரை வம்புக்கு இழுப்பதை இந்திய மீனவர்கள் கைவிடவேண்டும்.

மேலும் இச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த உருப்படியான பொறிமுறையினை விரைந்து முன்னெடுக்க உரிய அரசுகளை வேண்டுகின்றோம்.


மாவட்டம் தோறும் கடற் கண்காணிப்புக்குழுக்களை அமைத்து மீன்பிடி நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் அவர்களுக்கான படகு வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றியும் சிந்திப்பது நல்லது. இல்லையெனில் இத் தடைச் சட்டம் எழுத்துவடிவில் மட்டும் இருப்பதை தவிர வடபகுதி மீனவர்களுக்கு எதுவித நன் மையும் ஏற்படப்போவதில்லை.

பல ஆண்டுகள் நீடித்திருந்த அண்ணன் -தம்பி மோதல் முடிவுக்கு வரவேண்டும் என்பதுதான் எமது அவா! பொறுத்திருந்து பார்ப்போம்.

பேராசிரியர்
சூசை ஆனந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு வடக்கில் இருந்து 20 ஆயிரத்து 481 மாணவர்கள் தோற்றியிருந்தனர். நேற்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகிய பரீட்சை நண்பகல் 12.15 மணியளவில் நிறைவடைந்தது. பரீட்சை முடிந்து மாணவர்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் வெளியேறியதுடன் பெற்றோரும் மகிழ்வுடன் இருந்தமையை அவதானிக்க முடிந்தது.

## கந்தன் திருவடி சேர்வோம் வாரீர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமிஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத்திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 7.45 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும். சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்க சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கந்தன் திருவடி சேர்வோம் வாரீர் எனும் தலைப்பில் சிவஞானப்பிரியன் இளஞ் சைவப்புலவர் கமலநாதன் கயிலைவாசன் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இதில் வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியினரும் வவுனியா அகிலாண்டேஸ்வரர் அருளக நுண்கலைக் கல்லூரியினரும் இணைந்து வழங்கும் திருத்திய சமர்ப்பணம் இடம்பெறும்.

இதில் நட்டுவாங்கம்- சூரிய யாழினி வீரசிங்கம், பாட்டு- ப.சிவமைந்தன், வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம் ஞா. வசந் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

## கந்தபுராண எழுச்சி விழாவின் இருபத்தைந்தாம் நாள் வைபவம்

நல்லூர் ஆதீனத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் கந்தபுராண எழுச்சி விழாவின் இருபத்தைந்தாம் நாள் நிகழ்வுகள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக மேல்மாகாண ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து கந்தபுராணம் தொடர்பான சிறப்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி லலீசன் ஆற்றவுள்ளார்.

அமிர்தசிந்துஜன், அ.அமிர்தலோஜனன் ஆகியோரின் இசை அரங்கம் மற்றும் கலை நிகழ்வுகளில் கலந்து கொண்ட மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு மற்றும் சிறப்புப் பேச்சாளரின் பேச்சுத் தொடர்பாக புதிர்ப்போட்டி நடத்தப்பட்டு மாணவர்களுக்கு பெறுமதியான நூல்கள் பரிசாக வழங்கப்படும் நிகழ்வு என்பன இடம்பெறும். (இ-7)

## ஸ்ரீ வள்ளி நாடகம் மேடையேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 23 ஆம் திகதி நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் ஸ்ரீ வள்ளி நாடகம் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு நிறைவு நாள் நிகழ்ச்சியாக மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை மேடையேற்றப்படும். (இ

## ஆன்மீக அருளுரைகள்

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரைகள் (ஞானயக்ஞம்) இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிமுதல் 8.15 மணிவரை இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் எனது மனம்! எனது பலம்!! எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)

## 'அக்னி பிரவேசம்' இசைப்பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவ மகா சபை 30 வருடங்களுக்கு மேலாக நடத்தி வரும் கம்பராமாயணம் தொடர்பான தெய்வீக தொடர் இசைப் பேருரை (சங்கீத கதாப்பிரசங்கம்) இன்று மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

அக்கினிப் பிரவேசம் எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தி யானந்தசர்மா இசைப் பேருரை வழங்குவார். (இ-3)

## ஆட்டோ சாரதியிடம் கைக் குண்டு மீட்பு

ஆட்டோ சாரதியொருவரிடமிருந்து கைக்குண்டொன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் பதுளை, பஸ்ஸர பாதையில் 6 கட்டை தேவாலயத்துக்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது குறித்த சந்தேகநபரிடமிருந்து கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் பஸ்ஸர பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், குறித்த கைக்குண்டு உள்நாட்டில் தயாரிக்கப்பட்டது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## அக்கரை சுற்றுலா மையத்தை சிறுவர் பூங்காவாக மாற்றவும்

### பிரதேச மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு அக்கரை சுற்றுலா மையத்தை சிறுவர் பூங்காவாக மாற்றுமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொண்டைமானாறு அக்கரை கடற்கரை பிரதேசம் சுற்றுலா மையமாக பிரகடனப்படுத்தப்பட்டமையை எதிர்த்து மக்கள் போராட்டம் மேற்கொண்டிருந்தனர்.

இது குறித்து வடமாகாண முதலமைச்சர், பிரதேசசெயலர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் மகஜர் கையளித்திருந்தனர்.

மேற்குறித்தவிடயம் தொடர்பாக அப்பகுதி மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு முதலமைச்சரால் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த பகுதியில் உள்ள மக்களின் கருத்துக்களை கேட்டறிந்த போதே மக்கள் அப்பகுதியை சிறுவர் பூங்காவாக மாற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

## பாதுகாப்பு அதிகாரிகளின் புதிய பிரதானியாக ரவீந்திர விஜேகுணவர்தன பதவியேற்கிறார்

பாதுகாப்பு அதிகாரிகளின் புதிய பிரதானியாக வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் அட்மிரல் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டதன் பின்னர், நாளை 22 ஆம் திகதி பாதுகாப்பு அதிகாரிகளின் புதிய பிரதானியாக பதவியேற்கவுள்ளார்.

தற்போதைய பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்புக் காலம் இன்றுடன் நிறைவடைந்தது.

இதையடுத்து, நாளை 22 ஆம் திகதிமுதல் பாதுகாப்பு அதிகாரிகளின் புதிய பிரதானியாக ரவீந்திர விஜேகுணவர்தன பதவியேற்கவுள்ளார். (இ-7)




## உருமாறி வா!

ஆறுமுகனே எம் ஆறாத மூச்சவனே
தீரும் வினையதுவே நின் பாதம் தொழுதிடவே
கூரிய வேலெடுத்து அசுரரை அழித்ததுபோல்
பாரிய சக்தி கொண்டு எம்பகை தீருமையா
மாறிய வழி செய்யும் தமிழனை
நேரிய வழியிட்டுச் செல்ல
உருமாறியே வந்தருள்க குமரா!

மாவை. நா.கஜேந்திரன்

## பாவம் போக்கிடு பாலகா!



மலையான் மகளின் மைந்தனே கந்தா
நிலையெது வாழ்வினில் எனப் பகர்வாய்
அலையென மோதும் மன ஆணவம் போக்கி
நிகரிலா வாழ்வினை புகட்டிடுவாய்

பாசமறுத்துப் பரமகதி நல்க
நேசமொடு வேண்டுகிறேன்- ஈசன் மகனே
நாதமெழு நல்லூர் நகருறை வேலவா
பாத மலர் தொழுகிறோம் பாவங்களைப் போக்கிடுவாய்

சுபாஷினி பிரணவன்

## மயில்மீதில் நீயேறி வா



அருள் நல்லை பதிவாழும் உமை மைந்தனே
அலங்காரப் பிரியனேயென் அப்பா நீயே
இருகரமும் கூப்பியுந்தன் அடி நாடியே
இசையோடும் உன் புகழை மிகுபாடவே

கருணை விழி காட்டியெமைக் காக்கும் கந்தா
கண்நுதலான் தருகனியே மயில்வீரனே
வருதுயரம் யாவையுமே உடனோடவே
வந்துமருள் ஒளிகாட்டி எமையாளுவாய்

சு.குகதேவன்
தெல்லிப்பழை

## நாம் தினமும் கையேந்துகின்றோம்

தங்கத் தேரினிலே வீதியுலாவரும் நல்லூரானே
இன்றல்ல என்றுமே உமதுபுகழ் பாடுகிறோம்
பங்கமேதுமில்லாமல் நீரெமக்கு நம்நாட்டின் தமிழினத்தை
ஒற்றுமையாய் ஒரே வழியில் ஒன்றிணைவதற்கும்
எங்கும் சமாதானமும் சந்தோசமும் மலர்ந்த
பேச்சொலிகளையும் சிரிப்பொலிகளையும் கேட்பதற்கும்
நம்மவர்க்கு நல்லறிவை நன்றே நல்கிட வேண்டுமென
நாம் தினமும் கண்கள் கசிய கையேந்துகின்றோம்.

சி.காசிப்பிள்ளை
அல்லாரையூர்.


## நன்னீராடும் நல்லூர் வேலவா



நல்லை தனில் வீற்றிருக்கும் வேலவா- உந்தன்
வேலின் தீர்த்தம்- அருளினைத் தரும்
வேலின் தீர்த்தம் - அஞ்சாமை தரும்
வேலின் தீர்த்தம்- வறுமை, நோய், தீர்க்கும்
வேலின் தீர்த்தம்- கொடியவர்கள், வஞ்சகர்களை அழிக்கும்
வேலின் தீர்த்தம்- எம் பாவங்கள் யாவும்
விலகி ஓடக் கண்டோம்
வேலின் தீர்த்தம்-உம்மை உள்ளன்போடு
வழிபடுவோர்க்கு அமிர்தம்

நயினை விசு இராசநாயகம்

## நல்லைக்கந்த சந்தப் "பா"



மஞ்சத் தாடிடும் மறையின் மூலமே
மானிட ரிடர் மறைக்குஞ் சூலமே
தஞ்ச மென்றுனைக் கெஞ்சி வேண்டுவர்
தகைமை பெற்றுமே உவகை பூணுவர்
விஞ்சி மேலதோர் வாழ்வைக் காணுவர்
வெஞ்சின மின்னா செய்ய நாணுவர்
நஞ்சு வேல்விழி கொஞ்சும் தேவியர்
நெஞ்சிற் றுஞ்சிடும் நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஆதரவு எம்.எல்.ஏக்களுடன் டி.டி.வி.தினகரன் ஆலோசனை

(சென்னை)

அ.தி.மு.க. அம்மா அணியின் துணை பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் பெசன்ட் நகரில் உள்ள வீட்டில் தனது ஆதரவு எம்.எல்.ஏக்களுடன்நேற்று ஆலோசனை நடத்தினார்.



எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அணியும், ஓ.பன்னீர்செல்வம் அணியும் இணைவதற்கு சாதகமான வாய்ப்புகள் நெருங்கி விட்டதால் ஒரு சில நாட்களில் இணைப்பு உறுதியாகி விடும் சூழல் நிலவி வருகிறது.

இந்நிலையில் துணை பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் பொதுச் செயலாளர் சசிகலாவை பெங்களூருக்கு சென்று நேற்று முன்தினம் சந்தித்து விட்டு சென்னை திரும்பினார்.

பெசன்ட் நகரில் உள்ள அவரது வீட்டில் ஆதரவு எம்.எல்.ஏக்களுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். எம்.எல்.ஏக்கள் பழனியப்பன், செந்தில்பாலாஜி, வெற்றிவேல், சுப்பிரமணியம், சுந்தர்ராஜ் ஆகியோரிடம் ஒரு சில மணி நேரம் தினகரன் பேசிக்கொண்டிருந்தார்.

எடப்பாடி பழனிச்சாமியின் அதிரடி அறிவிப்பால் ஓ.பி.எஸ். அணியும் அடுத்த கட்டமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன? ஆட்சியை இரு அணிகளும் கைப்பற்றக்கூடிய நிலையை தொடர்ந்து கட்சியையும் கைப்பற்றினால் அவற்றை தடுக்க என்ன வழிமுறைகளை கையாள்வது என்பது குறித்து ஆலோசனை நடத்தினார்.

எடப்பாடிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அடுத்த கட்டமாக என்ன செய்வது? அங்குள்ள எம்.எல். ஏக்களை தங்கள் பக்கம் இழுக்க தீவிர முயற்சி மேற்கொள்ளவும் அதற்கான நடவடிக்கையில் ஆதரவாளர்கள் தீவிரமாக இறங்க வேண்டும் என்று அறிவுறுத்தியதாக தெரிகிறது.

23 ஆம் திகதி ஆர்.கே. நகரில் நடக்கும் பொதுக் கூட்டத்தை பிரமாண்டமாக நடத்தி அதன் மூலம் தனது செல்வாக்கை மேலும் உயர்த்தவும் டி.டி.வி.தினகரன் திட்டமிட்டுள்ளார்.

மாவட்ட செயலாளர் பி. வெற்றிவேல் ஏற்பாட்டில் கொருக்குப்பேட்டையில் இதற்கான பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

வடசென்னை பொதுக் கூட்டம் மூலம் தனது அரசியல் பலத்தை நிரூபிக்க தினகரன் முடிவு செய்துள்ளார். (8)

## அ.தி.மு.க. அணிகள்

(சென்னை)

அ.தி.மு.க. அணிகள் இணைப்பு பற்றி இன்று அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு வெளியிடப்படும் எனவும் துணை முதலமைச்சர் பதவி ஓ.பன்னீர்செல்வத்துக்கு வழங்கப்படும்எனவும்தெரிவிக்கபடுகிறது.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு பிளவுபட்டு கிடந்த அதி.மு.க. அணிகள்இணைப்பு இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.

அதி.மு.க. அணிகள்இணையுமா? என 7 மாதங்களாக தொண்டர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பு நிலவி வந்தது. இணைப்பு தொடர்பாக பலமுறை ரகசிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்று முடிவுஎட்டுவதில்சிக்கல்நீடித்து வந்தது. இப்போது சிக்கல் தீர்ந்து இன்று இணைப்பு நடைபெறுகிறது.

ஓ.பன்னீர் செல்வம் அணியினர் விதித்த பெரும் பாலான நிபந்தனைகளை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அணி ஏற்றுக்கொண்டது. குறிப்பாக ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்தை நினைவிடம் ஆக்குவது, ஜெயலலிதா மரணம் தொடர்பாக நீதி விசாரணை நடத்துவது ஆகியவை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு விட்டது.

அ.தி.மு.க. அணிகள் இணைப்புக்குப்பின் கட்சி

### ஓ.பன்னீர்செல்வ



மற்றும் ஆட்சியில் யார் யாருக்கு என்ன பதவிகள்? என்பது பற்றி இரகசிய பேச்சுவார்த்தை நடந்து வந்தது.

எடப்பாடி பழனிசாமியே முதலமைச்சராக நீடிப்பார் என்றும்,

## ஈராக்கில் ஐ.எஸ்ஸிடமிருந்து கடைசி நகரமும் மீட்கப்பட்டது

(பக்தாத்)

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்த தல் அபர் என்ற கடைசி நகரமும் நேற்று முன்தினம் இராணுவத்தால் மீட்கப்பட்டது.

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள்ஆதிக்கம்மேலோங்கி இருந்த போது மொசூல் மற்றும் அதை சுற்றியுள்ள நகரங்கள் அவர்களது கட்டுப்பாட்டில இருந்தன. தாங்கள் கைபற்றிய பகுதிகளை தன் நாடு ஆக அறிவித்து ஆட்சி செய்து வந்தனர்.

அவர்களின் ஆதிக்கத்தை ஒடுக்க ஈராக் இராணுவத்துக்கு அமெரிக்கா கைகொடுத்தது. அதன் உதவியுடன் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசம் இருந்த மொசூல் சமீபத்தில் மீட்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து தீவிரவாதிகள் வசம் இருந்த நகரங்கள் படிப்படியாக கைப்பற்றப்பட்டன. இந்த நிலையில் அவர்கள் வசம் இருந்த தல் அபர் என்ற கடைசி நகரமும் நேற்று முன்தினம் இராணுவத்தால் மீட்கப்பட்டது.

இத்தகவலை ஈராக் பிரதமர் ஹைதர் அல்- அபாடி டெலிவிஷனில் அறிவித்தார். அப்போது ஐ.எஸ்.தீவிரவாதிகள் சரணடைய வேண்டும். அல்லது மடிய வேண்டும் என தெரிவித்தார்.

தல் அபார் ஷியா பிரிவினர் அதிகம் வசிக்கும் பகுதி. கடந்த 2014-ம் ஆண்டு இது ஐ.எஸ். தீவிரவாதி கள் வசமானது.

மொசூலுக்கும் சிரியா எல்லைக்கும் இடையே இது உள்ளது. தரை வழி மற்றும் விமான தாக்குதல்கள் மூலம் இந்தநகரம் மீண்டும் கைப்பற்றப்பட்டது. (8)

## ஓ.பன்னீர்செல்வம் அணி மீது தினகரன் ஆதரவாளர் பாய்ச்சல்

(பெங்களூர்)

தர்மயுத்தம் என்று சொல்லி மக்களையும், தொண்டர்களையும் குழப்புகிறார்கள் என்று ஓ.பன்னீர்செல்வம் அணி மீது தினகரன் ஆதரவாளர் குற்றம் சாட்டினார்.

பெங்களூர் சிறையில் நேற்று முன்தினம் சசிகலாவை தினகரன் சந்தித்து பேசினார். அப்போது தினகரனுடன் சென்ற வாணியம்பாடியைச் சேர்ந்த அ.தி. மு.க. சட்டத்தரணி பாலசுப்பிரமணி நிருபர்களிடம் தெரிவித்ததாவது.

அ.தி.மு.க அணிகள் இணைப்பு என்ற பெயரில் ஒரு நாடகத்தை அரங்கேற்றுகிறார்கள். ஓ.பன்னீர் செல்வம் அணியினர் தர்மயுத்தம் என்ற பெயரில் கட்சி பதவிகளை கேட்கிறார்கள். ஆட்சியில் அமைச்சர் மற்றும் வாரிய தலைவர் பதவிகள் கேட்கிறார்கள். நிதித்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, உள்துறை உள்ளிட்ட வள மான துறைகளை கேட்கிறார கள். கே.பி. முனுசாமி வாரி யத் தலைவர் பதவி கேட்கி றார்.

மதுரை எம்.எல்.ஏ. சரவணன் அமைச்சர் பதவி வாங்கி தரவேண்டும் என்று கேட்டார். அது முடியாது என்பதால் அந்த கூட்டத்தை விட்டு வெளிநடப்பு செய்து விட்டார்.

இதுபோல முன்னாள் அமைச்சர்கள் பலர் வாரியத் தலைவர் பதவியும், கட்சியில் பொறுப்பும் கேட்கிறார்கள். ஆனால், அதிக பதவிகள் தரமுடியாது என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவிக்கிறார். ஜெயலலிதா இருந்தபோது யார்? என்ன பதவியில் இருந்தார்களோ? அதை மட்டும் தான் தரமுடியும் என்று தெரிவிக்கிறார். இதனால் பதவிக்காக சண்டை போடுகிறார்கள். ஆனால், வெளி உலகத்தில் தர்மயுத்தம் என்று சொல்லி மக்களையும், தொண்டர்களையும் குழப்புகிறார்கள்.

மதுரை மாவட்டம் வேலூரில் நடந்த கூட்டம் தினகரன் பின்னால் தொண்டர்கள் இருப்பதை உணர்த்தி விட்டது.

அவர் தலைமையில் அ.தி.மு.க. மீண்டும் எழுச்சியை பெறும். தி.மு.க. நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்தால் எடப்பாடி அரசு கவிழ்ந்து விடும். அப்போது தினகரன் யார் என்பது அவர்களுக்கு தெரியவரும் என்று அவர் தெரிவித்தார். (8)

## கொங்கோவில் கடும் நிலச்சரிவு

### உயிரிழப்பு 200 ஆக அதிகரிக்கும் என தகவல்

(கின்ஷாசா)

கொங்கோ நாட்டின் இதூரி மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200 ஆக உயரும் என அஞ்சப்படுகிறது.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவின் இதூரி மாகாணத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மீனவ கிராமமான தோரா கிராமத்தில் கடந்த புதன்கிழமை கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், சுமார் 50 வீடுகள் முற்றிலும் சேதமடைந்தன. வீடுகளில் இருந்தவர்கள் இடிபாடுகளில் சிக்கி உயிருக்குப் போராடினர்.

நிலச்சரிவு பற்றி தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம் வரை 44 உடல்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், பலரைக் காணவில்லை. வீடுகளுக்குள் சிக்கியவர்கள் உயிர்பிழைக்க வாய்ப்பில்லை. எனவே, அவர்களையும் கணக்கிட்டு பார்க்கையில் உயிரிழப்பு 200-ஐ

## பாரிய தீ விபத்து!

(லண்டன்)

பிரித்தானியாவின் தலைநகரான லண்டனின் Bays water பகுதியில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றைய தினம் உள்ளூர் நேரப்படி மாலை 6.50 மணி அளவில் இடம்பெற்றுள்ளதாகவும், இதனால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திடீரென்று தீவிபத்து ஏற்பட்டுள்ளதால், அங்கு 60க்கும் மேற்பட்ட தீயணைப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, தீயணைப்பு படையினர் தீயை அணைக்கும் முயற்சியில் போராடி வருவதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த மாதம் லண்டனில் ஏற்பட்ட பாரிய தீ அனர்த்தம் காரணமாக நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

## அமெரிக்காவில் தொடரும் இனவெறி மோ... எதிர்ப்பு தெரிவித்து பல்லாயிரக்கணக்கா...

(நியூயோர்க்)

அமெரிக்காவின் வெர்ஜினியா மாகாணத்தில் ஏற்பட்ட இனவெறி மோதல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து பாஸ்டன் நகரில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்ட பிரம்மாண்ட பேரணி நடைபெற்றது.

அமெரிக்காவில் 1861 ஆம ஆண்டு நடைபெற்றசிவில யுத்தத்தின் போது விர்ஜினியா மாநிலத்தில் அடிமைகள் சார்புப் படையை ராபர்ட் இ லீஎன்பவர்வழிநடத்திச்சென்றார். சார்லொட்டஸ்வில்லி நகரில் உள்ள ஒரு பூங்காவில் ராபர்ட் இ லீ சிலை அமைக்கப்பட்டுள்ளது. அவரது சிலை அகற்றப்பட இருப்பதாக அங்குள்ள சிலருக்கு தகவல் கிடைத்தது.

சிலை அகற்றுவதை கண்டித்து வலதுசாரி வெள்ளை இனத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் சார்லொடடஸ் வில்லி நகரில் பேரணி நடத்தினர். இவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இனவெறிக்கு எதிரான குழுவினர் எதிர்ப்பு பேரணி நடத்தினர். இதனால், இரு தரப்பினருக்கும் இடையே மோதல் வெடித்தது.

இந்த மோதலின் போது கார் ஒன்று விபத்தை ஏற்படுத்தியதில் ஒரு பெண் உயிரிழந்த நிலையில், இனவெறி ஆதரவாளர்கள், அவர்களின் எதிர்ப்பாளர்கள் இருவருமே வன்முறை சம்பவத்திற்கு காரணம் என ஜனாதி



பதி ட்ரம்ப் இந்த மோதலை கடுமையாக கண்டித்திருந்தார்.

இந்த இனமோதலை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சரியான விதத்தில் கையாளவில்லை என அனைத்து தரப்பினரும் விமர்சித்து வந்த நிலையில், இனவெறிக்கு எதிர்ப்பு தெரிவித்து பாஸ்டன் நகரில் பல்லாயிரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ...ள் இன்று இணையும்

## ...ல்வம் அறிவிப்பு



...ஓ.பன்னீர் செல்வத்துக்கு துணை முதல்வர் பதவி மற்றும் கட்சியை வழி நடத்திச் செல்லும் குழுவுக்கு தலைமை பொறுப்பு ஆகியவை வழுங்குவது என்றும், ஓ.பன்னீர்செல்வம் அணியைச் சேர்ந்த செம்மலை, கே.பாண்டியராஜன் ஆகியோருக்கு அமைச்சர் பதவி, கே.பி.முனுசாமிபோன்ற மற்ற நிர்வாகிகளுக்கு எம்.பி. பதவி என்றும் பேச்சு நடத்தப்பட்டது.

இதையடுத்து அ.தி.மு.க. அணிகள் இணைப்பு பற்றி இன்று அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு வெளியிடப்படுகிறது. இன்று மாலை இரு அணியையும் சேர்ந்த நிர்வாகிகள் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை கழகம் வருகிறார்கள். அங்குள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவிக்கிறார்கள்.

பின்னர் அவர்கள் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டி அளித்து இணைப்பு பற்றி அறிவிப்பு வெளியிடுகிறார்கள். சமரச உடன்பாடு மற்றும் பதவிகள் பற்றிய அறிவிப்பும் அப்போது வெளியிடப்படுகிறது.

அதன்பிறகு இரு அணி நிர்வாகிகளும் தலைமைக் கழகத்தில் இருந்து ஜெயலலிதா நினைவிடம் சென்று மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவுள்ளனர்.

இணைப்பு முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் அ.தி.மு.க. தொண்டர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (8)

# அமெரிக்காவின் முக்கிய விருது நிகழ்ச்சியை தவிர்க்கும் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முக்கிய கென்னடி விருது விழாவில் ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும அவரது மனைவி மெலினா ட்ரம்ப் பங்கேற்க மாட்டார்கள் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.


அமெரிக்காவின் கலைத் துறையில்வாழ்நாள்சாதனை படைத்தவர்களுக்காக மறைந்த முன்னாள் ஜனாதிபதி கென்னடி பெயரால் ஆண்டு தோறும் விருதுகள் வழுங்கப்படும். அமெரிக்காவின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான இந்த விருது வழுங்கும் விழாவில் ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதியின் மனைவி ஆகியோர் கலந்து கொள்வர்.



ஆனால், இந்தாண்டுக்கான விருது வழங்கும் விழாவில் ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி மெலினா ட்ரம்ப் ஆகியோர் கலந்து கொள்ளமாட்டார்கள் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. வெர்ஜீனியா மாகாணத்தில் சமீபத்தில் நடைபெற்ற இன மோதல்கள் குறித்து கருத்து தெரிவித்திருந்த ட்ரம்ப், இனவெறி எதிர்ப்பாளர்களையும் கடுமையாக சாடியிருந்தார்.

இதனால், பலர் ட்ரம்ப்பை சரமாரியாக விமர்சித்து வந்தனர். மேலும், விருதுகளுக்கான நிதியையும் ட்ரம்ப் நிர்வாகத்தின் முதல் பட்ஜெட்டில் குறைத்துவிட்டதாக கூறி பல்வேறு கலைஞர்கள் ட்ரம்ப்பை குற்றம் சாட்டியிருந்தனர். இந்த சர்ச்சைகளை தவிர்ப்பதற்காக ட்ரம்ப் மற்றும் மெலினா ட்ரம்ப் இந்த விழாவில் பங்கேற்பதில்லை என்ற முடிவை எடுத்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் கூறி வருகின்றன. (8)

# ராஜீவ்காந்தியின் 73வது பிறந்தநாள் விழா



(டில்லி)

மறைந்த முன்னாள் ராஜீவ்காந்தியின் 73வது பிறந்தநாளை காங்கிரஸார் வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர்.

டில்லி வீர் பூமியில் உள்ள நினைவிடத்திற்கு அதிகாலையிலே மலர்தூவி மரியாதை செலுத்தி வருகின்றனர்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

துணை தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் குடியரசு தலை வர் பிரணாப் முகர்ஜி, மக்க ளவை முன்னாள் சபாநாய கர் மீராகுமார் உள்ளிட்டோ ரும் மலர் அஞ்சலி செலுத் தினர்.

உத்திரபிரதேசம் மாநிலம் வாரணாசியில் ராஜீவ் காந்தி பிறந்தநாளையொட்டி விடுதலை போராட்ட வீரர்களை கௌரவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று தெலுங்கானாவில் பல்வேறு இடங்களில் பிறந்தநாளையொட்டி நினைவு ஓட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலும் பல்வேறு இடங்களில் காங்கிரஸார் அவரது உருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தி வருகின்றனர்.(8)

...நெருங்கும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றன[illegible]

இதுபற்றி மாகாண ஆளுநர் அப்துல்லா கூறும்போது, 'வீடுகள் பாதிப்பு மற்றும் காணாமல் போனவர்கள் குறித்து கணக்கெடுக்கப்படுகிறது. மீட்பு மற்றும் நிவாரணப் பணியில் சர்வதேச சமூகம் ஈடுபட வேண்டும்' என கேட்டுக்கொண்டார்.

இதேபோல் மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்காவின் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக சியரா லியோனில் ஏற்பட்ட நிலச்சரிவில் 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். (8)

# 6இலட்சம் ஆண்டுக்கு பிறகு வெடிக்க தயாராகும் எரிமலை



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஆறு இலட்சம்ஆண்டுகளுக்கு பிறகு எல்லோஸ்டோன் கால்டெரா எரிமலை வெடிக்கும் அபாயம் உள்ளது.

அப்போது வெளியாகும் சாம்பல், சுற்றுச் சூழலுக்கும் கடும் பாதிப்பையும், மனிதர்களின் உடல் நலனுக்கு நீங்கும் விளைவிக்கும்.

உலகில் 20 சுப்பர் எரிமலைகள் உள்ளன. அவற்றில் ஒன்று எல்லோஸ்டோன் கால்டெரா.

இது அமெரிக்காவில்வயோமிங் பகுதியில் ஹைடன் பள்ளத்தாக்கில் எல்லோஸ்டோன் தேசிய பூங்காவில் அமைந்துள்ளது.

இந்த சுப்பர் எரிமலை 6 லட்சம் ஆண்டுகளுக்கு ஒரு முறை வெடிக்கும். அப்போது வெளியாகும் சாம்பல் மற்றும குழம்பு பூமிக்கும், சுற்றுச் சூழலுக்கும் கடும் பாதிப்பையும், மனிதர்களின் உடல் நலனுக்கு கேடுகளையும் விளைவிக்கும்.

தற்போது இந்த எரிமலை வெடிக்கும் அபாயம் உள்ளது. தற்போது அதில் இருந்து 60 முதல் 70 சதவீதம் வரை வெப்பம் வெளியாகி கொண்டிருக்கிறது. கடுமையான அழுத்தமும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் 'எல்லோஸ்டோன்' எரிமலை வெடித்ததால் கடந்த 1980ஆம் ஆண்டு செயின்ட் ஹெலன்ஸ் எரிமலை வெடித்ததை விட 1000 மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

அதனால் பூமிக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் கடும் பாதிப்பு ஏற்படும். பொது மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

எனவே எல்லோஸடோன் கால்டெரா எரிமலை வெடிக்கும் போது கடுமையான வெப்பத்தில் இருந்து பூமியை காக்க நாசா மையம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி எரிமலையை சுற்றி 10 கி.மீற்றர் ஆழத்துக்கு துளையிட்டு அதனுள் தண்ணீரை பாய்ச்சி அடிக்க திட்டமிட்டுள்ளனர்.

அதன் மூலம் எரிமலை குளிர்ச்சி அடைந்து வெளியாகும் வெப்பத்தன்மை குறையும் என கருதப்படுகிறது. அதற்காக ரூ.23 ஆயிரம்கோடி செலவிடப்படுகிறது. (8)

# ...மாதல்களுக்கு ...ானோர் பேரணி



...கணக்கானோர் கலந்து கொண்ட பிரமாண்ட பேரணி நடைபெற்றது.

சார்லொட்டஸ்வில்லி நகரில் ஊர்வலத்தில் பெண் கொல்லப் பட்டதை கண்டித்தும், இனவெறி எதிர்ப்பாளர்களின் குரல் அடக்கப்படுவதை கண்டித்தும் பேரணியில் பங்கேற்றவர்கள் குரல் எழுப்பினர். (8)

# பாகிஸ்தான் அன்னை தெரேசா

## ரூத் கத்ரினாவின் இறுதிச்சடங்கு

(கராச்சி)

ஜேர்மனியின் லிப்ஜிக் பகுதியில் கடந்த 1929ஆம் ஆண்டு பிறந்தவர் ரூத் கத்ரினா மார்த் பாவ். கடந்த 1960ஆம் ஆண்டு பாகிஸ்தான் நாட்டின் கராச்சி நகருக்கு வருகை தந்தார். அங்கு தொழுநோயால் அவதிப்படும் மக்களை கண்டு மனம் வெதும்பி தொழுநோய் மையத்தை நிறுவி சேவை செய்தார். தொழுநோயாளிகளுக்கு செய்த சேவைகளை பாராட்டி பல்வேறு விருதுகளை வழங்கி அந்நாட்டு அரசு அவரை கௌரவித்தது.

அவரது தீவிர முயற்சியால் உலக சுகாதார நிறுவனம் ,கடந்த 1996ஆம் ஆண்டு பாகிஸ்தானை தொழுநோய் இல்லாத நாடாக



அறிவித்தது. இந்நிலையில் ரூத் கத்ரினா கடந்த 10ஆம் திகதி மரணம் அடைந்தார். கராச்சியின் சத்தார் பகுதியில் உள்ள செயின்ட் பேட்ரிக் தேவாலயத்திற்கு அவரது உடல் கொண்டு செல்லப்பட்டு, முழு அரசு மரியாதையுடன் 19 குண்டுகள் முழங்க இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஜனாதிபதி மம்னூன் உசேன் கலந்து கொண்டார். (8)


# பீகாரில் கனமழை

## பலி எண்ணிக்கை 202 ஆக உயர்வு

(பாட்னா)

பீகாரில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 202 ஆக உயர்ந்துள்ளது.

பீகார் மாநிலத்தின் வட பகுதியில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக பல நதிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. கிஷன் கஞ்ச், சமஸ்திபூர், தர்பங்கா [illegible] மாவட்டங்கள் மழை, வெள்ளத்தால் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.



இதனால்சுமார்1 1/4 கோடிக்கும் அதிகமான மக்கள் வெள்ளத்தில் சிக்கி பரிதவித்து வருகின்றனர். இவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் விமானப்படை உலங்குவானூர்திகள் மூலம் போடப்பட்டு வருகிறது.

மேலும் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பதற்காக பல்வேறு படைகளைச் சேர்ந்த 2,200-க்கும் மேற்பட்டோர் 300 படகுகளுடன் சென்று தொடர்ந்து மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை 6¼ லட்சம் பேர் பத்திரமாக மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், மாநிலத்தில் பலத்த மழை மற்றும் வெள்ளத்துக்கு பலியானோர் எண்ணிக்கை நேற்று முன்தினம் 202 ஆக உயரந்திருந்தது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச தொழில் வாய்ப்புக்களில் இன விகிதாசாரம் பேணப்பட வேண்டும்

## டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் தமிழ் மொழியினைத் தாய்மொழியாகக் கொண்டவர்களையும், இனப் பாகுபாடுகளுக்கு அப்பால்அவர்களது தகைமை, திறமை, தகுதிகளை அவதானத்தில் கொண்டு உயர் பதவிகளில் அமர்த்தி வருவது பாராட்டத்தக்கது. அந்த வகையில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் எமது மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, அரச தொழில் வாய்ப்புகளின்போது இன விகிதாசாரத்தைப் பேணும் வகையில் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதும் அவசியமாகும் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் 21ஆவது கடற்படைத் தளபதியாக நியமனம் பெற்றுள்ள ரியர் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையாவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா, ரியர் அட்மிரல் ராஜநாதன் ராஜன் கதிர்காமருக்குப் பின்னர் சுமார் அரை நூற்றாண்டு கடந்து இப் பதவி ரியர் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையாவுக்குக் கிடைத்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், திறமை, தகைமை மற்றும் தகுதி அடிப்படையில் இத்தகைய பதவிகள் தமிழ் மொழி பேசுகின்ற அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்ற ஒரு சிறந்த சூழ்நிலை தற்போது பேணப்பட்டு வருவது பாராட்டத்தக்கது. அத்துடன், அரச தொழில் வாய்ப்புகளின் போது இன விகிதாசாரம் பேணப்படுதலும் இன்று மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்ற ஓர் ஏற்பாடாகவே காணப்படுகின்றது.

இன்றைய நிலையில், அரச தொழில் வாய்ப்புகளின்றி பெரும்பாலான தமிழ், முஸ்லிம் இளைஞர், யுவதிகள் போராட்ட நிலைமைகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலைகளைக் காரணம் காட்டி தமிழ் பேசும் மக்கள் அரச தொழில்வாய்ப்புகளில் புறக்கணிக்கப்பட்ட ஒரு நிலை தொடர்ந்திருந்தது. இனியும் இந்த நிலை தொடருமானால் எமது மக்கள் தடம் மாறிச் செல்கின்ற நிலைமைகள் தவிர்க்க முடியாததாகி விடலாம்.

தற்போதைய நிலையில் அநேகமான அரச அலுவலகங்களை எடுத்துக் கொண்டால், தமிழ் மொழி மூல அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறைகள் ஏராளமாக இருப்பதைக் காண முடிகின்றது.

எனவே, இத்தகைய நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். இதற்கு ஓர் ஏற்பாடாக முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட இன விகிதாசார அடிப்படையிலான அரச தொழில் வாய்ப்புகள் முறைமையை மீள செயற்படுத்துவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா மேலும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாலச்சந்திரன் படுகொலை!

## எரிக் சொல்ஹெய்ம் செவ்வி குறித்து கருத்துக் கூற ஜி.எஸ்.பீரிஸ் மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் நோர்வேயின் அமைதி முயற்சிகள் தொடர்பாக, நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அளித்துள்ள செவ்வி தொடர்பாக, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கருத்து வெளியிட மறுத்துள்ளார்.



நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் WION என்ற ஊடகத்தின் மூத்த வெளிவிவகார ஆசிரியர் பத்மா ராவ் சுந்தர்ஜிக்கு நீண்ட செவ்வி ஒன்றை அளித்துள்ளார்.

இதில் நோர்வேயின் அமைதி முயற்சிகள் எவ்வாறு தொடங்கப்பட்டன, விடுதலைப் புலிகளுடனான முதல் சந்திப்பு, புலிகளின் தலைவர் பிரபாகரனின் குணவியல்புகள், அமைதி முயற்சிகள் தோல்வி கண்டமைக்கான காரணங்கள் மற்றும் போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைவதற்கு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முயற்சி மற்றும் சரணடையச் சென்றவர்கள் கொல்லப்பட்டமை, பாலச்சந்திரனின் படுகொலை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

எரிக் சொல்ஹெய்மின் இந்தச் செவ்வி குறித்து, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று கேள்வி எழுப்பியிருந்தது.

எனினும் அவர் இது குறித்து கருத்து எதையும் தெரிவிக்கத் தயாரில்லை என்று மறுத்துள்ளார்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தற்போது, மகிந்த ராஜபக்ஷ அணியில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவராக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தனது கருத்தைத் தெரிவிக்க விஜயதாஸவுக்கு உரிமையுண்டு

## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு தனது தனிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு சுதந்திரம் உள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜயதாஸ என்பவர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினர். எது எவ்வாறிருப்பினும், அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள குழு இறுதித் தீர்மானத்துக்கு வரும்.

அவர் எமது அரசாங்கத்தின் ஒரு அமைச்சர். யார் என்ன சொன்னாலும் கட்சியின் மத்திய செயற்குழு தான் இறுதித் தீர்மானத்தை எடுக்கும். தனி மனிதர்களின் கருத்துக்கள் முக்கியமல்ல எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)



# இன்று ஒரு தகவல்

## மற்றவர் கெட்டிக்காரத்தனத்தைப் பயன்படுத்திக் கொள்வது எப்படி?

"அருமையான வேலைக்காரன் சார், ஆனால் அவனைக் கட்டி மேய்க்க முடியலை சார்" என்று தன் வேலையாளைப் பற்றி ஒருவர் குறைபட்டுக் கொண்டார்.

"அப்படி என்னதான் பண்ணுவார்?" என்றேன்.

"அடிக்கடி லீவு போடுவான் சும்மா அட்வான்ஸ் கேட்பான்., என்ன செய்தாலும் எக்ஸ்ட்ரா எதிர்பார்ப்பான்," என்றவர், "ஆனா அவனை மாதிரி வேலை பார்க்க எவனாலையும் முடியாது" என்றார்.

"சரி இப்போது என்ன முடிவில் இருக்கிறீர்கள்?" என்றேன்.

"வேலையில் திறமை இருந்தால் போதுமா சார்? கரெக்டா இருக்க வேணாமா? அதனால் இவனை அனுப்பிச்சுடலாம்னு பார்க்கிறேன்" என்றார்.

வேண்டாம் அவசரப்படாதீர்கள் ஒரு வேலையும் தெரியாதவன் மிகச் சரியாக வந்து போய்க்கொண்டும் அட்வான்ஸ் கேட்கா மலும் கூடுதலாக எதையும் எதிர்பார்க்காமலும் இரு ந்து என்ன பயன்? இத்தகையவனுக்கு முத லாதவனே தேவலை.காரணம் திறமை என்பது முழுக்க முழுக்கச் சொல்லிக் கொடுத்து வருவதல்ல. இயல்பிலேயே அது கொஞ்சமாவது இருக்க வேண்டும் என்றேன்.

இப்போது என்ன செய்யச் சொல்கிறீர்கள்?

இந்தக் கருஞ் சிறுத்தை இருக்கிறதே. கருஞ் சிறுத்தை... கரேல்னு...

என்னங்க இது சம்பந்தமில்லாம?

கேளுங்க சர்க்கஸ்ல கருஞ்சிறுத்தை தான் அபூர்வமாகத்தான் இதைக் காணமுடியும். இந்தக் கருஞ்சிறுத்தை ரிங் மாஸ்டருக்குக் கூடக் கட்டுப்படாது. எல்லாப் பொல்லாத மிருகத்தையும் கூடக் கட்டாமல் விடுவாங்க. ஆனால் இந்தக் கருஞ்சிறுத்தையை மட்டும் கட்டிப் போட்டுடுவாங்க. இது ரிங் மாஸ்டர் சொல்லுறதைக் கூடச்சரியாகக் கேட்காது; கீழ்ப்படியாது. இந்த மிருகத்தை பார்க்கத் தான் கூட்டமே அதிகம் வரும். அப்படித்தான் கெட்டிக்காரர்கள் சமாசாரமும். இவர்களிடத்தில் இருக்கிற குறைகளை நாம் பெரிதுபடுத்தக்கூடாது. ஆனால் அவுங்களுடைய திறமையை நாம் சாதுரியமாகப் பயன்படுத்திக்கணும். இவர்களுக்கென்று சில பலவீனங்கள் உண்டு. அதை நாம் புரிந்து கொண்டு அவற்றை ஈடுகட்ட வேண்டும். இவர்களிடம் உள்ள குறைகளை நாம் காலப்போக்கில் களைந்து விட முடியும். எஞ்சியிருப்பவற்றைப் பரவாயில்லை என்று நாம் தான் விட்டுக் கொடுக்க வேண்டும். முரட்டுக் குதிரைகள் சவாரிக்குச் சரிபட்டு வராது தான். அதற்காக அவற்றை விட்டு விடுவதா? நாம் தான் பழக்கி நம் வழிக்குக் கொண்டு வர வேண்டும். சிறு சிறு குறைகளுக்காக இவர்களைப் புறக்க ணித்து விரட்டி விட்டால் நட்டம் அவர்களுக் கல்ல; நமக்குத் தான் என்றேன்.

அப்படீங்குறீங்க ? சரீங்க! என்றபடி எழுந்து போனார் அந்த நண்பர். நடைமுறைப் படுத்தினாரா? என்பதை இனிமேல் தான் விசாரிக்க வேண்டும்.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வங்கிகளுக்கு அரசியல் நியமனம்

## ஊழியர் சங்கம் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

முக்கிய அரச வங்கிகள் இரண்டிற்கு அரசியல் நியமனங்கள் வழங்க மேற்கொள்ளப்படும் முயற்சிக்கு ஊழியர் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அரசாங்க வங்கிகளுக்கான உதவி முகாமையாளர் (பயிலுநர்) பதவிக்கு போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு அதன் பின்னர் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டு 200 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் பொது நிறுவனங்கள், அபிவிருத்தி அமைச்சின் முக்கியஸ்தர்கள் சிலர் குறித்த போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வில் தெரிவானவர்களைப் புறக்கணித்து அரசியல் ஆதரவாளர்களைக் கொண்டு வங்கிகளின் பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வங்கி ஊழியர் சங்கம் இது குறித்து கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளதுடன் அரசியல் ரீதியான நியமனங்கள், அரச வங்கிகளின் வினைத்திறன் மற்றும் எதிர்காலத்தைப் பாதித்துவிடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளன.

அத்துடன் வங்கி ஊழியர் சங்கம் ஊடாக ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இது தொடர்பான முறைப்பாடுகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-7)

# நீதியமைச்சர் விஜயதாஸ இன்று இராஜினாமா?

## ஆங்கில ஊடகம் தகவல்



நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இன்று தனது பதவி விலகல் அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பௌத்த சாசன அமைச்சில் விஜயதாஸ ராஜபக்ஷ இன்று நடத்தவுள்ள செய்தியாளர் சந்திப்பில் தனது பதவி விலகல் அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று அவர் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிடுவார் என்றும், அதன் பின்னர் பதவி விலகுவார் என்றும், விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு தொடர்பாக, விஜயதாஸ ராஜபக்ஷ வெளியிட்ட கருத்தை அடுத்து, அவர் மீது அரசாங்கம் நம்பிக்கை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, விஜயதாஸ ராஜபக்ஷவையும், அவரது சந்திப்புகளையும் அரச புலனாய்வுப் பிரிவு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் கொழும்பு ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# 70 பொலிஸ் அதிகாரிகளை கொடுமைப்படுத்திய பூஜித



பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, பிரதி பொலிஸ்மா அதிபராக செயற்பட்ட காலப்பகுதியில் கீழ்மட்ட பொலிஸ் அதிகாரிகளை சித்திரவதைக்கு உட்படுத்தியதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான சம்பவம் 2013 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இடம் பெற்றுள்ளது. காத்தான்குடி பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ் அதிகாரிகள் 70 பேர் வரையில் ஒரு மணித்தியாலத்திற்கு அதிக நேரம் வீதியில் வைத்து மண்டியிட வைத்திருந்தார்.

மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் மூலம் பொலிஸ் அதிகாரிகளை சித்திரவதைக்கு உட்படுத்தியதோடு பொது மக்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியுள்ளார்.

கீழ்மட்ட அதிகாரி ஒருவர் தவறு செய்திருந்தாலும் உயர் மட்ட பொலிஸ் அதிகாரிக்கு அவரை தண்டிப்பதற்கு அதிகாரம் இல்லை.

குறித்த சம்பவம் தொடர்பில் அப்போதைய பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனின் கீழ் இயங்கிய விசாரணை பிரிவின் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இதன் போது பூஜித குற்றம் செய்ததாக அப்போதைய பொலிஸ்மா அதிபருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கக்கோன், பூஜித தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்போதைய அரச சேவை ஆணைக்குழுவிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். எனினும் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உதவியுடன் சம்பவத்தை மூடி மறைப்பதற்கு பூஜித ஜயசுந்தர நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக குறித்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

# தபால் சங்க ஊழியர்கள் போராட்டத்துக்கு முஸ்தீபு

தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் எதிர்வரும் நாட்களில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கப் போவதாக கூட்டு தபால் தொழிற்சங்க முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகளை தீர்ப்பதற்காக விசேட அமைச்சரவை உப குழு வழங்கிய யோசனைகளை தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)


## வைத்தியம்

நோய் எதுவாயினும் தீர்வு உண்டு. தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டுப் பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடற்பருமன் குறைத்தல் (வயிறு/ மார்பு/கை) அல்லது கூட்டுதல், ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு மருந்தின்றி பக்கவிளைவின்றி அக்குபன்சர் சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு: (ACU) Dr.Sanker T.P:077 035 7307

(176)



தரையில் இருந்து தண்ணீர் வரை பல எண்ணற்ற சாதனைகள் புரிந்த

பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழகம் நடத்தும்

## மாபெரும் விளையாட்டு விழா-2017

தலைவர் : திரு.S.றங்கநாதன்
இடம் : பொலிகண்டிச்சந்தி, வல்வெட்டித்துறை
காலம் : 02.09.2017 (சனிக்கிழமை), 03.09.2017 (ஞாயிற்றுக்கிழமை)

வடமாகாண ரீதியில் மாபெரும் விளையாட்டு விழாவை நடத்தத் தீர்மானித்துள்ளது.

- மரதன் ஓட்டம் (ஆண், பெண்)
- சைக்கிள் ஓட்டம் (ஆண்)
- மூன்று சில்லு சைக்கிள் ஓட்டம்
- ஐஸ்கட்டி கொண்டு ஓடுதல்
- மல்யுத்த தெரிவுப் போட்டிகள்
- கபடி
- 50 வயதிற்கு மேற்பட்டவர்களின் சாப்பாட்டுப் போட்டி
- படகோட்டம் (9.9 வலுவுள்ள வெளியிணைப்பு இயந்திரம்)
- கட்டுமரம் வலித்தல்
- நீச்சல்
- விநோத உடை
- கயிறு இழுத்தல்
- கிறிஸ் கம்பம் ஏறுதல்
- தலையணைச் சண்டை
- பார்வையாளருக்கான பாடும்பந்து
- கயிறு முடிச்சு அவிழ்த்தல்.

(178)

விசேட நிகழ்வாக பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் சாண்டோ ஆசானும் பொலிகைமண் பெற்றெடுத்த சாண்டோ செ.செல்வராசா அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழக வீரர்களின் வீரதீர சாதனைகள் இடம்பெறும்.

பங்குபற்ற விரும்புவர்கள் எதிர்வரும் 30.08.2017றகு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

0773793976 | 0754889478 | 0769873967 பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழகம்



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1966 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>சூரி செவ் 3இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L கனடா குடியுரிமை<br>தொ.இ: B/7631 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம் சூரி செவ் 11இல்<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்:தாதி/சுவிஸ்<br>தொ.இ: G/7647 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: 10 ஆம் தரம்/ கட்டார்<br>தொ.இ: B/7634 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 24 செவ் 12இல்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/7648 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா:16செவ் 7இல்<br>உயரம்: 161cm<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ வங்கியாளர்<br>தொ.இ: B/7637 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/7649 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 13செவ் 2இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:NCT, NCED/ அரசதொழில்<br>தொ.இ: B/7639 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/7650 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2017-16.09.2017



மற்றவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு பேசும் தனுசு இராசி அன்பர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிக்கு 2இல் கேதுவும், 8இல் இராகுவும் சஞ்சரிக்கிறார்கள். எனவே சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. ஏற்றமும், இறக்கமும் கலந்து தான் வரும். வரவும், செலவும் சமமாகும். விரய ஸ்தானத்தில் சனியின் ஆதிக்கம் இருக்கிறது. எனவே விரயங்கள் கூடும். வீடு மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் விரும்பத்தக்கதாக அமையுமா? என்பது சந்தேகம்தான்.

வரும் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக அமைய குருப்பெயர்ச்சி வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். அதற்கிடையில் சர்ப்பக் கிரகங்களுக்குரிய பரிகாரங்களை முறையாகச் செய்வதோடு, சனிக்கிழமை தோறும் அனுமனையும் வழிபட வேண்டும். மேலும் ஏழரைச் சனியின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட விநாயகரை வழிபடுங்கள். சதுர்த்தி திதி அன்று விரதமிருந்து அறுகம்புல் மாலை சூட்டி விநாயகரை வழிபட்டால் பொன், பொருள் பெருகும்.

மறைந்த இராகுவால் நிறைந்த தன இலாபம் கிடைக்கும் என்பார்கள். அதன்படி பொருளாதார வளர்ச்சி கூடும் என்றாலும், தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது திடீர் விரயத்தைக் கொடுக்கலாம். உறவினர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை அகற்றிக் கொள்ள ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். எதிரிகளின் பலம் மேலோங்கியிருக்கும். மறைமுக எதிர்ப்புகளால் பல முயற்சிகளில் தடை ஏற்படலாம். உயர் அதிகாரிகளால் தொல்லை உருவாகலாம். சக ஊழியர்களையும் அனுசரித்துச்செல்ல வேண்டிய நேரமிது. சங்கடங்களைச் சந்திக்காமல் இருக்க, சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வருவது நல்லது. விரயங்களைச் சுபவிரயமாக்கிக் கொள்ள வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களையும் வாங்கி மகிழலாம். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி திருமண சீர்வரிசைகளை வாங்கிச் சேர்க்கலாம்.

**கடக சுக்ரனும், சிம்ம சுக்ரனும்!**

ஓகஸ்ட் 22ஆம் திகதி கடகத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 6இற்கு அதிபதி 8இல் சஞ்சரிக்கும் பொழுது அபரிமிதமான பலன்கள் உங்களுக்கு கிடைக்கப் போகிறது.

## அரசாங்க அனுகூலங்கள் அதிகரிக்கும்

கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்பதற்கேற்ப நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நாட்டுப்பற்று மிக்கவர்களுக்குப் புதிய பொறுப்புகள் வரும். வழக்குகள் சாதகமாக முடியும். வாரிசுகளின் பிரச்சினை தீரும். சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கும் பொழுது சூரியனோடு இணைவதால் தொடர்ந்து நற்பலன்கள் கிடைக்கும்.

பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். மண், பூமி வாங்கும் யோகங்கள் உண்டாகும். பூர்வீகச் சொத்துகள் சம்பந்தமாக ஏற்பட்ட பாகப்பிரிவினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

**சிம்ம செவ்வாய் சஞ்சாரம**

உங்கள் இராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 9இல் சஞ்சரிக்கும் பொழுது, தந்தை வழியில் ஆதரவு கிடைக்கும். பங்காளிகளின் பகை மாறும்.




வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும். வெளிநாட்டு முயற்சி வெற்றி தரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

செப்டெம்பர் 2ஆம் திகதி சிம்மத்திற்கு புதன் வருகிறார். எனவே புத ஆதித்ய யோகம் செயற்படப் போகிறது. கல்வி க்காக எடுத்த முயற்சி கைகூடும். 9,10 ஆகிய இடங்களுக்கு அதிபதிகள் இணைவதால் தர்ம கர்மாதிபதி யோகம் உண்டாகும். அரசாங்க அனுகூலங்கள் அதிகரிக்கும். தலைமைப் பொறுப்புகள் தானாகத் தேடிவரும்.

**குருப்பெயர்ச்சிப் பலன்கள்!**

செப்டெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசிக்கு குரு வரப்போகிறார். இராசிநாதன் இலாப ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் தான், உங்கள் வாழ்க்கையில் உன்னதமான நேரமாகும். தடைகள் அகலும். தனவரவு கிடைக்கும். கடை திறப்பு விழாக்களையும், கட்டடத் திறப்பு விழாக்களையும் காணப் போகிறீர்கள். வருமானம் திருப்தி தரும். எதைச் செய்ய நினைத்தீர்களோ அதை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்!**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும் மாதமாகும். கூடுதல் விரயங்கள் ஏற்பட்டாலும், அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. கேது பலத்தால் குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றி மறையும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். சொத்துகள் வாங்குவதற்கு குடும்பப் பெரியவர்கள் உங்கள் பெயரையும் பரிந்துரைப்பர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். சகோதரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பூர்வீகச் சொத்துகளால் லாபம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

குரு பகவான் வழிபாடும், சர்ப்ப சாந்திப் பரிகாரமும் தக்க விதத்தில் செய்து கொள்வது நல்லது.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



நல்ல சந்தர்ப்பங்கள் வரும் பொழுது நழுவவிடக் கூடாது என்று சொல்லும் மகர இராசி அன்பர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனி இலாப ஸ்தானத்தில் பலம்பெற்றுச் சஞ்சரிக்கிறார். சமீபத்தில் உங்கள் இராசியில் கேதுவும், சப்தம ஸ்தானத்தில் இராகுவும் அடியெடுத்து வைக்கிறார்கள். எனவே சர்ப்ப தோஷம் உருவாகிறது. இதன் விளைவாக உங்கள் வாழ்க்கையில் நிறைய மாற்றங்கள் ஏற்படலாம். மன அமைதி குறைவு, தேவையில்லாத வீண் விரயங்கள், ஆரோக்கியத் தொல்லை உருவாகலாம்.

செப்டெம்பர் 2ஆம் திகதி வரை குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே அதன்பிறகு கொஞ்சம் கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டும். அப்போது தான் விரயங்களிலிருந்து தப்பிக்க இயலும். வீட்டில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல்நிலைத் தொல்லை ஏற்படலாம். மாற்று மருத்துவத்தின் மூலம் ஆரோக்கியத்தைச் சரிசெய்து கொள்ள வழிபிறக்கும்.

உத்தியோக ஸ்தானாதிபதி புதன் 7இல் இருப்பதால், புதிய வேலைக்கு விண்ணப்பித்திருப்பவர்களுக்கு அது கிடைக்கும். பூமி வாங்குவதில் தாமதம் ஏற்படலாம். உடன்பிறப்புகளின் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளைச் சீராக்க ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். இராகு-கேதுக்களின் ஆதிக்கம் இன்னும் ஒன்றரை ஆண்டுகள் உள்ளது. எனவே அதற்குரிய சர்ப்பசாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்ளுங்கள்.

ஊர் மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் திசாபுத்தி பலமிழந்தவர்களுக்குத் தானாக வந்து சேரும். அஷ்டமத்தில் சூரியன் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. பொதுநலம் மற்றும் அரசியலில் இருப்பவர்களுக்கு வீண்பழிகள் ஏற்படலாம். இம்மாதம் பெயர்ச்சியாகும் குரு 10-ம் இடத்திற்கு வருகிறார். 10-ல் குரு வந்தால் பதவியில் மாற்றம் வரும் என்பார்கள். எனவே உத்தியோகமாக இருந்தாலும், அரசியலில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும் பொறுப்புகள் மாறும் சூழ்நிலையை தவிர்க்க இயலாது. யோகபலம் பெற்ற நாளில் குரு பிரீதியாக திசை மாறிய தென்முகக் கடவுளை

## நிறைந்த தனலாபம் கிடைக்கும்

வழிபடுவது நல்லது. விநாயகர் சதுர்த்தியன்று விநாயகப் பெருமானை விரதமிருந்து வழிபட்டு வாருங்கள்.

நீங்கள் பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வருவதில் தாமதம் ஏற்படலாம். பாகப்பிரிவினை நடைபெறாமல் பஞ்சாயத்துகள் முடிவடையாமல் இருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு குருவின் பார்வை பலத்தால், குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

**கடக சுக்ரனும், சிம்ம சுக்ரனும**

ஓகஸ்ட 22ஆம் திகதி கடகத்திலும், செப்டெம்பர் 15ஆம் திகதி சிம்மத்திலும் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன்விளைவாக பிள்ளைகள் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் நடைபெறலாம். தொழில் மாற்றச் சிந்தனைகள் ஏற்படும். பழைய பங்குதாரர்களை நீக்கிவிட்டுப் புதிய பங்குதாரர்களை சேர்த்துக்கொள்ள முன்வருவீர்கள்.




**சிம்ம செவ்வாய் சஞ்சாரம்!**

ஓகஸ்ட் 28ஆம் திகதி சிம்மத்திற்குச் செவ்வாய் வருகிறார். அஷ்டமத்தில் செவ் வாய் அடியெடுத்து வைப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லைகளும், மருத்துவச் செலவுகளும் அதிகரிக்கும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளமாட்டார்கள். வாங்கிய சொத்தை விற்கிறோமே என்று கவலைப்படுவீர்கள்.

**சிம்ம புதன் சஞ்சாரம்!**

செப்டெம்பர் 2ஆம் திகதி சிம்மத்திற்கு புதன் வருகிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பங்காளிப் பகை மாறும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட பகை அகலும். மாமன், மைத்துனர் வழியில் சுபச்செய்தி வந்து சேரும்.

**குருப் பெயர்ச்சிக் காலம்!**

செப்டெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசிக்கு குருப்பெயர்ச்சியாகிறார். அதன் பார்வை 2,4,6 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். வாகன யோகம் உண்டு. உத்தியோகத்தில் நிரந்தரப் பணி அமையும். வழக்குகள் சாதகமாகும். நீடித்த நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள். அரை குறையாக நின்ற பணிகள் அடுக்கடுக்காக நடைபெறும். பத்திரப் பதவில் இருந்த தடைகள் அகலும். பதவி மாற்றங்கள் உண்டு.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தால் மன நிம்மதி குறைவாகவே இருக்கும். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமே ஒற்றுமை பலப்படும். உடல் நலத்திற்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். உத்தி யோகத்தில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் உங்களுக்கு திருப்தியளிக்காது. உடன்பிறப்புகள் உங்கள் கடன்சுமை உயரக் காரணமாக இருப்பார்கள். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. தாய்வழி ஆதரவு ஓரளவு கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதன் மூலம் வீண் விரயங்களில் இருந்து தப்பிக்க இயலும். குடும்பச்சுமை கூடும்.

இராகு-கேது பிரீதி செய்வதன் மூலம் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் இளையமகனின் கல்வித்தகுதி குறித்து சிக்கல்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளையமகன் ரோஹித ராஜபக்ஷ கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விசார ஊழியர் என பல்கலைக்கழகத்தின் பணியாளர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

விண்வெளி துறைசார்ந்த பொறியிலாளர் என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டுள்ள ரோஹித ராஜபக்ஷ, பல்கலைக்கழகம் ஒன்றில் கல்விசார ஊழியராக பணியாற்றுவது சிக்கலுக்குரியது என்பதுடன் அவரது கல்வி தகுதி சம்பந்தமாகவும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பணியாளர்கள் பட்டியலில் ரோஹித ராஜபக்ஷவின் பெயர் இருந்தாலும் பல்கலைக்கழகத்தின் பணிகளில் அவர் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுப்ரிம் சேட் செய்மதி விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறித்து ஊடகங்கள் மூலம் மாத்திரமின்றி வேறு திட்டங்கள் ஊடாகவும் விரிவான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு செலவிட்ட நிதி சம்பந்தமாக பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு ரோஹித ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக்கொண்டது.

இலங்கையின் முதலாவது செய்மதி எனக் கூறப்பட்ட அந்த திட்டக்குழுவில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் நண்பரான மதிவாணன் என்பவரும் இருந்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் அவரை வித்துவேனியா நாட்டுக்கான இலங்கை ராஜதந்திரியாக நியமித்துள்ளது.

ரோஹத ராஜபக்ஷ இந்த திட்டத்தின் ஊடாக செலவிட்ட பணம் சம்பந்தமாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், மதிவாணனை, தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இராஜதந்திர சேவையில் வைத்திருப்பது சிக்கலுக்குரியது என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# ஆடுகளைக் கைப்பற்றிய அதிரடிப் படையினர்





புத்தூர் பகுதியில் இருந்து கப் ரக வாகனத்தில் கடத்தி வரப்பட்ட திருட்டு ஆடுகளை விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர். நேற்று முற்பகல் 11 மணியளவில் புத்தூர் வீதி வழியாக திருட்டு ஆடுகளுடன் வந்து கொண்டிருந்த வாகனத்தை மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப்பகுதியில் வைத்து விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர். கைப்பற்றப்பட்ட வாகனத்தில் 8 மறி ஆடுகளும் ஒரு குட்டியுமாக மொத்தம் 9 ஆடுகள் இருந்துள்ளன. வாகனத்தை பறிமுதல் செய்ததோடு அதன் சாரதியையும் கைது செய்த அதிரடிப் படையினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். குறித்த ஆடுகளை புத்தூர் பகுதியில் கொள்வனவு செய்து சாவகச்சேரியில் அமைந்துள்ள ஆட்டிறைச்சிக் கடைக்கு கொண்டு சென்றதாக கைது செய்யப்பட்ட சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். எனினும் ஆடுகளை கொள்வனவு செய்ததற்கான உறுதிப்படுத்தல் ஆவணங்கள் மற்றும் கொண்டு செல்வதற்கான வழித்தட அனுமதியோ காணப்படவில்லை. மேலும் கடத்தப்பட்ட அனைத்து ஆடுகளும் வளர்ப்பு ஆடுகளாகவும் ஒன்று குட்டியுடன் இருப்பதாலும் ஆடுகள் கழுத்தில் வளர்ப்புக் கயிறுகளுடன் இருப்பதாலும் அவை திருடப்பட்ட ஆடுகளாக இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். அவற்றை சாவகச்சேரியில் வைத்து இறைச்சியாக்கி பிறிதொரு மாகாணத் திற்கு ஏற்ற முயற்சிக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். யாழ் குடாநாட்டில் வளர்ப்பு ஆடுகள் கடத்தப்படுகின்றமை தொடர்கதையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-89)

# தொழிற்சாலையில் தீ

(கொழும்பு)

புத்தளம் சீமெந்து தொழிற்சாலையில் நேற்று முன்தினம் பாரிய தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

புத்தளத்தில் அமைந்துள்ள சீமெந்துத் தொழிற்சாலை வளாகம் தற்போது பாரிய குப்பை சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி மையமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த தொழிற்சாலை வளாகத்தில் திடீரென்று பாரிய தீவிபத்து ஏற்பட்டுள்ளது. மீள்சுழற்சிக்கான குப்பைகள் குவிக்கப்பட்டிருந்த கட்டடத்திலேயே இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து தீயணைப்புப் படையினர், பொலிஸார், விமானப்படையினரின் உதவியுடன் பெரும் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தீயை அணைப்பதற்கான நீரைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக பலத்த நெருக்கடியை எதிர் கொண்டதாக தீயணைப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதிலும் அதன் சேதமதிப்பீடுகள் மற்றும் தீவிபத்துக்கான காரணம் குறித்த விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

# வாகன விபத்தில் சிக்கி 12 பேர் காயம்; கண்டி வீதியில் போக்குவரத்து நெரிசல்

கேகாலையில் ஏற்பட்ட வாகன விபத்தில் 12 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கேகாலை, மிபிட்டிய, கரடுபண பிரதேசத்தில் லொறிகள் இரண்டும் வான் ஒன்றும் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுக் காலை இடம் பெற்ற இந்த விபத்தில் 12 பேர் காயமடைந்துள்ளதாக கேகாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் நிலைமை தீவிரமல்ல என வைத்தியசாலை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விபத்து காரணமாக கொழும்பு - கண்டி பிரதான வீதியில் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1167

Search for people, places and things    Nagendram  Home

**மீனா**




**சுகந்தன்**




**சாந்தன்**




**தேனிகா**




**ஜனா**




**கரிணி**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## புதிய கண்டுபிடிப்பு



காயத்திரி நடிகர் பரணி பற்றி சொன்னது ரசிகர்களுக்கு கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது.

நான் தலைவராக இருந்தபோது பரணி தன் சட்டையை மடித்துவிட்டு அடிக்க கை ஓங்கினார். அவன் சுவர் ஏறி குதிக்க முயற்சிக்கும்போது நான் தடுத்திருந்தால் அவன் என்னை நிச்சயம் அடித்திருப்பான். அந்த பயத்தில் தான் பரணியை தடுக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

பரணி பெண்களிடம் தவறாக நடந்தார் என குற்றம் சாட்டி தான் அவரை வீட்டில் உள்ள அனைவரும் ஓரம்கட்டினர். அதனால் மன உளைச்சலுக்கு ஆளான அவர் சுவர் ஏறி வெளியில் குதிக்க முயன்றார் என்பது உங்களுக்கு நினைவிருக்கும்.

## நீங்க ரவுடியா?



பிக்போஸ் வீட்டில் இருப்பவர்களில் ரசிகர்கள் அதிகம் வெறுப்பது காயத்ரியைதான்.
அவர் அதிகம் கெட்ட வார்த்தை பேசுவதாக கமல் கூட பலமுறை கண்டித்தார். ஆனால் அவர் இன்னும் மாறியபாடில்லை.

இந்நிலையில் ரசிகர்கள் ட்விட்டரில் கேட்ட கேள்விகள் பிக்போஸ் போட்டியாளர்களிடம் கேட்கப்பட்டது.

எப்போ பாத்தாலும் செஞ்சிடுவேன், கை கால் உடைச்சிடுவேன் என்று சொல்றீங்க.
நீங்க டான்ஸ் மாஸ்டரா இல்ல ரவுடியா? என ரசிகர் ஒருவர் கேட்டார்.
அப்போது பதிலளித்த காயத்ரி "நான் தமிழ் சினிமாவில் வரும் மாஸ் படங்களை பார்த்து வளர்ந்தேன். அதை பார்த்து தான் இப்படி கத்துக்கிட்டேன்.
அது எனக்கு ரொம்ப பிடிக்கும் என கூறியுள்ளார்

## பழையன கழிதல்




நீண்ட நாட்களாக BiggBoss வீட்டில் இவர் வெளியேறியே ஆக வேண்டும் என்று ரசிகர்கள் விரும்புவது காயத்ரி. இவரால் வீட்டில் நிறைய பிரச்சினைகள் ஏற்படுவது ரசிகர்களுக்கு சுத்தமாக பிடிக்கவில்லை.

ஆனால் இந்த வாரம் யார் வெளியேறுவார் என்பது தெரியவில்லை. புதுமுகங்கள் வீட்டிற்குள் வந்திருப்பதால் இந்த வாரம் சுமுகமாக சென்றிருக்கிறது. இந்த நிலையில் கமல்ஹாசன் பழையன கழிந்தே தீர வேண்டும். புதியன புகுந்தே ஆக வேண்டும் என்று கூறுகிறார்.

## ஆரவின் பதில்



பலரின் பார்வையையும் தன் பக்கம் இழுத்த ஓர் தந்திரம் தான் இந்த பிக்போஸ் நிகழ்ச்சி. ஓவியா இருந்த வரை சமூக வலைத்தளங்களில் ஓயாத ஆர்ப்பாட்டம் இருந்தது. ஓவியாவும் ஆரவ்வை விரும்புவதாக கூறினார்கள்.

தன் காதலையும் வெளிப்படுத்தினார். ஆனால் ஆரவ் அதை மறுக்க விடயம் வேறு மாதிரி சென்றது. ஒரு கட்டத்தில் ஓவியா மன உளைச்சலுக்கு ஆளாகி பின் அங்கிருந்து வெளியேறினார்.

ஓவியா விடயத்தில் ஆரவ் மீது ரசிகர்களுக்கு வருத்தம் கலந்த கோபம் இருக்கிறது. இந்நிலையில் புதியாக வந்துள்ள காஜல் பசுபதியும் ஆர்வ்விடம் சுருக்கென ஒரு கேள்வி கேட்கிறார்.

அதில் அது எப்படி, ஹாட்டா, அழகா, உலகமே விரும்பும் பெண்ணை உங்களுக்கு ஏன் வேண்டாம் என்று தோன்றியது என கேட்டார். மற்றவர்களின் ரியாக்ஷன் உடனே மாறியது. இந்நிலையில் ஆரவ் என்ன சொல்வார் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. இன்னும் இது [illegible] அதிர்ச்சி இருக்கலாம்.

## டுவிட்டரில் வந்த பிக்போஸ் காயத்திரி



பிக்போஸ் நிகழ்ச்சியிலிருக்கும் போட்டியாளர்களில் காயத்திரி ரகுராமும் ஒருவர். ஆரம்பத்திலிருந்தே இவரின் அடாவடியான பேச்சு, மிரட்டும் வகையில் நடந்து கொண்டது என முக சுளிப்பை உண்டாக்கினார்.

அதிலும் ஓவியா விடயத்தில் இவர் நடந்து கொண்டது ரசிகர்களுக்கு கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. சமூக வலைத்தளங்களில் வெகுவாக எதிர்ப்புகள் கிளம்பின. கமலும் வார இறுதி நாட்களில் சூட்சுமமாக சொல்லி காண்பித்தார்.

இதன் தொடர்ச்சியாக நேற்று நடந்த நிகழ்ச்சியிலும் ரசிகர்களின் தரப்பு கேள்விகளுக்கு காயத்திரியும் நான் அப்படியில்லை, இப்படியில்லை என பதிலளித்தார். இந்நிலையில் இந்த வாரம் காயத்திரி தான் வெளியேறப் போகிறார் என்ற வதந்திகள் பரவியது.

ஏற்கனவே ரைசா, காயத்திரி இருவரும் நாமினேஷன் ஆகியிருகிறார்கள். இந்நிலையில் அவர் ட்விட்டர் பக்கத்தில் எவிக்ஷன் புரமோவை ரீட்வீட் செய்தார். உள்ளிருப்பவர்களுக்கு வெளியுலகத்துடன் தொடர்பு இல்லை என்ற கண்டிசன் இருந்தபோதிலும், அவரின் டுவீட் இதனால் காயத்திரி தான் எலிமினேட் ஆகிவிட்டாரோ என்ற சந்தேகத்தையும் கிளப்பியுள்ளது.

வந்த காயத்திரியை ரசிகர்கள் விடாமல் விமர்சிக்க தொடங்கினார்கள். உடனே 10 நிமிடத்தில் அவர் அதை பக்கத்திலிருந்து நீக்கிவிட்டார். நிகழ்ச்சி குறித்து பேட்டியோ, செய்திகளோ கொடுக்கக்கூடாது என்ற ஒப்பந்தத்தை அவர் மீறிவிட்டாரோ என பேச தொடங்கிவிட்டார்கள்.

நமீதா, சக்தி, ஜூலி, ஓவியா என வெளியேறிவர்கள் யாரும் இப்படி செய்யாத நிலையில் காயத்திரி இப்படி நடந்துகொண்டது அவர் வெளியேறியது உண்மை தான் என தோன்றுகிறது.

## பிக்போஸ் காதலர்கள்



பிக்போஸ் நிகழ்ச்சி என்பது ஒரு பொழுதுபோக்கு தான். ஆனால், அதையும் தாண்டி அந்த வீட்டிற்குள் நடக்கும் காதல், மோதல், சண்டை என ஒரு சில விஸ்வரூபம் எடுக்கின்றது. இதற்கு சமீபத்தில் காதலால் மன உளைச்சல் ஏற்பட்டு ஓவியா வீட்டை விட்டே வெளியேறிய கதை எல்லாம் நாம் அறிந்ததே. இந்நிலையில் ஹிந்தி பிக்போஸிலும் இப்படி ஒரு கதை நடந்தது. அங்கு வீட்டிற்குள் அஷ்மித் பட்டேல், மெஹெக் சாஹல் என்பவர் காதலித்தனர். பிறகு இவர்களுக்கு மோதல்வந்து தற்போது மீண்டும்இருவருக்குமிடையே காதல் வர, இன்னும் ஆறு மாதங்களில் இரு வீட்டார் சம்மதத்துடன் இவர்கள் திருமணம் நடக்கவுள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழையன போவதும் புதியன வருவதும் தவறில்லை கால ஓட்டத்தில்

## தொழில் ரகசியம்

பயப்படாதீர்கள். இதுவும் 'தொழில் ரகசியம்' பகுதி தான். புதிய பொருட்களுக்கு யோசனைகளை எங்கிருந்து எப்படி தேடுவது. அதை எப்படி, எவ்வாறு உருவாக்குவது என்பதை பற்றி கொஞ்சம் பார்ப்போமே!

முதலில் சயின்ஸ் பத்திரிகையில் 'ப்ரையன் ஊஸ்ஸி' மற்றும் 'பென் ஜோன்ஸ்' என்ற இரு 'நோர்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழக' வர்த்தகப் பேராசிரியர்கள் எழுதிய கட்டுரையைப் பற்றி பேச வேண்டியிருக்கிறது.

படைப்பாற்றலை வளர்க்க, புதியவைகளை உருவாக்க வேறு இடங்களில் நிரூபிக்கப்பட்ட 2 யோசனைகளை எடுத்து அதை புதிய முறையில் இணையுங்கள் என்கிறார்கள்.

பலர் இந்த வழியை பயன்படுத்தி புதியவைகளை படைத்திருப்பதை ஆய்வு மூலம் ஆராய்ந்து கூறினார்கள். ஏற்கெனவே இருக்கும் விடயங்களின் புதிய கலவை தான் படைப்பாற்றல் கோட்பாட்டின் அடிப்படை. கலை, அறிவியல் முதல் வணிக கண்டுபிடிப்புகள் வரை இதே கதைதான் என்கிறார்கள்.

பல புதிய யோசனைகள் பழைய கோட்பாடுகளிலிருந்துதான் பிறக்கின்றன. இருக்கும் அறிவிலிருந்து தான் புதியவைகள் தோன்றுகின்றன என்கிறார்கள். தலைமுடி ஆரோக்கியத்திற்கு எண்ணெய் தேய்த்து சீயக்காயோடு குளித்தோம். மற்ற நாட்களில் அவசர குளியல் சௌகரியத்திற்கு ஷம்போவை பயன்படுத்தினோம். நமக்கு ஆரோக்கியமும் தேவைப்பட்டது. அதோடு சௌகரியமும் அவசியமாகப்பட்டது. இதை ஆழமாக அலசி, அழகாகப் புரிந்து கொண்டு, அமோகமாக இரண்டையும் கலந்தது 'கெவின்கேர்' கம்பனி. ஆரோக்கிய சீயக்காயை சௌகரிய ஷம்போ வடிவில் சேர்த்துத் தர, தமிழ்கூறும் நல்லுலகப் பெண்களின் வெள்ளிக்கிழமை தோழியானாள் 'மீரா' ஹெர்பல் ஷம்போ. அதாவது ஏற்கெனவே இருந்த இரண்டு பழைய விடயங்களின் புதிய கலவைதான் மீரா!

பிகேவியரல் எகனாமிக்ஸ்

கடந்த 50 ஆண்டுகளில் பிறந்து வளர்ந்த பல சிறந்த அறிவார்ந்த புதுமைகளை (Intellectual innovations) ஆராய்ந்தால் ப்ரையன் மற்றும் பென் கூறும் உண்மை இன்னமும் விளங்கும். எழுபதுகளில் தொடங்கி இன்று பலர் கவனத்தை கவர்ந்திருக்கும் பிகேவியரல் எகனாமிக்ஸ் (Behavioural Economics) என்ற இயலை எடுத்துக் கொள்வோம். உளவியல் நுண்ணறிவு கொண்டு நாம் நடந்து கொள்ளும் விதத்தை அலசி நம் பொருளாதார முடிவுகள் எடுக்கும் முறைகளை ஆராயும் பொருளாதார ஆய்வு தான் பிகேவியரல் எகனாமிக்ஸ் . குறுகிய காலத்தில் அபரிமிதமான வளர்ச்சி கண்டிருக்கும் இந்த இயல் தான் இன்று பொருளாதார சிந்தனையில் முக்கிய கொள்கை. பல நாடுகளின் அரசுகளின் பொது கொள்கை முடிவுகளுக்கு பயன்படுத்தப்படும் இந்த இயலை பற்றி விவரமாக வேறு ஒரு சமயம் பார்ப்போம். இந்த இயல் ஏதோ சுயம்புவாய் பூமியிலிருந்தோ ஆய்வு கூடத்திலிருந்தோ எழவில்லை. உளவியல் கோட்பாடுகளை பொருளாதார சிந்தனைகளில் கலந்ததால் விளைந்த இயல். அதாவது பழையதும் பழையதும் சேர்ந்த புதியது!



பழைய யோசனைகளை புதிய முறையில், புதிய வகையில் கலந்து புதுமைகள் படைப்பது என்னவோ சமீபத்திய சாதனை என்று நினைக்காதீர்கள் என்கிறார் 'சார்ல்ஸ் டுஹிக்' என்ற எழுத்தாளர். 'தோமஸ் அல்வா எடிசனின்' கண்டுபிடிப்புகளில் பல புழக்கத்தில் இருந்த பழைய அறிவியல் கோட்பாடுகள், யோசனைகளின் கலவையே என்ற வரலாற்று ஆசிரியர்களின் கூற்றை ஆதாரம் காட்டுகிறார். தந்தி தொழில்நுட்பத்தின் மின்காந்த சக்தி பற்றிய புரிதலின் அடிப்படையில் அந்த அறிவை எடிசனும் அவர் சகாக்களும் லைட்டிங், ஃபோனோக்ராஃப், ரயில், மைனிங் போன்ற துறைகளில் பயன்படுத்தி புதிய யோசனைகள் கண்டுபிடித்தனர் என்கிறார்.

அறிவுசார் இடைத் தரகர்கள்

'அமோக படைப்புத்திறன் உள்ளவர்கள் என்று நாம் நினைக்கும் பலர் அறிவுசார் இடைத்தரகர்கள்' என்று வர்ணிக்கிறார் ப்ரையன் ஊஸ்ஸி. இருக்கும் ஒரு துறையில் பெற்ற அறிவை, புரிதலை இன்னொரு துறைக்கு மாற்றும் வித்தையை புரிந்தவர்கள் இவர்கள் என்கிறார். சமூகவியலில் இது போன்றவர்களை யோசனை இடைத் தரகர்கள் என்கிறார்கள். இது போன்ற படைப்புத்திறன் மேதைகளின் மூளையில் சுயம்புவாய் எழுந்த ஒன்றில்லை. இது ஒரு ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் என்று கூறிய சமூகவியலாளர் 'ரொனால்ட் பர்ட்' கூற்றை மேற்கோள் காட்டுகிறார் டுஹிக்.

இது போன்ற யோசனை இடைத் தரகராய் மாறுவது பெரிய கம்பசூத்திரமல்ல. நீங்களும் நானும் கூட இது போல் கலந்து புதுமைகள் படைக்க முடியும் என்று பல ஆய்வு கட்டுரைகள் கூறுகின்றன. ஆய்வை விடுங்கள். நம்மை சுற்றியிருக்கும் பல புதிய கோட்பாடுகளை, புதிய பொருட்களை பாருங்கள். யாரோ ஒருவர் 2 பழைய யோசனைகளை எடுத்து அதை தூசி தட்டி, குளிப்பாட்டி, புது புடவை போட்டு பொட்டு வைத்து நம் தலையில் கட்டியிருப்பது உங்களுக்கே புரியும்.

குழந்தைகளுக்கு பிடித்த ஒன்றிலிருந்து ஆரம்பிப்போம். அவர்களுக்கு சொக்லெட் என்றால் கொள்ளை பிரியம் என்று நமக்குத் தெரியும். அதோடு பொம்மைகள் என்றால் அதிகமாக பிடிக்கும் என்பதும் தெரியும். ஆனால் இரண்டையும் கலந்து தந்தால் அவர்கள் பைத்தியமாய் அதை வாங்கித் தள்ளுவார்கள் என்பதை நாம் யோசிக்கவில்லை. அப்படி சிந்தித்து சாக்லெட்டையும் பொம்மையையும் கலந்து தந்தது 'கிண்டர்ஜாய்'. இன்று உலகெங்கும் சக்கை போடுகிறது!

குழந்தைகளோடு நமக்கும் பிடிக்கும் ஒரு விடயம் கோன் ஐஸ் க்ரீம். இது பிறந்த கதை தெரியுமா? 1904-ல் அமெரிக்காவில் நடந்த உலக கண்காட்சியில் 'ஏர்னஸ்ட் ஹம்வி' என்பவர் பிஸ்கெட் போன்ற ஃவாஃபில் என்ற தின் பண்டத்தை விற்றார் . அடுத்த கூடத்தில் ஐஸ்க்ரீம் விற்றவருக்கு கப்புகள் தீர்ந்துவிட்டன. பார்த்தார் ஹம்வி. தன் ஃவாஃபிலை சுற்றினார், அதில் ஐஸ் க்ரீமை வைத்தார். விற்கத் தொடங்கினார். பிறந்தது கோன் ஐஸ் க்ரீம்! அன்றிலிருந்து இன்று வரை நாம் ஒலிம்பிக் பந்தத்தை பிடித்துகொண்டு ஓடுவது போல் கோன் ஐஸை பிடித்துக்கொண்டு திரிகிறோம்!

உண்பதை விட்டு ஓட்டுவதை பார்ப்போம். மொபெட் ஓட்டுவது சுலபம், குறிப்பாக பெண்களுக்கு. ஆனால் வலு குறைவு. ஸ்கூட்டருக்கு சக்தி அதிகம். ஆனால் ஓடுவது எளிதல்ல. இதை இரண்டையும் கலந்தால் என்ன என்று 'டிவிஎஸ்' கம்பனிக்கு தோன்றியது. மொபெட்டின் எளிமையோடு ஸ்கூட்டரின் சக்தியை சேர்த்தது. பிறந்தது 'ஸ்கூட்டி'. பெண்கள் அதைக் கொண்டு ரோட்டில் அடிக்கிறார்கள் லூட்டி!

ரெலிஃபோன் என்ற கருவியில் காபியர் வசதியை சேர்த்ததால் பிறந்த வசதி தான் ஃபக்ஸ் மெஷின். அதை விடுங்கள். பழைய கர்நாடக ராகங்களை எடுத்து அதோடு கிராமியத்தையும் மேற்கத்திய நோட்ஸ்களையும் கலந்து உணர்வுகளை தாலாட்டும் புதிய மெட்டுகளை, புதுமை மொட்டுக்களை 42 வருடங்களாக நமக்குத் தரவில்லையா? இசைஞானி இளையாராஜா!

பழையதை பழையதோடு சேர்த்தால் பாமரனால் கூட புதுமைகள் படைக்க முடியும் என்று நமக்கு பலர் செய்தே காட்டியுள்ளனர்

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினாலே'. இது வீட்டில் படிக்க வேண்டிய நன்னூல். 'பழையனதோடு பழையன சேர்ப்பின் புது பிராண்ட் புகுத்த வகையும் தானே'. இது அலுவலகங்களில் படிக்கவேண்டிய என்னூல் என்று வைத்துக்கொள்ளுங்களேன்!




ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## முதலீட்டாளர் கருத்துக்களம் எதிர்வரும் 26-ம் திகதி யாழில்




கொழும்பு பங்குச்சந்தையின் ஏற்பாட்டில் முதலீட்டாளர் கருத்துக் களம் எனும் நிகழ்வு எதிர்வரும் 26-ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை யாழ்ப்பாணம் ரில்கோ சிற்றி ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேரினப் பொருளாதாரக் கண்ணோட்டம் எனும் தலைப்பில் கொழும்பு பல்கலைக் கழக பொருளியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். கணேசமூர்த்தியின் விரிவுரையும், என்.டி.பி செக்குரீட்டிஸ் கம்பனி உரிமை முதல் ஆய்வு நிபுணர் ஆர்.ரகுராம் துறைப் பெறுபேற்றுப் பகுப்பாய்வு மற்றும் சந்தை வாய்ப்புகள் எனும் எனும் விடயத்திலும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

அத்துடன் பங்குதாரர்கள் மற்றும் நம்பிக்கை அலகு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பும் இடம்பெறவுள்ளது.

ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை என்பதால் உங்கள் ஆசனங்களை முற்கூட்டியே 0777822014 /0212221455 என்ற இலக்ங்களுடன் தொடர்பு கொண்டு இலவசமாக பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் கொழும்பு பங்குச் சந்தையின் யாழ்.கிளை முகாமையாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,492.69 | 6,436.28 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,724.21 | 3,706.02 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 3,272.804

**உயர்வடைந்தபங்குகள்(ரூ)** பிசி ஹவுஸ்(0.20),பேருவளை ரெஸ்சோட்(1.00), லங்கீம் டெவலப்மன்ட்(3.40), கெல்சே(49.70),ஆதாம் கப்பிரல்(0.90).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** சிரஸ் கிக்கடுவ(12.60), ரேட் பினான்ஸ்(38.00), ஏசிஎல் பிளாஸ்ரிக்(132.60), பரஹன்(65.10), செரண்டிப் இன்ஜி(8.60).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## DFCC வங்கியின் சி.ஈ.ஓவாக லக்ஸ்மன் சில்வா



டிஎப்சிசி வங்கியின் புதிய தலைமை நிறைவேற்று அதிகாரியாக லக்ஷ்மன் சில்வா , கடந்த ஓகஸ்ட் 16-ம் திகதி முதல் பதவி ஏற்றுள்ளார்.

நிதியியல் சேவைகள் மற்றும் வங்கிக் கைத்தொழில் துறையில் தனது விரிவான பின்னணி மற்றும் நிபுணத்துவத்துடன் லக்ஷ்மன் சில்வா , டிஎப்சிசி வங்கியை நாட்டிலுள்ள முன்னணி மற்றும் மதிக்கத்தக்க வணிக வங்கிகளில் ஒன்றாக மாற்றுவதற்கும் புதுமை மற்றும் டிஜிட்டலை மையப் படுத்தி வங்கியின் வளர்ச்சிக்கான ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத் துவார் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. சில்வா, நிதியியல் துறையில் 30 வருட அனுபவமுடையவர், களனி பல்கலைக்கழகத்தில் தனது B.Com (Sp.) படிப்பினையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் முதுகலைபட்டமும் (MBA) பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 151.19 | 154.99 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 193.96 | 200.58 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 176.32 | 182.94 |
| சுவிஸ் பிராங் | 156.07 | 162.31 |
| கனேடிய டொலர் | 118.68 | 123.35 |
| அவுஸ்திரேலிய டொலர் | 118.30 | 123.54 |
| சிங்கப்பூர் டொலர் | 110.27 | 114.30 |
| ஜப்பான் யென் | 1.37 | 1.42 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.38 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.74 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரண்மனைக் கோமாளி

முன்னொரு காலத்தில் சந்தனபுரி நாட்டை அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் அரசவையில், விதூஷகன் வரதன் என்பவன் வேலை செய்து வந்தான். அவன் எப்போதும் அரசரை வேடிக்கையாக கேலி செய்து வந்தான். இதனால் அரசர் அவன் மீது கோபம் கொண்டார். அதனால் அவர் அமைதி குலைந்தது. படுக்கையில் படுத்த அவரால், தூங்க முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தபடியே இருந்தார்.

கோபம் அடங்காத அவர் பற்களை நறநறவென்று கடித்தார். அருகிலிருந்த அரசி, "தூக்கம் வராமல் ஏன் இப்படித் துன்பப் படுகிறீர்?" என்று கேட்டாள். "அதற்கு காரணம் விதூஷகன் வரதன் தான்!" என்றார் அரசர்.

"அரண்மனைக் கோமாளியா? அவன் மீதா இப்படிக் கோபம் கொண்டுள்ளீர். அவனை மன்னித்து விடுங்கள். உங்களை மகிழ்ச்சி படுத்தத்தான் அவன் அங்கே இருக்கிறான். அதற்காகத்தான் ஊதியம் வாங்குகிறான். நீங்கள் சிரிப்பதற்காக அவன் ஏதோ பேசி இருப்பான" என்றாள்.

"நீ சொல்வது சரிதான். இருந்தாலும் அவன் வேலையை அவன் செய்வது இல்லை. என்னையே அடிக்கடி கேலி செய்கிறான். அதனால்தான் அவன் மீது கோபம" என்றான்.

"உங்களை கேலி செய்யும் துணிவு அவனுக்கு வந்து விட்டதா? அப்படி என்ன கேலி செய்தான்?"

"அதை உன்னிடம் சொல்ல வேண்டுமா?" என்று கோபத்துடன் கேட்டார். "உங்களை அவன் அவமானப்படுத்திவிட்டானா? நீங்கள் அவனை மன்னிக்க கூடாது. இந்த குற்றத்திற்காக, அவன் சாகத்தான் வேண்டும" என்றாள் அரசி.

இதைக் கேட்ட அவர் ஆறுதல் அடைந்தார். "நானும் அப்படித் தான் நினைத்தேன். அவன் செத்தால் தான், மற்றவர்களுக்கு அது பாடமாக இருக்கும். யாரும் என்னைக் கேலி செய்யத் துணிய மாட்டர்" என்றார். அதன் பிறகு அவர் தூங்கத் தொடங்கினார்.

எப்படியோ அவரைத் தேற்றி விட்டோம் என்று நினைத்து அரசியும் தூங்கினாள். பொழுது விடிந்தது. எழுந்த அரசர் விதூஷகன் வரதனை முதலில் அவமானப்படுத்த வேண்டும். பிறகு கொல்ல வேண்டும். "எப்படி அவமானப் படுத்திக் கொல்வது" என்று சிந்தித்தபடி இருந்தார்.

நல்ல திட்டம் ஒன்று அவருக்குத் தோன்றியது. அரசவைக்கு வந்த அவர் அரியணையில் அமர்ந்தார். வழக்கம் போல அங்கு வந்த விதூஷகன் வரதன் அவரை வணங்கினான்.

"நன்றி கெட்டவனே! உனக்கு எவ்வளவு மதிப்பு தந்தேன்? நேற்று எல்லாரையும் சிரிக்க வைப்பதாக நினைத்து என்னை அவமானப்படுத்தி விட்டாய். இனிமேல் இப்படிச் சிரிக்க வைக்க நீ உயிருடன் இருக்கப் போவது இல்லை. உன்னை கொல்லப் போகிறேன"என்று கோபத்துடன் கத்தினார் அரசர்.

"அரசே! நான் உங்களை அவமானப் படுத்துவேனா? நகைச்சுவைக்காக அப்படிப் பேசினேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று கெஞ்சினான். "நீ பேசியதைக் கேட்டது போதும். இனி உன் பேச்சை யாரும் கேட்கப் போவது இல்லை" என்ற அவர் காவலாளி ஒருவனைப் பார்த்தார்.

"வீதியில் திரியும் நாய் ஒன்றை இங்கே இழுத்து வா" என்றார். எலும்பும் தோலுமாக இருந்த நாய் ஒன்றைப் பிடித்து, இழுத்துக் கொண்டு வந்தான்.

தெரு நாயை அரசர் ஏன் இழுத்து வரச் சொன்னார் என்பது விதூஷகன் வரதனுக்கு புரியவில்லை.

"அந்த நாயை வைத்து அவர் என்ன தண்டனை தரப்போகிறார்? ஒன்றும் புரியவில்லையே" என்று எல்லாரும் குழம்பினர்.

"முட்டாளே! இந்தத் தெரு நாய்க்கும், உனக்கும் அதிக வேறுபாடு இல்லை. இந்த நாயை எங்கள் கண் முன்னால் நீ கொல்ல வேண்டும். அதே முறையில் நீயும் சாகப் போகிறாய"என்றார்.

இதைக் கேட்டு அவையில் இருந்த எல்லாரும் திகைத்தனர்.



"உயிர் பிழைக்க வாய்ப்பே இல்லை. நாயை மண்டையில் அடித்துக் கொன்றால் அவனையும் அப்படியே கொல்வார். வயிற்றில் வாளைச் செருகினால் அவன் வயிற்றிலும் வாளைச் சொருகுவர். பாவம் அவன்" என்று நினைத்தனர்.

ஆனால், விதூஷகன் அமைதியாக இருந்தான்.

"விதூஷகனே! நீ உயிர் பிழைக்க எந்த வாய்ப்பும் இல்லை. இந்த நாயைக் கொல்ல எந்தப் படைக் கருவியைப் பயன்படுத்தப் போகிறாய்? வாளா? ஈட்டியா? அம்பா?" என்று கேட்டார். அவர் முகத்தில் புன்முறுவல் தெரிந்தது.

எல்லாரும் பதைபதைப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

நாயின் அருகே சென்றான் அவன் இரக்கத்துடன் அதை பார்த்தான். "நாயே! என்னை மன்னித்து விடு. எனக்கு வேறு வழி தெரிய வில்லை" என்றான்.

அவன் அதை எப்படிக் கொல்லப் போகிறான் என்பதை எல்லோரும் ஆர்வமாகப் பார்த்தனர்.

அந்த நாயின் வாலைத் தன் இரண்டு கைகளாலும் பிடித்துத் தூக்கினான். தலைக்கு மேல் அதைச் சுழற்றினான். அப்படியே அதைத் தூக்கி எறிந்தான்.

சுவரில் வேகமாக மோதிய அது அப்படியே இறந்து விழுந்தது.

"அரசே! நீங்கள் சொன்னது போல இந்த நாயைக் கொன்று விட்டேன். அதே முறையில் நீங்கள் என்னைக் கொல்லலாம்" என்றான். அதே முறையில் அவனைக் கொல்ல முடியாது என்பது அரசருக்கு புரிந்தது.

"உன் அறிவுக்கூர்மையை மெச்சுகிறேன். உன்னை உயிருடன் விடுகிறேன். மீண்டும் என்னைக் கேலி செய்து என் கோபத்திற்கு ஆளாகாதே" என்றார்.

அரசே! நன்றி. இனி கவனமாக நடந்து கொள்வேன்... தங்களை புண்படுத்த மாட்டேன்" என்றான். அரசனும் மன்னித்து விட்டுவிட்டார்.

## 08.2017 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1770 - கப்டன் ஜேம்ஸ்குக் கிழக்கு அவுஸ்திரேலியாவில் தரையிறங்கி அதனை பெரிய பிரித்தானியாவுக்குச் சொந்தமாக்கி அதற்கு நியூ சவுத் வேல்ஸ் எனப் பெயரிட்டான்.
- 1821 - ஜார்விஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1831 - கறுப்பின அடிமைகளுக்குத் தலைமை தாங்கி நாட்டர்னர் கிளர்ச்சியைத் தொடங்கினார்.
- 1842 - டாஸ்மானியாவின் தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப்பட்டது.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புத் தீவிரவாதிகளின் தாக்குதலில் கன்சாஸ் மாநிலத்தில் லோரன்ஸ் நகரம் அழிக்கப்பட்டது.
- 1911 - லியனார்டோ டா வின்சியின் ஓவியமான மோனாலிசா பாரிசின் லூவர் அருங்காட்சியகத்தில் இருந்து திருடப்பட்டது.
- 1920 - சேர் ஏ. கனகசபை இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவானார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின்கிராட் போர் ஆரம்பமானது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சாலமன் தீவுகள் தொடர் சமர் முடிவடைந்தது.
- 1959 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் 50ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.
- 1963 - தெற்கு வியட்நாமின் குடியரசு இராணுவத்தினர் நாட்டின் பௌத்த தலங்களை அழித்து நூற்றுக்கணக்கானோரைக் கொன்றனர்.
- 1968 - சோவியத் தலைமையிலான வார்சா ஒப்பந்த நாடுகளின் படையினர் செக்கோஸ்லாவாக்கியாவைக் கைப்பற்றின.
- 1969 - ஆஸ்திரேலியனான மைக்கல் டெனிஸ் ரொஹான் என்பவன் ஜெருசலேமின் அல் அக்சா மசூதிக்குத் தீ வைத்தான்.
- 1983 - பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் பெனீனோ அக்கீனோ மணிலாவில் கொலை செய்யப்பட்டார்.
- 1986 - கமரூனில் நியோஸ் ஆற்றில் காபனீரொட்சைட்டு வளிமம் கசிந்ததில் 1,800 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1991 - லாத்வியா சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 2007 - சூறாவளி டீன் மெக்சிகோவை 165 மைல்/மணி வேகத்தில் தாக்குதலை ஆரம்பித்தது.

பிறப்புகள்

- 1907-ப. ஜீவானந்தம், இந்தியப் பொதுவுடமைவாதி (இ. 1963)
- 1929-மன்னார்குடி பரமசிவம்பிள்ளை, தமிழக நாதஸ்வரக் கலைஞர் (1976)
- 1961-வ.பி.சந்திரசேகர், இந்தியத் துடுப்பாட்ட வீரர்
- 1978-பூமிகா சாவ்லா, இந்திய நடிகை
- 1984-பருன் சொப்டி, இந்திய நடிகர்
- 1986-உசேன் போல்ட், ஜமைக்கா ஓட்டவீரர்

இறப்புகள்

- 1995-சுப்பிரமணியன் சந்திரசேகர், நோபல் பரிசு பெற்ற இந்திய இயற்பியலாளர் (பி. 1910)
- 2004-சச்சிதானந்த ராவுத்ராய், இந்திய ஒரியக் கவிஞர் (பி. 1916)
- 2006-பிசுமில்லா கான், இந்திய செனாய் இசைக் கலைஞர் (பி. 1916)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 120 | 80 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 85 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 250 | 250 | 300 | 250 |
| தக்காளி | 160 | 200 | 120 | 170 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 60 | 80 | 80 | 80 |
| கோவா | 90 | 100 | 80 | 120 | 100 | 100 |
| கரட் | 100 | 250 | 140 | 200 | 200 | 160 |
| பூசனி | 60 | 100 | 40 | 60 | 80 | 70 |
| புடோல் | 50 | 100 | 50 | 100 | 100 | 80 |
| வாழைக்காய் | 200 | 100 | 80 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 140 | 200 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 140 | 120 | 130 |
| பாகற்காய் | 200 | 300 | 150 | 100 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 70 | 100 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 100 | 140 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 | 150 | 80 | 140 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 40 | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 200 | 100 | 150 | 120 | 150 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 40 | 60 | 60 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 100 | 200 | 200 | 140 |
| கத்தரித்தம்புள்ள | 120 | 100 | 80 | 120 | 120 | 100 |
| கீரை-1பிடி | 40 | 20 | 30 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 60 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 65 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | — | — | — | — |
| வெங்காயப்பூ | 150 | 200 | 150 | 200 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 10 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 60 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கண்ணுக்கு வெண்ணெயும்
மறு கண்ணுக்கு சுண்ணாம்பும்
– தமிழ்ப்பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கோப்பாய் மண்ணில் இந்தியாவுக்கும் எங்களுக்கும் இரு வேறு நியாயம்

இறந்தவர்களை நினைவுகூருவது என்பது மனித உரிமையுடன் சார்ந்தது.

எல்லாள மன்னனும் துட்டகைமுனுவும் போரிட்டு எல்லாளன் இறந்தபோது அவ்விடத்தில் எல்லாள மன்னனுக்கு நினைவிடம் அமைத்து மரியாதை செலுத்துமாறு துட்டகைமுனு உத்தரவிட்டதான சம்பவங்கள் உண்டு.

தவிர, 1987ஆம் ஆண்டு கோப்பாயில் உயிரிழுந்த இந்திய இராணுவ அதிகாரிக்காக அமைக்கப்பட்ட நினைவிடம் இப்போது புதுப்பிக்கப்பட்டு அவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

கோப்பாயில் உயிரிழுந்த இந்திய இராணுவ அதிகாரிக்கு நினைவிடம் அமைத்து இந்திய இராணுவத் தளபதி ஒருவர் அங்கு வந்து அஞ்சலி செலுத்தியமை இறந்தவர்களை நினைவுகூருகின்ற உரிமையுடன் சார்ந்தது.

இந்த விடயத்தைப் பல கோணங்களில் பார்க்க முடியும். அதிலொன்று இந்திய இராணுவம் விடுதலைப்புலிகளுடன் போரிட்டபோது, கோப்பாய் பகுதியில் இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழுந்தார்.

அவருக்கு அதேயிடத்தில் நினைவிடம் அமைக்கப்பட்டது என்பதுடன் இந்திய இராணுவம் தமிழர் தாயகத்துக்கு வந்து போன செய்தியும் விடுதலைப் புலிகளுடன் போரிட்ட தகவலும் வரலாறாகப் பார்க்கப்படக் கூடியதாகும்.

இரண்டாவது அச்சம்பவம் இராணுவ உத்தியோகத்தராக இருந்தவர் இப்போது இராணுவத் தளபதி தரத்தில் இருக்கின்ற நிலையில் தன் அதிகாரிக்கு அஞ்சலி செலுத்துகின்ற ஒரு நன்றிகூரும் நிகழ்வாக அதைப்பார்க்க முடியும்.

தவிர, வெளிநாடாக இருந்த போதிலும் உயிரிழுந்தவர்கள் விடயத்தில் மனிதநேயம் காக்கப்பட வேண்டும் என்பதுதான்.

இதைவிட இன்னும் பலவற்றை நாம் விமர்சன நோக்கில் பார்க்கலாம். எதுவாக இருந்தாலும் உயிரிழுந்தவரை நினைவுகூருகின்ற ஒரு நிகழ்வு மனிதாபிமானத்தின் பேரால் நடந்தேறியுள்ளது.

எனவே கோப்பாயில் உயிரிழுந்த இந்திய இராணுவ அதிகாரிக்கு அதேயிடத்தில் நினைவிடம் அமைத்து அஞ்சலி செலுத்தப்பட்டமையை நாம் முன்மாதிரியான செயலாகப் பார்க்கிறோம்.

இதேபோல் விடுதலைப் புலிகளின் சமரின் உயிரிழுந்த இலங்கைப் படையினரின் நினைவிடங்கள் ஆனையிறவு உள்ளிட்ட பல இடங்களில் உள்ளது. அங்கு சிங்கள மக்கள் சென்று அஞ்சலி செலுத்துவதைப் பார்க்கின்றோம். இதையும் உயிரிழுந்தவர்களை நினைவுகூரும் உரிமை என்ற கோணத்தில் பார்க்கிறோம்.

ஆனால், நாங்கள் தமிழர்கள் எங்கள் உரிமைக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்த எங்கள் பிள்ளைகளின் நினைவிடங்களை; அவர்கள் துயிலும் இல்லங்களை அழித்து அந்த இடத்தில் படைத்தரப்பின் அலுவலகம் அமைத்திருக்கிறீர்களே இது எந்தவகையில் நியாயமாகும்?

இந்திய இராணுவ அதிகாரிக்கு கோப்பாயில் நினைவிடம்; இலங்கைப் படைத்தரப்புக்கு ஆனையிறவில் நினைவாலயம் ஆனால் எங்கள் பிள்ளைகள் எங்கள் மண்ணில் குருதி சிந்தி உயிரிழுந்தனரே அவர்களுக்கு கோப்பாயில் நினைவாலயம் அமைத்தால் அதை இடித்து தகர்த்து விடுகிறீர்கள்.

இதுபற்றி இந்தியாவும் பேசாமல் இருந்தது எனில் உங்களுக்கு ஒரு நியாயம் எங்களுக்கு ஒரு நியாயமா?

ஆக, கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை மக்களின் அஞ்சலிக்காக ஒப்படைப்பதே தர்மமும் நீதியுமாகும். இதை இலங்கை அரசு செய்ய வேண்டும், இந்திய அரசு செய்விக்க வேண்டும்.

கூடவே முள்ளிவாய்க்காலில் உயிரிழுந்த எங்கள் உறவுகளுக்காக நினைவாலயம் அமைப்பது தொடர்பில் ஓர் அமைப்பு உருவாக்கி அதை செயலாக்குவது அவசியம்.

## 'கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்'
# வெற்றி பெற்றோர் விபரம் வெளியீடு

நல்லூர்க்கந்தன் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம் என்னும் தொனிப் பொருளில் முன்னெடுத்த கந்த புராண எழுச்சி விழாவில் வசந்தம் தொலைக்காட்சி, வசந்தம் வானொலி ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்திய நல்லூர் ஆலயம் தொடர்பான சித்திரப் போட்டி, கந்தபுராண நூலறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும்நிகழ்வு நாளை 22 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பூங்காவனத் திருவிழா வன்று நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கலந்து கொள்வார். இதில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு,

சித்திரப்போட்டி-
விசேட பாராட்டுப் பரிசில் பெறுவோர்

ச. கலையுகன் -மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம், ஜெ.லதுர்சன்-யாழ். இந்துக் கல்லூரி,க.திலீசன்-யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி, அ. பாத்திமா றிப்னா-கமு/சது/அல்-மர்ஜான் மகளிர் கல்லூரி, ம. ஜனுசாந்தன்-வவு/ விபுலானந்தாக் கல்லூரி, சி. கோபானந்தராசா- கொக்குவில் கிழக்கு, ஐ. சுதாமதி- கிளிநொச்சி,சி. மிதுஜனா- வண்ணார்பண்ணை, பா. நிதர்சன் - பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், ச. டினோயன் - யா/ஆனைக் கோட்டைறோ.க.த.கபாடசாலை

சித்திரப் போட்டி
பாராட்டுப் பரிசில்
பெறுவோர்.

ஆ.பியூர்தன்-மன். அடம்பன் ம.ம.வி, ரா. கஜவதனன்-யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி,சி.சாரணி-யா/ சாவ கச்சேரி மகளிர் கல்லூரி, எஸ். தீவனா -வவு. றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியலயம் ,ச. சரஜீகன்- யாழ்/ இந்துக் கல்லூரி ,சி. தேனுஜன்- சந்நிதி ஆலய அறநெறிப்பாடசாலை , வி. பிரவீன் -யாழ்/ மத்திய கல்லூரி ,சோ. உமாகௌரி- உடுப்பிட்டி அம்பாள் சமேத கல்யாண சுந்தரர் அறநெறிப் பாடசாலை, ஜ. நிலக்ஷிகா-மன்/ இலுப்பைக்கடவை மகா வித்தியாலயம்,சி. கிறிஸ்ரீனா ஜெரின்- மணியந்தோட்டம்

விசேட பாராட்டுப்
பரிசில் பெறுவோர்-
கந்தபுராண நூலறிவு

இ.சாயிலக்ஷ்மி- யா/ இந்து மகளிர் கல்லூரி, க.வைஷ்ணவி- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யோ.சங்கீர்த்தனசர்மா- யா/ஆவரங் கால் நடராஜ இராமலிங்க வித்தி, யோ.சதாத்மிகா- யா/ அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி, யோ- சஞ்சுதசர்மா- யா/ இந்துக் கல்லூரி, கா. சித்தாரா- யா/ இந்து மகளிர் கல்லூரி, அ.லிராகன்- யா/ இந்துக் கல்லூரி, சி.வனோஜா- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, க.கவிசன்- யா/ மாதகல் நுணைசை வித்தியாலயம், ச.கஸ்தூரி- யா/ மாதகல் நுணைசை வித்தியாலயம்.

பாராட்டுப் பரிசில்
பெறுவோர்- கந்தபுராண
நூலறிவு

கு.சிறிசுபாங்கன்-யா/இந்து ஆரம்பப் பாடசாலை, கா. ஹசினி- யா/வேம்படி மக ளிர் உயர்தரப்பாடசாலை, இ. திருவாசகி- யா/ சண்முகான ந்தா வித்தியாலயம், ஸ்ரீ. கதிர்விழி- யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இ.ஹரிகிருஷ்ணா- யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி, ச.துவானந்- யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, ஆ.வித்தியாசாகர்- யா/ இந்துக் கல்லூரி,ஆ.அபிஷாகர்- யா/ இந்துக் கல்லூரி, யோ. பவனிகா- கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம், யோ. பசனிகா- கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம், யோ. சதனிகா- கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி, கோ.யசிந்தன்- யா/ அராலி இந்துக் கல்லூரி, க.திரன்னிகா- யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இ.லதாங்கி- யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, தே.தேவதரிஸ்- யா/ மாதகல் நுணைசை வித்தியாலயம், கு.கிருஷ்ணதாஸ்- யா/ மாதகல் நுணைசை வித்தியாலயம், க.டனிசிகா- யா/ மாதகல் நுணைசை வித்தியா லயம், சி.அஜந்தனா- சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை, சி.தரன்ஜா-சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை, சி. பிரவீனா- சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை, இ.சாயி சாம்பவி- யா/ இந்து மகளிர் கல்லூரி, இ.பிரணவன்- யா/ இந்துக் கல்லூரி, சி.சாமந்தி- யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி, இ.கோபிகிருஷ்ணன்- யா/ இந்துக் கல்லூரி, இ.தனஞ்சிகன்-யா/ இந்துக் கல்லூரி, ச.சுதர்சன்- யா/ இந்துக் கல்லூரி, ச.ஜஸ்மிதன்-யா/ இந்துக் கல்லூரி, ஜெ.பானுஜா- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பு.சதுர்ஷ்யன்-யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., த.அபிநாத்- யா/ இந்துக் கல்லூரி, செ. அனுராதக் -யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ச.சிவலக்ஷன்- யா/ இந்துக் கல்லூரி, ச.சிவலக்ஷியா- யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கா. சிந்துஜா- யா/ இந்து மகளிர் கல்லூரி, கா. கஜானன்- யா/ இந்துக் கல்லூரி, ம.மயூரா- யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, ச.சாதனி- யா/ அத்தியார் இந்துக் கல்லூரி, ம.சோபனா- யா/ இடைக்காடு மகா வித்தியாலயம், ம. கேசிகன்- யா/ இடைக்காடு மகா வித்தியாலயம், சா. ஆர்த்திகா- உடுப்பிட்டி அம்பாள் சமேத கல்யாண சுந்தரர் ஆலயம் , சா. யதுர்சனன்- உடுப்பிட்டி அம்பாள் சமேத கல்யாண சுந்தரர் ஆலயம் , பு.சங்கீர்த்தனன் - யா/ வட்டு இந்துக் கல்லூரி, சு.தேனிதன்- யா/ இந்துக் கல்லூரி, ம.ஸ்ரீராம்- யா/ இந்துக் கல்லூரி, க. திவேனிகா- யா/ மகாஜனாக் கல்லூரி, க.யதுரன் - யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம், கி. தீபிதா - கிளி/ இந்துக் கல்லூரி, கி.குகநேசன்- யா/ கோண்டாவில் இராமகிருஷ்ணன் மகா வித்தியாலயம், மு. மிருணானன்- யா/ இந்துக் கல்லூரி, ப.துவாரகி- யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, அ.மயூசி- யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, பா.கேமலதா- யாழ். மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம், சோ. ஸ்ரீசந்தோஸ் சர்மா- யா/ மத்திய கல்லூரி, சி.வனோஜா- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஜெ. விராலுதன்- காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் அறநெறிப் பாடசாலை, றோ. வஜனிதா- யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, செ.ஸ்ரீநதி- யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், கோ. கனிவிழி- யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம், சு.ரிஷாந்- யா/ இந்துக் கல்லூரி, ம.தக்ஷகா- யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, ம.கௌரிதாஸ்- யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, சி.சிவாஜினி- யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, இ.சங்கீர்த்தனன்- இணுவில் பரராஜசேகரப்பிள்ளை அறநெறிப் பாடசாலை, தி.காயத்திரி-யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, தி.துவாரகன்- யா/ இந்துக் கல்லூரி, த.ஜனனி- யா/ சுழிபுரம் விக்டோறியா கல்லூரி, த.குபேரன்- யா/ மாதகல் நுணைசை வித்தியாலயம், த.துஷ்யந்தி-யா/ சுழிபுரம் விக்டோறியா கல்லூரி, த.சுதர்சன்- யா/ மாதகல் நுணைசை வித்தியாலயம், பு.வித்தியா-யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, ஜெ.மனோரஜன்-யா/ பரியோவான் கல்லூரி, மோ.கிருஷிகா- யா/ காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, மோ.றோசி-யா/ காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி. (இ

## ஆன்மீக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லைக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமி நினைவாலயத்தில் இடம்பெறும்.

சிவஸ்ரீ சோமஸ்கந்த பிரசன்னக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவும், சொல்வேந்தர் பொன். சுகந்தனின் கந்த புராணம் தொடர் சொற்பொழிவும் இடம்பெறும். (இ-3)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வினையும் பயனும்



நம் முன்னோர்கள் நல்லது கெட்டது என்பதைத் தீர்மானித்துச் சிலவற்றைச் செய்யலாம், சிலவற்றைச் செய்யக் கூடாது என்னும் முறையிலே அனுமதி கொடுத்தும், தடைவிதித்தும் வந்துள்ளார்கள். அவைகளெல்லாம் அந்தக் காலத்தை ஒட்டிய வாழ் க்கை முறைக்குப் பொறுத்தமாக இருந்திருக்கும். நாம் இன்னும் அதிகமாக, ஆழமாகப் போனால் அந்தக் காலத்தில், "இதைச் செய், அதைச் செய்யாதே" என்று சொல்வதற்கு அவர்கள் எடுத்துக் கொண்டது "சொர்க்கம்", "நரகம்" என்ற இரண்டு கற்பனைகளே. நல்லவை செய்தால் கடவுள் ஒருவனுக்கு நல்ல இடத்தைக் கொடுப்பான் தீயவை செய்தால் தண்டிப்பான் என்று ஆசை காட்டியும், அச்சுறுத்தியும் நல்லன செய்யவும், தீயன தடுக்கவும், வேண்டிய அளவிற்கு மக்களுக்குப் போதித்து வந்தார்கள். விஞ்ஞான அறிவு வளர்ச்சி பெற்றுவரும் இந்தக் காலத்திலே அந்த முறை எவ்வளவு நாட்கள் தொடர்ந்து பயன்படும்?

இன்றைக்கு என்ன வேண்டும் என்றால், "ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு" என்ற இயற்கையின் நியதியை (Law of Nature) மனிதன் உணர்ந்து கொள்ளக்கூடிய அளவிற்கு சிறுவயதிலேயிருந்து படிப்படியாக விளக்கி அந்த உணர்வு ஒவ்வொருவருக்கும் வந்து விட வேண்டும். "இதைச் செய்தால் அதன் விளைவு இதுவாகத் தான் இருக்கும், அந்த விளைவைத் தாங்கிக் கொள்வதற்கு நான் தயாரா? என்ற அளவிற்கு ஒவ்வொருவரும் அவர்களுடைய செயலிலே விளைவாகத் தொக்கி நிற்கக் கூடிய ஒரு உண்மையை, இயற்கை அமைப்பை உணர்ந்து கொள்ளக்கூடிய முறையில் உள்ள கல்விதான் இன்றைக்கு அவசியம். செயலிலேயே விளைவு இருக்கின்றது என்பது தெளிவாகவும், உறுதியாகவும் உணர்ந்து கொள்ளப் பெற்றால் ஒரு ஆசை எழும்போது, அதனை நிறைவேற்றிக் கொள்ளச் செயலில் இறங்கும்போது நல்லது அடைவோம் என்று நன்மை செய்வான், தீமை வரும் என்று அஞ்சி அதைத் தடுத்துக் கொள்வான். இந்த முறையிலே தான் தற்காலத்திற்கு கல்வி முறை அவசியம். "வினையும் பயனும்" என்ற முறையிலே ஒரு தெளிவான பொறுப்புணர்ச்சி [illegible] அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்திவேல் அணியினரை வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்தது செனமேரீஸ்



உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி (19.08.2017) அன்று நடைபெற்றது. இதில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகத்தினை கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டுக்கழகம் எதிர்கொண்டது.

ஆரம்பம் முதலே மிக விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் முதலாவது பாதி ஆட்டத்தில் இரு அணி சார்பிலும் எந்தவிதமான கோல்களும் போடப்படவில்லை. இடைவேளைக்கு பின்னர் தமக்கு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பம் ஒன்றை மிக லாவகமாக கோலாக மாற்றினர்.

சென்மேரீஸ் வீரர் நிரோஜன் சக்திவேல் அணியினர் இறுதிவரை சிறந்த முறையில் முயற்சித்த போதிலும் கோல்கள் போடப்பட முடியவில்லை. இறுதியில் 1:0என்ற கோல் கணக்கில் கட்டைக்காடு சென் மேரீஸ் விளையாட்டுக்கழகம் கிண்ணத்தினை சுவீகரித்தது. (க)

# புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா வி.கழக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

அடுத்த சுற்றில் செந்தமிழ்





புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றில் ([illegible].08. 2017) அன்று நடைபெற்ற போட்டியில் முல்லைத்தீவு உடுப்புக்குளம் அலையோசை அணியினை எதிர் கொண்டனர் செந்தமிழ் அணியினர். பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் செந்தமிழ் அணியினர் 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர். (க)

# வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி

## திருநெல்வேலி சி.சி.வெற்றி





யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினரால் நடத்தப்பட்டு வரும் V.T.மகாலிங்கம் ஞாபகார்த்த இருபது-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் திருநெல்வேலி சி.சி. அணி இரண்டாவது வெற்றி பதிவு செய்துள்ளது.

(19.08.2017) அன்று நடைபெற்ற போட்டியில் திருநெல்வேலி சி.சி அணியை எதிர்த்து பல்கலைக்கழக அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பல்கலைக்கழக அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி சி.சி அணி இருபது பந்து மாற்றங்களில் எட்டு விக்கெட்டுகள் இழப்பிற்கு 152 ஓட்டங்களை பெற்றது.

அதில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் தர்ஷிகன் 33 ஓட்டங்களையும் அசோக் 21 ஓட்டங்களையும் சுரேந்திரன் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி இருபது பந்து பரிமாற்றங்களில் ஒன்பது இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களை பெற்றது. அதில் சிறப்பாக சிவராஜ் 4 இலக்குகளையும் சைலேஸ் 2 இலக்குகளையும் பெற்றதன் மூலம் 52 ஓட்டங்களால் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டனர்.(க)

# அரையிறுதிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன் வி.கழகம்





அபி ரான்ஸ்போட் அனுசரணையுடன் கொட்டடி துள்ளுமீன் விளையாட்டு கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான மாபெரும் கடற்கரை கபடி சுற்றுப் போட்டி (18. 08.2017) அன்று நடைபெற்றது.

போட்டியில் சென் தோமஸ் B விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்ட பலாலி விண்மீன் ஆரம்பம் முதலே விண்மீனின் ஆதிக்கமே போட்டியில் காணப்பட்டது.

போட்டி முடிவில் 41:37 என்ற புள்ளியடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது .

போட்டியின் சிறந்த ஆட்டக்காரனாக விண்மீன் அணி வீரர் சாந்தன் தெரிவு செய்யப்பட்டு பதக்கம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். (க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குற்றஞ்சாட்டப்பட்டோர்...

னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஜனாதிபதியிடம் கூறி இருக்கின்றார்.

இவர்கள் அனைவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் உடன்விசாரிக்கப்பட வேண்டும் என ஜே.வி.பியின் வட மத்திய மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாட்டில் தினமும் பேசப்படும் ஒரு விடயமாக ஊழல் மாறியுள்ளது. அதிலும், மத்திய வங்கி ஊழல்தான் நாட்டையே உலுக்கிக்கொண்டு இருக்கின்றது.

இதில் தொடர்புபட்ட ரவி கருணாநாயக்க அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். அத்தோடு இந்தப் பிரச்சினை முடியவில்லை.

இன்னும் பலர் உள்ளனர்.மத்திய வங்கி ஊழலை விசாரித்து வெளியிடப்பட்ட கோப் அறிக்கையில் ஐக்கிய தேசியக்கட்சி எம்.பிக்கள் பலர் அடிக்குறிப்பிட்டனர்.

அவர்களுக்கு அர்ஜுன அலோசியஸ் தலா இரண்டு இலட்சம் ரூபாவை இலஞ்சமாக வழங்கினார் என்ற தகவல் எமக்குக் கிடைத்துள்ளது.

அலோசியஸ் யாருக்கெல்லாம் பணம் கொடுத்தார்? யாருக்கெல்லாம் வீடுகள் வாங்கிக் கொடுத்தார்? யாருக்கெல்லாம் காணிகள் வாங்கிக் கொடுத்தார்? என்ற விவரங்களை ரவி கருணாநாயக்க ஜனாதிபதியிடம் கூறி இருக்கின்றார்.

ஆகவே இவர்கள் அனைவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் உடன் விசாரிக்கப்பட வேண்டும்.ஊழல், மோசடி விசாரணைகளுக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ நீதிமன்றங்களுக்கும் சி.ஐ.டி விசாரணைக்கும் ஏறி இறங்குகின்றார்.

அலோசியஸிடம் வீடு வாங்கியவர் ரவியின் மனைவிதான் என்று ரவியே கூறியுள்ளார். அப்படியென்றால் அவரது மனைவியும் இவ்வாறு விசாரிக்கப்பட வேண்டும்.

இன்று ரவி அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ளார். திலக் மாரப்பன அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆனால், திலக் மாரப்பன பெயரளவில் தான் வெளிவிவகார அமைச்சர். ரவிதான் மறைமுகமாக இருந்து கொண்டு அவரை இயக்குகின்றார்.

உண்மையான அமைச்சர் ரவிதான். இந்த உண்மையை நாம் விரைவில் வெளிப்படுத்துவோம் என்றார். (செ)

## மாணவனுக்கு...

அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெள்ளவாய, யெளவனகுமாரபுர பிரதேசத்தைச் சேர்ந்த, குமாரபுர வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ருஷிர கேஷான் எனும் மாணவரே இவ்வாறு பாதிக்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் மாலை வீட்டில் இருந்த குறித்த வெடிபொருளை வெடிக்கச் செய்ய முற்பட்ட போது மாணவரின் கைப்பகுதியில் காயம் ஏற்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் மருத்துவர் ஒருவர் தகவல் தெரிவித்தார்.

வீட்டில் இருந்த குறித்த வெடிபொருளை வெடிக்கச் செய்தபோது, அது மகளின் கையிலே பட்டு தவறுதலாக வெடித்ததன் காரணமாக மகளின் கை காயமடைய நேரிட்டது என்று தந்தையார் குறிப்பிட்டிருந்தார். (செ)

## இராணுவ வீரர்கள்...

ஒருவர் உட்பட 777 இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.

அதன்படி தற்போது வரை சேவையில் இருந்து தப்பிச் சென்றிருந்த 4 ஆயிரத்து 377 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், முப்படைகளையும் சேர்ந்த 5ஆயிரத்து இற்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு பிரிவின் தரவுகளுக்கு அமைய முப்படைகளையும் சேர்ந்த 36ஆயிரத்து இற்கும் அதிகமானவர்கள் பணியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும், அவர்களை கைது செய்து சட்டமுறைப்படி பணியில் இருந்து விலக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பிரிகேடியர் ரொஷான் சென விரத்ன தெரிவித்தார். ஶ்ரீ(செ)

## வீட்டில் தந்தை...

வெவ, விஹாரகல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த மகளின் தந்தை புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்ற தயாரான மகள் முதலில் தாயாரின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டுள்ளார்.

பின்னர் தந்தையின் சடலத்திற்கு அருகில் சென்று வணங்கி பரீட்சை எழுத செல்கிறேன் அப்பா என கூறிவிட்டு கண்ணீருடன் மாணவி சென்றுள்ளார்.

இந்த சம்பவத்தை நேரில் பார்த்த அனைவரும் அந்தச் சந்தர்ப்பத்தில் கண்ணீர் வடித்துள்ளதுடன் கேள்வியுற்ற பலரது நெஞ்சங்களையும் கனக்கவைத்துள்ளது.

நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 18ஆம் திகதி கராப்பிட்டிய வைத்தியசாலையில் குறித்த சிறுமியின் தந்தை உயிரிழந்துள்ளார்.

நாடு பூராகவும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## மண்சரிவு அபாய...

அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாயம், கற்பாறைகள் சரிந்து வீழ்தல், நிலச்சரிவு என்பன தொடர்பில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுமாயின் குறித்த பகுதியிலிருந்து உடனடியாக வெளியேறுமாறும் பொது மக்களுக்கு தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாளைமறுதினம் 23ஆம் திகதி, மறுநாள் 24ஆம் திகதிகளில் வரட்சி நிலவும் பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் நுவரெலியா மாவட்டத்திலேயே அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (செ)

## காலில் விழவும்...

இதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர, போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் டிலான் பெரேரா, தற்போது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலரும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவாக கருத்துத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். அதே நேரம் ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சிக்கும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

எனக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதிகள் மாத்திரமன்றி சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவியான சந்திரிகா அம்மையாரும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மட்டுமே எனக்கு ஆதரவாக இருக்கின்றார்.

எனவே சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக கருத்துத் தெரிவிப்பதை தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.


அவ்வாறான நடவடிக்கையொன்றை எடுக்குமாறு கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்கின்றேன். அதற்காக அவரது காலில் விழவும் தயாராக இருக்கின்றேன் என்றும் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (செ)

## ஜெனிவாவில் மீள...

களுக்கான விஷேட அறிக்கையாளர் பென் எமர்சன் கூட்டத் தொடர் ஆரம்பமாகும் முதல் தினத்திலேயே அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார். இதில் இலங்கை தொடர்பாகவும் அவர் குறிப்பிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு ஜூலை நடுப்பகுதியில் இலங்கை வந்திருந்த பென் எமர்சன் தனது விஜயத்தின் இறுதியில் வெளியிட்டிருக்கும் அறிக்கை இலங்கை அரசாங்கத்துக்கு கடும் அதிர்வுகளைக் கொடுத்திருக்கின்றது. இங்கு இடம்பெறும் சித்திரவதைகள் போன்றன தொடர்பில் தனது அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார். நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுடனும் அவர் முரண்பட்டிருந்தார். செப்டம்பர் 11ஆம் திகதி ஆரம்பமாகும் கூட்டத் தொடரில் அவர் வெளியிடப்போகும் அறிக்கையில் இலங்கை தொடர்பாகக் குறிப்பிடுவார் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகிறது. (செ)

# அலங்காரக் கந்தன்...



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் ஏவிளம்பி வருட மஹோற்சவப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு பக்திபூர்வமாக ஆரம்பமாகி வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

நல்லை கந்தன் மஹோற்சவப் பெருவிழா கடந்த யூலை மாதம் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்தும் 25 தினங்கள் காலை மாலை உற்சவங்களாக இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் நேற்றைய தினம் அலை கடல் என திரண்ட வரலாறு காணாத பக்தர்களின் பங்கேற்புடன் நல்லூரான் தேரேறி வலம் வந்து அடியவர்களுக்கு அருட்காட்சி வழங்கினான்.

அரோகரா கோசம் முழங்க தேரேறி வலம் வந்த நல்லூர் அலங்கார கந்தனை அடியவர்கள் பூரண கும்பம் வைத்து மாவிலை தோரணம் கட்டி வரவேற்றனர். பல நூற்றுக் கணக்கான அடியவர்கள் காவடி எடுத்தும், அங்கபிரதட்சணை செய்தும், கர்ப்பூர சட்டி ஏந்தியும் தமது நேர்த்தி கடன்களை நிறைவேற்றினர். நாட்டில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவி வரும் நிலையில் இவ்வருட நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழாவில் கடந்த வருடங்களை விட அதிகளவு பக்தர்கள் கலந்து கொண்டிருந்ததை அவதானிக்கத் தக்கதாக இருந்தது.

தேரேறி வந்த முருகனே எங்கள் துயர் தீர்த்தருள் என பக்தர்கள் கண்ணீர் மல்க மனமுருகி வழிபட்டதனையும் அங்கு காண முடிந்தது. முருக பெருமான் தேரேறும் வேளையில் பக்தர்களின் அரோகரா கோசம் வான் அதிர்வது போன்று பரவலாக எதிரொலித்தது. இன்றைய தினம் தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ள நிலையில், தீர்த்தக் கேணியில் சமய ஒழுங்கு முறைகளை கடைப் பிடிக்குமாறு யாழ்.மாநகர சபை கோரியுள்ளது.

தீர்த்தோற்சவ நாளான இன்று தூக்குக் காவடி அல்லது பறவைக்காவடி எடுத்து நேர்த்திக்கடன் நிறைவேற்ற விரும்பும் அடியார்களுக்கு யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் முக்கிய வேண்டு கோளொன்றை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது,

இம்முறை நல்லூர் கோவில் வடக்கு வீதியூடாக (சங்கிலியன் வீதியூடாக கோவில் வீதி வடக்குப் பக்கமாக) துர்க்காமணி மண்டபத்தை அடைந்து வடக்கு வீதியில் குபேர கோபுர வாசலை அடைந்து அங்கு நேர்த்தியை முடிவுறுத்தவும். பின்னர் தூக்குக்காவடி அல்லது பறவைக்காவடியுடன் வந்த வாகனம் நல்லூர் தெற்கு வீதியூடாக (கைலாச பிள்ளையார் கோவிலடிப் பக்கம்) வெளியேறவும்.

அத்துடன் சுவாமி வெளிவீதி உலா வந்து இருப்பிடத்தை அடையும் வரையிலான குறித்த நேரத்தைக் கருத்திற்கொண்டு தூக்குக் காவடி அல்லது பறவைக்காவடி எடுத்து நேர்த்தி செய்யும் அடியார்கள் ஆலய வீதிக்குப் பிரவேசிக்குமாறும் கோவில் நிர்வாகத்தினர் கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-4)

## யாழ்.பல்கலை...

விஞ்ஞான பீட இரண்டாம் வருடத்தில் கல்விகற்கும் மாணவனுமான விஜயரட்ணம் லிந்துயன் (வயது 23) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவன் கோண்டாவில் பகுதியில் உள்ள வீட்டில் நண்பர்களுடன் வாடகைக்கு தங்கியிருந்து பல்கலையில் கல்வி கற்று வருகிறார். கடந்த 18ஆம் திகதி இரவு காய்ச்சல் இருப்பதாக தெரிவித்து பனடோல் 2 குடித்து விட்டு நித்திரைக்கு சென்றுள்ளார்.

பின்னர் மறுநாள் 19ஆம் திகதி மாலை காயச்சல் மீண்டும் தொடர்ந்துள்ளது. அப்போது கோண்டாவிலில் உள்ள தனியார் மருத்துவமனையில் சில மாத்திரைகளை எடுத்துள்ளார். எனினும் காலையில் ஒவ்வாமையால் வாந்தி எடுத்துள்ளார்.

பின்பு நேற்றைய தினம் காலையும் தொடர்ச்சியான வாந்தியின் பின்னர் காலை7.30 மணியளவில் மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்த்த வேளை அவரை பரிசோதித்த வைத்தியர் குறித்த மாணவன் உயிரிழந்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப மாணவனுக்கு ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக இருதயத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டு மாரடைப்பினால் உயிரிழந்துள்ளார் என பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மாணவனின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்திய சாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டதுடன் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதேவேளை உயிரிழந்த மாணவனின் சகோதரியும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வாகன விபத்து ஒன்றில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## அமைச்சர்...

தமிழ ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) அமைப்பினுடைய தலைமை குழுக்கூட்டம் நேற்று மாலை 2.30 மணியிலிருந்து இரவு 10 மணி வரை வவுனியாவில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வட மாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரனுடைய வட மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிராக செயற்பாடுகள் தொடர்பாகவும் வேறு அரசியல்நிலைமைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அதன்பின் நேற்று இரவு 10.00 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில கட்சியினுடைய செயலாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சிறீகாந்தா தெரிவிக்கையில்,

வட மாகாண போக்குவரத்து அமைச்சர் ப.டெனீஸ்வரனை கட்சியினுடைய அடிப்படை உறுப்புரிமையில் இருந்து 6 மாதத்திற்கு இடை நிறுத்துவதாகவும் 6 மாதத்திற்கு பின்னர் மீண்டும் அவருடைய பிரச்சினை தொடர்பாக கூடி முடிவு எடுக்கலாம். அதே நேரம் யாரை அமைச்சராக நியமிப்பது தொடர்பாக விரைவில் இறுதி முடிவு அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (செ-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான டொச் வகுப்புக்கள் இங்கு நடைபெறுகின்றது.

மற்றும் இத்தாலி செல்வதற்கான பாட நெறிகளும் கற்பிக்கப்படும்.

ஆரிய குளம் சந்தி (புத்த விகாரைக்கு எதிரில் 2ம் மாடி), யாழ்ப்பாணம்.

T.P : 077 970 7322 (173)

## எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (9447)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571

## அவசர கலந்துரையாடல்

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை (SLTES) -||| இற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த, தொழில் சார் பாடங்களுக்கு விண்ணப்பித்து முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இரண்டாவது நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படாது பாதிக்கப்பட்டவர்களின் வழக்குத் தாக்கல் தொடர்பான கலந்துரையாடல் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் அவர்களுடன் நடைபெறவுள்ளது.

காலம் :- 22-08-2017 செவ்வாய் மு.ப 9.00 மணி
இடம் :- "எடிசன் அக்கடமி" (யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக)

பாதிக்கப்பட்ட அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-9391)

T.P : 077 3145655, 0779232333 ஏற்பாட்டாளர்கள்

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9338)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS- 0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org (185)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்


# 6ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில் 01 - 06 - 1952

விண்ணில் 26 - 02 - 2017

## அமரர் சின்னத்துரை இராஜேஸ்வரி

(இராஜேஸ் ஸ்ரோர்ஸ், கொடிகாமம்)

பருத்தித்துறை வீதி, குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி சின்னத்துரை இராஜேஸ்வரி 26.02.2017 அன்று இறைபதம் அடைந்த செய்திகேட்டு மரணச்சடங்கில் கலந்து ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி ஊடாக அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (21.08.2017) திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்


பருத்தித்துறை வீதி,
குடமியன், வரணி. (C-9380)

தகவல்: குடும்பத்தினர்
077 322 3033

# மரண அறிவித்தல்

## அமரர் இளையதம்பி இரத்தினசிங்கம்

(ஓய்வு நிலை முகாமையாளர் ப.நோ. கூ.சங்கம், புதுக்குடியிருப்பு)



முதலாம் வட்டாரம், புதுக்குடியிருப்பை வதிவிடமாகக் கொண்ட இளையதம்பி இரத்தினசிங்கம் 20.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.08.2017 செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. (C-9390)

தகவல் : மருமகன் -
தெ.கெங்காதரன் - சட்டவாளர்

# கண்ணீர் அஞ்சலி

அமரர் திருமதி குணராஜா பரமேஸ்வரி

பிறப்பு : 25.01.1941 இறப்பு : 19.08.2017



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி அம்பிகைபாலன் வசுந்திரா தேவியின் அன்புத் தாயார் அமரர் திருமதி குணராஜா பரமேஸ்வரி அவர்கள் (19.08.2017) சனிக்கிழமையன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/பெரியபுலம் ம.வி.
பாடசாலைச் சமூகம் (189)


## IMMEDIATE VACANCY

Point of Sale System இனை நாடு முழுவதும் விநியோகிக்கும் Kale Systems (Pvt) Ltd பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

## Sales Executive

உங்கள் சுயவிபரக் கோவையினை எதிர்வரும் 30.08.2017 இற்கு முன்னதாக sales@kalesystems.com என்ற E-mail முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Kale Systems (Pvt) Ltd,
021 221 5569 / 076 76 76 014
No. 320A 1/2, Main Street, Jaffna. (175)

## வீடு வாடகைக்கு தேவை

சுன்னாகம் நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு :
077 911 2953 (186)

## V2 TRAVELS

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION FOR FOREIGN PASSPORT (வீசா எக்ஸ்ரென்சன்) (C-9334)

0768227499

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org